ஆகஸ்ட் 1974

ரூ.1

# திருக்கோயில்



OFFICE OF THE STATE EDITOR
72/GU/74
17 AUG 1974
GAZETTEER UNIT, MADRAS-8



# அருள்மிகு
# சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
# திருத்தணி

**செங்கை மாவட்டம், தமிழ்நாடு.**

தொலைபேசி : { அலுவலகம் : 25 — மலைக்கோயில் : 43; மலைப்பாதை : 96 — தங்கும் விடுதி : 87

திருமுருகன் உறையுஞ் சிறப்புத் தலங்கள் ஆறுபடை வீடுகளில் ஐந்தாவது படைவீடு திருத்தணிகை. இத்தலம் நக்கீரர், அருணகிரிநாதர், அருட்பிரகாச இராமலிங்க அடிகளார், முத்துசாமி தீட்சிதர் போன்ற பெருமக்களால் பாடல் பெற்றதாகும்.

''நினைத்ததை அளித்திடும், மனத்தினை உருக்கிடும் வழித்துணை வந்திடும்
திருத்தணி முருகனின் இன்னருள் பெற்றிட வாரீர்! வாரீர்!!''

இத்தலம் சென்னை—பம்பாய் இருப்புப் பாதையில் அரக்கோணம் சந்திப்பில் இருந்து வடக்கே 14 கி.மீ.; சென்னை—திருப்பதிப் பாதையில் 84 கி.மீ.; திருப்பதியிலிருந்து தெற்கே 54 கி.மீ. ; காஞ்சிபுரத்திலிருந்து வடக்கே 36 கி.மீ.

**தரிசனம் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை**

| | | | |
|---|---|---|---|
| விசுவரூப தரிசனம் | காலை 6 மணி | சாயரட்சை | மாலை 5 மணி |
| காலை சந்தி அபிஷேகம் | காலை 8 மணி | அர்த்தசாமம் பூசை | இரவு 8 மணி |
| உச்சிக்காலம் | காலை 10 மணி | | |

**விழாக் காலங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ வள்ளித் திருமணப் பெருவிழா | ... பிப்ரவரி, மார்ச்சு |
| 2. | சிவராத்திரி 1008 சங்காபிஷேகம் | ... மார்ச்சு |
| 3. | ஸ்ரீ தெய்வானைப் பெருமண விழா | ... ஏப்ரல், மே. |
| 4. | ஆடிக் கிருத்திகைத் தெப்பப் பெருவிழா | ... ஜுலை, ஆகஸ்டு. |
| 5. | சஷ்டிப் பெருவிழா | ... அக்டோபர், நவம்பர். |
| 6. | திருப்புகழ்த் திருப்படி விழா | ... டிசம்பர். |

**வேண்டுதல்**

பாதி நன்கொடைத் திட்டத்தின் கீழ்க் குடியிருப்பு இல்லங்கள் கட்டிக்கொடுக்க விரும்புவோர் ரூ. 10,000 செலுத்த வேண்டுகிறோம்.

தணிகை முருகனுக்குத் தங்கத் தேர்ப் பணி 6 மாத காலமாக நடைபெற்று வருகிறது. பக்தர்கள் தங்கள் காணிக்கையைத் தங்கத் தேருக்குத் தங்கமாகவும், பிற பொருளாகவும் திருத் தணிக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

---

95 அறைகளும், 28 குடியிருப்பு இல்லங்களும் யாத்ரீகர்கள் தங்குவதற்கும் பணிச் செலவுக்கும் விடப்படுகிறது.

---

**1974-ஆம் ஆண்டுக் கிருத்திகை நாட்கள்**

15—7—1974
11—8—1974 ஆடிக் கிருத்திகைத் தெப்பப் பெருவிழா
12—8—1974 ஆடிக் கிருத்திகை 2-ஆம் தெப்பப் பெருவிழா
13—8—1974 ஆடிக் கிருத்திகை 3-ஆம் தெப்பப் பெருவிழா
7—9—1974, 5—10—1974, 1—11—1974, 28—11—1974, 26—12—1974.

திரு. புலவர் மி. ச. நடேசன்,
அறங்காவலர் குழுத் தலைவர்.

திரு. கலவை. அ. கோபாலகிருஷ்ணன்,
அறங்காவலர்.

திரு. கே. சிதம்பரம், பி.ஏ.,
நிர்வாக அலுவலர்.

திரு. வி. எம். துரைசாமி ரெட்டி,
அறங்காவலர்.

# திருக்கோயில்

மாலை 16 ஆனந்த–ஆடி, ஆகஸ்டு 74 மணி 11


OFFICE OF THE STATE EDITOR GAZETTEER UNIT MADRAS 17 AUG 1974

முகப்பு :

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் கோபுரத் தோற்றம்.

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

* 'திருக்கோயில்' திங்கள் இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விருப்பமுள்ளவர்கள் ''திரு. ஆணையர், அறநிலைய் ஆட்சித் துறை, சென்னை-600034'' என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

* அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

* இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

* எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 10/- தனி இதழ் ரூ. 1/-


ஆசிரியர்: ந.ரா. முருகவேள் M.A., M.O.L.

துணை ஆசிரியர்: கே.எஸ். ஜெகன்னாதன்


## பொருளடக்கம்


1. என்னைக் கவர்ந்த கல்வெட்டு (முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர்)
2. வாழ்த்துவது ஏன்? (திருமுருக கிருபானந்தவாரியார்)
3. அருட்சக்தியின் அற்புதம் (கவியோகி சுத்தானந்த பாரதியார்)
4. சேக்கிழார் கண்ட திருநாவுக்கரசர் (தவத்திரு குன்றக்குடி அடிகளார்)
5. எறும்பும் குறும்பும் (கி. வா. ஜகந்நாதன்)
6. எழிலுடை இருசுடர்த் தோற்றம் (டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்)
7. இராஜராஜனின் தேவி எடுத்த கோயில் (இரா. நாகசாமி எம்.ஏ.)
8. திருவாசகத்தேன் (திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம்)
9. கொங்கு நாட்டில் வருணதேவன் வழிபாடு (மா. சுந்தரமூர்த்தி எம்.ஏ.)
10. தூய்மை (பேரூர் தவத்திரு இராமசாமி அடிகள்)
11. அம்பிகையின் அழகு வெள்ளம்
12. திருநீலகண்டம் (ந.ரா. முருகவேள் எம்.ஏ., எம்.ஓ.எல்.)
13. அல்லல் அறுபதிகம் (மா. கோபாலன் பி.ஏ.)
14. முத்தகம், குளகம், காவியம், சித்திரம் (ந.ரா. முருகவேள் எம்.ஏ., எம்.ஓ.எல்.)
15. குறள் கூறும் நன்னெறி (கே.எஸ். ஜெகன்னாதன்)
16. மீனாட்சி சுந்தரேசுவரர் (ந.ரா. முருகவேள் எம்.ஏ., எம்.ஓ.எல்.)
17. மயிலைக் கபாலீசுவரர் கோயில் (பி.வி.ஜி.)
18. மதுரைக் கோயில் திருக் குடமுழுக்கு விழா


"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

# என்னைக் கவர்ந்த கல்வெட்டு

செங்கத்தில் உள்ள சிலையின் படமொன்றை இங்கே காணலாம். அச்சிலை என்னை மிகவும் கவர்ந்தது. வீரனொருவன் நிற்கின்றான். அவன் பின்னால் ஒரு நாய் நிற்கிறது. இதுதான் அந்தச் சிலையின் அமைப்பு. பல்லவர்களிலே பெரும் புகழ்பெற்ற மன்னன் மகேந்திரவர்மன் காலத்தியது அது. எருமைப் பண்ணையின் காவலன் அவன். அவனைக் கள்ளர்கள் வீழ்த்திவிடுகிறார்கள். வீரனுக்குத் துணையாக நின்ற நாய் அந்த அடிபட்ட வீரன்விழுந்து கிடந்த இடத்திலேயே, அவனை அடித்து வீழ்த்திய கள்ளர்களோடு போரிட்டு அந்தக் கள்ளர்களை வீழ்த்தி வெற்றி கண்டது. இதைக் கல்வெட்டாக ஆக்கியிருக்கின்றார்கள். இன்றைக்குச் சிலை வைத்து, சிலைக்குக் கீழே யார் தலைவர், யார் திறப்பாளர் என்று எழுதினால்கூடக் கோபித்துக் கொள்ளுகின்ற புண்ணியவான்கள் எல்லாம் நாட்டிலே இருக்கின்றார்கள். அன்றைக்கு ஒரு நாய் இரண்டு பேரை அடித்துக் கடித்துக் கொன்றது. அதற்கு ஒரு கல்வெட்டு எடுத்தான். நன்றி மறவாதது நாய் மாத்திரமல்ல. அந்தக் காலத்துத் தமிழனும் நன்றி மறவாதவனாக இருந்தான் என்பதைக் காட்டிக் கொண்டான் அந்தக் கல்வெட்டின் மூலமாக எவ்வளவு அழகான கல்வெட்டு.

''கோவிசைய மயீந்திர பருமற்கு''

அவர்கள் மகேந்திரவர்மன் என்று எழுதினார்களோ அல்லது மகீந்திரவர்மன் என்று எழுதினார்களோ, கல்வெட்டிலே இருப்பது

''கோவிசைய மயீந்திர பருமற்கு முப்பத்து நான்காவது; வாணகோ அரைசரு மருமக்கள் பொற்றொக்கையார் இளமகன் கருந்தேவக் கத்தி''.

காவல் காத்த அந்த வீரனுடைய பெயர் கருந்தேவக்கத்தி என்பதாகும். மகேந்திரவர்மனுடைய காலத்தில், 34-வது ஆண்டில், வாணகோ என்கின்ற அரசருடைய மருமக்களான பொற்றொக்கையாருடைய இளமகன் கருந்தேவக்கத்தி.

''தன் எருமைப் புறத்தே வாடிபட்டான் கல்''

எருமைகளைக் காப்பாற்றுகின்ற அந்தக் காவல் கூடத்தில் அவன் கொல்லப்பட்டான். அந்த இடத்தில் ''கோவிவன் என்னும் நாய்'' நாயினுடைய பெயரே கோவிவன். இப்பொழுது ஏதேதோ பெயர்கள் வைக்கிறோமே, ஆங்கிலப் பெயர்களை நாடி-அப்பொழுது.

''கோவிவன் என்னும் நாய் இரு கள்ளரைக் கடித்துக் காத்திருந்தவாறு''..

இப்படி அந்தக் கல்வெட்டிலே எழுதப்பட்டுள்ள ஒரு நாயினுடைய வீரச்செயல்; அதற்கு முந்தித் தான் எடுத்துக் கொண்ட பொறுப்பைக் கடமையுணர்வோடு செய்து, அங்கே கொல்லப்பட்ட ஒரு வீரனுடைய வாழ்க்கையை இந்தக் கல்வெட்டிலே அன்றைக்குக் காண்பித்திருக்கிறார்கள் என்றால் இது நம்முடைய பழங்கால மன்னர்களால், பழங்காலத் தமிழர்களால், தமிழ் நாட்டு மக்களால் எவ்வளவு போற்றப்பட்டிருக்கிறது என்பதனை நாம் அறிந்து கொள்ள முடியும்.

158595



தமிழக முதல்வர்

**மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்**

# வாழ்த்துவது ஏன்?

திருமுருக கிருபானந்த வாரியார்

ஒருநாள் கூட்டு வழிபாட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கு அன்புடைய அடியார்கள் இனிமையாகத் தமிழ்ப் பாடல்களைப் பாடினார்கள். செவி படைத்ததன் பயன் அவற்றைக் கேட்பதுதானே. அருமையான அநுபவம் நிறைந்த பக்திப் பாடல்களைக் கேட்கும்போது உள்ளம் உருகியது; கண்ணீர் பெருகியது! ஆ! ஆ! என்ன இன்பம்? உலகையே மறந்து உணர்ச்சி மயமாக இருந்தது, அவியின்பத்தினும் உயர்ந்த கவியின்பத்தைப் பெற்றுச் செவியின்பத்தைத் துய்த்தேன். முடிவில் அடியார்கள் பாடிய பாடல்:

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீரடியா ரெல்லாம்

இதனைக் கேட்டுத் திரும்பினேன். மனம் ஆராய்ச்சி உலகிற்குச் சென்றது. பெரியவர்கள் சிறியவர்களைப் பார்த்து அப்பா! நீ நன்றாக இரு என்றும், மகராசனாக வாழ் என்றும், பெண் குழந்தையாயின் தீர்க்க சுமங்கலியாக இரு என்றும் வாழ்த்துவார்கள். இதுதான் முறை. சிறியவர்கள் பெரியவர்களைப் பார்த்து, நீர் நெடுங்காலம் வாழ்க என்று வாழ்த்துவது முறையாகாது. சிறியவர்கள் பெரியவர்களை வணங்குவார்கள். பெரியவர்கள் சிறியவர்களை வாழ்த்துவார்கள்.

எனவே வணக்கம் கூறுவது சிறியவர்க்கும், வாழ்த்துக் கூறுவது பெரியவர்க்கும் உரிய செயல்கள். இந்த நியாயத்தின்படி பார்த்தால் ஆண்டவன் தானே எல்லோர்க்கும் பெரியவன். 'அகிலாண்டகோடிப் பிரமாண்ட நாயகன்'. இறைவனை அப்பரடிகள் குறிப்பிடுகின்றபோது ''கனைகடலைக் குலவரையைக் கடந்து நின்ற பெரியானை'' என்கின்றார்.

''தீர தீர தீராதி தீரப் பெரியோனே
தேவ தேவ தேவாதி தேவப் பெருமாளே''

என்கின்றார் அருணகிரிநாதர்.

ஆன்மாக்களாகிய நாம் சிற்றறிவும் சிறு தொழிலும் துன்பமயமும் படைத்தவர்கள். இறைவன் பேரறிவும் பேராற்றலும் இன்பமயமும் படைத்தவன். இன்றிருந்து நாளை மறைகின்ற நாம் ''ஆண்டவனே நீ வாழ்க என்று கூறுவது பொருந்துமா? எல்லா நூல்களிலும் கடவுள் வாழ்த்து வருகின்றதே? ஒருமுகம் படைத்த நாமா ஆறுமுகத்தை வாழ்த்துவது? இருதோள்களையுடைய நாமா பன்னிரு தோள்களை வாழ்த்துவது? அமங்களமுடைய நாம் இறைவனுக்கு நித்திய சய மங்களம் கூறுவது நியாயமா? நெடுங்காலமாக ஆன்றோர்கள் இப்படிக் கூறி வந்தார்களே? ஆன்றோர் மரபு இது! பெரியவர்களின் மரபு பிழையாக இராதே? இதற்குத் தக்கதொரு நியாயம் இருக்கவேண்டுமே?'' என்று சிந்தித்தேன்.

கடவுள் எங்கிருக்கின்றார். அறிவுக்கு அறிவாக இருக்கின்றார். தாயுமானார் கூறுகின்றார்.

''சத்தாகியென் சித்தமிசை குடிகொண்ட
அறிவான தெய்வமே''

''கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ,'' என்கின்றார் அருணையடிகள். 'அறிவில் ஊறும் ஆனந்தமயமான ஆண்டவனே' என்று அவன் அடிமலரை ஊன்றி உன்னினேன். உடனே அங்கிருந்து விடை கிடைத்தது. ஆன்மாக்களாகிய நாம் உலகிலே இனிதுவாழ வேண்டுமானால், உலகிலுள்ள பொருள்கள்யாவும் வாழ வேண்டும். ''நீரின்றி அமையாது உலகம்'' என்கின்றார் வள்ளுவர். மழையின்றி நீரில்லை. மேகமின்றி மழையில்லை. கடல் இல்லையானால் மேகம் இருந்து என்ன பயன்? நெருப்பின்றியும் உயிர்கள் வாழமாட்டா. காற்றில்லையானால் உயிர் வாழ்க்கை ஏது? நாம் வாழ வேண்டுமானால் அநேக பொருள்கள் வாழ வேண்டும். நீர் வாழ வேண்டும். நிலம் வாழ வேண்டும். புனல் வாழவேண்டும்; கனல் வாழவேண்டும். காற்று வாழவேண்டும்; தனம் தான்யம், ஆடு, மாடு, வீடு, நாடு, நகர், சோலை, மரம், செடி, கொடி எல்லாம் வாழவேண்டும்.

தனித்தனியே இவைகளுக்கெல்லாம் வாழ்த்துச் சொல்ல வேண்டும். அங்ஙனம் வாழ்த்துவது அறிவுடைமையாகாது. நேரமும் வீணாகும். உலகிலே சுருங்கச் சொல்லுகின்றவன் அறிஞன். சுருக்கமாகிய நூல்களுக்குப் பெருமை அதிகம். வடமொழியிலே சுருக்கமாக அமைந்த நூல் 'பிரம சூத்திரம்'. தென்மொழியிலே சுருக்கமான நூல்கள் திருக்குறளும், சிவஞான போதமும் ஆகும். ஐம்பது வார்த்தைகளைச் சொல்லி விளக்குவதைக் காட்டிலும்,

ஐந்து வார்த்தைகளால் விளக்குபவனே அறிஞன். ஆகவே நமது முன்னோர்கள் அறிவின் சிகரமானவர்கள். எதனை எப்படிச் செய்ய வேண்டும் என்று நன்கு உணர்ந்தவர்கள். இரண்டு முத்துமாலைகள். ஒவ்வொரு மாலையிலும் ஆயிரம் ஆயிரம் முத்துக்கள் இருக்கின்றன. முத்துக்கள் அசைவதால் ஒளிவிடும். அழகாக இருக்கும் என்று கருதிய ஒருவன் மாலையிடம் போய் ஒவ்வொரு முத்தாக அசைத்துக் கொண்டிருந்தான்.

மற்றொருவன் முத்துக்களின் ஊடேயுள்ள நூலைப் பிடித்து அசைத்தான். எல்லா முத்துக்களிலும் ஊடுருவியுள்ள நூலை அசைத்தவுடனே முத்துக்கள் எல்லாம் அசையலாயின. இந்த இருவரில் யார் அறிஞன்? என்று சிந்தியுங்கள். ஒவ்வொரு முத்தாக அசைத்து நேரத்தை வீணாக்கியவனைக் காட்டிலும் எல்லா முத்துக்களிலும் நுழைந்துள்ள நூலை அசைத்து வேலையைச் சுருக்கமாகச் செய்தவனே புத்திசாலி.

கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தவர். அவர் பொன்னிலும், பொருளிலும், அணுவிலும், மலையிலும், கனலிலும், புனலிலும், வெளியிலும், வளியிலும், உள்ளும் புறமும், இங்கும், அங்கும் எங்கும் ஊடுருவியிருக்கின்றார்.

ஒரு மன்னன் சபையில் ஒரு மாம்பழத்தைக் கையில் வைத்துக்கொண்டு, ''கடவுள் இருக்கும் இடத்தைக் காட்டினவனுக்கு இந்த மாம்பழத்தைத் தருவேன்'' என்றார். அங்கிருந்தவர்கள் கைலாயத்தைச் சொல்லலாமா? வைகுண்டத்தைக் கூறலாமா? சூரிய மண்டலம், வேதஇருதயம் என்று இப்படியெல்லாம் சிந்தித்து இறைவன் இருக்குமிடம் என்று, எதனைக் கூறலாம் என்று ஆராய்ந்தார்கள். அங்கே ஒரு பெண்குழந்தை எழுந்து மன்னவனைப் பார்த்து, ''அரசே! கடவுள் இருக்கும் இடத்தைக் காட்டினால் ஒரு மாம்பழத்தைத் தருகிறேன் என்றீரே? கடவுள் இல்லாத இடத்தை நீர் காட்டும். உமக்குப் பன்னிரண்டு மாம்பழங்களைத் தருகின்றேன்'' என்று கூறிற்று. உடனே சபையில் கரகோஷம் எழுந்தது. ஆண்டவன் எங்கே இல்லை? எங்கும் நிறைந்திருக்கின்றார். எல்லாவற்றிலும் ஊடுருவியுள்ள இறைவனை வாழ்த்திவிட்டால் எல்லாம் வாழும்.


நம்பிக்கைக்கும் நாகரீகமான

பொன், வெள்ளி நகைகளுக்கும்

உத்திரவாதமான இடம்.

"உம்மிடி பங்காரு செட்டி சன்ஸ்"

28, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, மதராஸ்-600001.

கிளை : 3, நாகேஷ்வரராவ் ரோடு, மதராஸ்-600017.

# அருட் சக்தியின் அற்புதம்

கவியோகி சுத்தானந்த பாரதியார்

கற்பனை கடந்த பரஞ்சோதிப் பெருமான். கருணையே உருவமாகி, தனது அருட்சக்தியால் அற்புதங்கள் செய்கிறான். பொன்னிளங்காலை புலர்கிறது ; வான்மீன்கள் கூட்டம் கூட்டமாக மிளிர்ந்து அந்தப் பொன்னழகில் கலந்துபோகின்றன; மெல்லிய மந்தமாருதம் நம்மை எழுப்புகிறது. ''பார் என் அற்புதத்தை'' என்று விரிந்த வானில் சூரியன் எழுகிறது. தங்கப் பந்துபோல் எழும் கதிரவன், கதிர்களை விரித்து உலகச் சிற்பியாக விளங்குகிறான். உயிரினம் கண் விழித்தெழுந்து, சுற்றிலும் இயற்கையெழிலைக் காண்கிறது. இரவின் இருள் இல்லை; நட்சத்திர மினுக்கில்லை; எங்கும் பசும் பொன் இயற்கை! மலைத் தொடர்கள் சிவலிங்கம் போல நிவந்து நிற்கின்றன. அதிலிருந்து ''ஓம்'' என்று அருவி பாய்கிறது. உயிர்களையும் பயிர்களையும் ஊட்டிக் கொண்டே சலசலத்தோடிக் கடலைக் கடந்து கடலாகிறது. இந்த அற்புதத்தை வேறு யாரும் செய்ய முடியாது. இரவின் விண் மலர்களைக் கண்ட கண்கள் பகலில் மண் மலர்களைக் காண்கிறது. அம் மலர்கள் தென்றல் கொஞ்ச மணம் பரவி வண்டுகளுக்குத் தேன் விருந்தளித்து மண்மகளுக்கு அருச்சனையாகின்றன. இதைத் தாயுமானார் பார்க்கின்றார். பூசைக்கு மலர் பறிக்கக் கை நீட்டுகிறார். கை கூசுகிறது ; மனம் திகைக்கிறது. ஏன்?

''பார்க்கின்ற மலரூடும் நீயே இருத்தி—அப்
பனிமலர் பறிக்க மனமும் நண்ணேன்''

தேன்மலரில் சிவம் புன்னகைக்கிறது; அதை வணங்கக் கையெடுக்கிறார். கை நாணுகிறது. ஏன் அப்பனி மலரிலும் சிவமே ;

''இருகைதான் குவிக்கஎனில் நாணும்
என் உளம் நிற்றிநீ
நான் கும்பிடும்போது அரைக்கும்பிடு ஆதலால்
நான் பூசைசெய்யல் முறையோ?''

இந்த இயற்கைச் சிவமயக் காட்சியை அப்பர் காண்கிறார். ''உயிராவணம் இருந்து உற்று'' நோக்குகிறார். கண்ணாற் கண்டதைக் கருத்தில் எழுதுகிறார். ''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்'' என்கிறார். மாணிக்கவாசகர் அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம் காண்கிறார். கண் கண்டது கருத்தில் நடமாடுகிறது.

''நமச்சிவாய வாழ்க! இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்று வாழ்த்தெடுக்கிறார். அப்பர், உலகில் இறைவன் காட்சியை மறப்பதில்லை. ''ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே; உலகிற்கு ஒருவனாய் நின்றாய் நீயே'' என்று வியக்கிறார். எல்லாம் ஆகிய இறைவன் முன், நாமெல்லாம் தூசியிலும் தூசி! எந்த நிலையிலும் அவனை மறவாதிருத்தலே மானிடக் கடமை. அப்பர் திருவதிகை வீரட்டானத்திற் பாடிய பாட்டு ஒவ்வொருவர் உள்ளத்திலும் பதிய வேண்டும்.

''சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்,
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்;
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்;
உன்நாமம் என் நாவில் மறந்தறியேன்''

என்று நான்கு மறவா விரதம் பூண்கிறார் அப்பர். இறைவன் ஒருவனே வணக்கத்திற்கு உரியவன். அவன் ஒருவனே அன்பரை அறிந்து அருள் புரிய வல்லவன். அங்கும் இங்கும் அலைந்தலைந்து மாந்தர் மனம் வீண் ஏமாற்றம் அடைகிறது. நாம் தேடும் இன்பம் இதோ இதயத்தில் உள்ளது. சிவமே இன்பம். அது சீவனில் உள்ளது. திருமூலர் தெளிவாகச் சொல்லுகிறார் : ''வானுக்குள் ஈசனைத் தேடும் மாந்தர்காள், தேனுக்குள் தித்திப்பைப் போல ஊனுக்குள் இறைவன் உள்ளான்; உணர்ந்து அறியுங்கள் ... கண்டகண்ட இடத்தில் கண்கெட்டு அலைய வேண்டாம்''.

''அதுஇது என்னும் அவாவினை நீக்கித்
துதியது செய்து, அழியுற நோக்கில்
விதியது தன்னையும் வென்றிடல் ஆகும்
மதிமலராள் சொன்ன மண்டலம் மூன்றே''

''அதுவானால் அதுஆவார் அதுவே சொல்லும்''. என்றார் தாயுமானார். மதிமண்டலத்தின் மேலே, உன்மினி சமனிக்கப்பால், ஆயிரம் இதழ்த் தாமரை உள்ளது. அதில் மூலகுண்டலி சிவக் கலப்பெய்தி மகாகுண்டலியான சுத்த சீவசக்தியினால் அமரானந்தத் தேன் பொழியும். அந்தத் தேனை மகாதுரிய சமாதியிற் பருகினால், விதியையும் வென்று வீறுபெற்று விளங்கலாம். சுத்த சிவசக்தியே முத்திக்கு நாயகி. அந்தச் சக்தியைக் கூடுதலே பத்தி, புத்தி, சுத்தி, முத்தி எல்லாம் :

''சக்தியென் பாளொரு சாதகப் பெண்பிள்ளை
முக்திக்கு நாயகி என்பது அறிகிலர்''

உள்ளே மகாகுண்டலியாக விளங்கும் சுத்த சக்தியைத் தியான சமாதியில் அடைந்து சுகம் பெறலாம். இதையறியாமல் காமவெறியர் உயிர்க்கும் தோற் பாவைகளைக் கூடி விந்தை யிழந்து, மேகம் படர்ந்து, இரத்தங் கொதித்து நோய்ப் பிண்டங்களாகிச் சாகின்றனர். இவர்கள் தாமும் தவறி நடந்து, பிறரையும் பாழில் வீழ்த்தி, ஆணவ வெறி பிடித்துப் பிறரையும் தப்பு வழியில் நடத்திப் பாபம் சுமக்கின்றனர். ''அவர் பேச்சு நாயின் குலைப்பு'' என்று திருமூலர் தெளிவாகச் சூடு கொடுக்கிறார் :

''பத்தியைப் பாழில் உகுத்தஅப் பாவிகள்
கத்திய நாய்போற் கதறுகின் றாரே''

சுத்த சிவ சக்தியை உள்ளே வைத்துச் சமாதி நிலை பெறும் வழியைத் திருமூலர் தெளிவாகச் சொல்லுகிறார்.

''சிந்தையில் வைத்துச் சிராதியிலே வைத்து
முந்தையில் வைத்துத்தம் மூலத்திலே வைத்து
நிந்தையில் வையா நினைவதிலே வைத்துச்
சந்தியில் வைத்துச் சமாதி செய்வீரே''

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிச் சுத்த சிவ சக்தியை வழிபடுக. அதற்கு ஒரு வழி அகம் பாவத்தை அடியோடு அழித்தல். தற்போதத்தை ஒழித்தல்.

''எனது எனது என்னல் இடராகும்; என்றும்
அவனது என்ன அருள்''

''என்னது யான் என்னலற்றோர்
எங்கிருந்து பார்க்கினும் உன்
சன்னதியாம்; நீபெரிய சாமி பராபரமே
—தாயுமானவர்

அடுத்தது காமவாசனையைக் கட்டுடன் ஒழித்தல்; பெண்களைப் பராசக்தி என மதித்தல்; தன்னுள் கனலும்மூலகுண்டலியையே பெண்ணுக்கருதி, அந்தர்பிராணாயாமத்தால் அதைவிழிப்புறுத்தி, மேலேற்ற வேண்டும். பிறகு பிராண தாரணையால் ஆஞ்ஞா சக்கரத்தில் இருத்திப் பயில வேண்டும். அதன் பிறகு இதயத்திற்கும் உச்சிக்கும் ஓடும் நுண்ணிய அமுத நாடி வழியாக உச்சிக் கமலத்தில் ஏற்ற வேண்டும். அங்கே சக்தி, சுத்த சிவனுடன் கூடிச் சுத்த சக்தியான மகாகுண்டலியாகிப் பொலியும். இது கைகூடினால் நாதவிந்து கலா தீதமாகச் சிவ சக்தி எப்போதும் நடம் புரிதலை உணரலாம். இந்த அனுபவம் எனக்கு மீனாட்சியம்மை அருளால், ஏழு வயதில் உண்டானது. இன்னும் அந்தத் திருவடி நடனம் உச்சியில் நடந்து கொண்டேயிருக்கிறது. அரவிந்தர் இதை அறிந்து வியந்தார். இந்த ரகசியத்தைத் திருமூலரிலே கண்டேன்.

பாகம் பராசக்தி பைம்பொன் சடைமுடி
ஏகம் இருதயம்; ஈரைந்து திண்புயம்
மோக முகமைந்து முக்கண் முகத்தொறும்
நாக முரித்து நடஞ்செய்யும் நாதர்க்கே!

சுத்த பராசக்தி சிவனுடன் கூடிச் சிவசக்தியாக விளங்குகிறாள். இந்தக் கோலத்தையே சம்பந்தர் ''பெண்ணின் நல்லாளுடன் பெருந்தகை இருந்ததே'' என்று பாடுகிறார். இக்கோலம் இருதயத்தில் ஏகமாயிருக்கிறது. சக்தி சிவனுக்கு ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சக்தியோசாதம் என ஐந்து முகங்களாம். இந்த ஐந்து முக உபாசனைக்கு நம: சப்தம் சேர்த்து ஈசானாயநம:, அகோராய நம:, தத்புருஷாய நம:, வாமதேவாய நம:, சத்யோ ஜாதாய நம: என்ற ஐந்து மந்திரங்கள் உண்டு. ஆதிசக்தி, பராசக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி ஆகிய ஐந்து சக்திகள். இச் சுத்த சக்திகள் சிவனிடம் எழுந்து எல்லா உலகையும் ஆளுகின்றன. இந்தச் சக்திகளின் உபாசனையால் எத்தனையோ அற்புதங்கள் நிகழும். இந்த அற்புத ரகசியம் என்ன?

''சக்தியினோடு சயம்புவும் நேர்படில்
வித்தது இன்றியே எல்லாம் விளைந்தன!''

அருளே சக்தி. அருளுடன் அறிவின்பச் சிவம் கூடியே உலகாடல் நடக்கிறது. அருட்சக்தி ஆதார கமலங்களில் ஏறிச் சகசிராரத்தில் கூடினால் அற்புதமான அறிவுண்மை அனுபவங்கள் உண்டாகும். உடல் கற்பூரவொளி போல மின்னும்; அரும் சக்தியே சிற்கனலாகும்.

''கற்பூர தீபவொளி காட்டும் உடலுயிரும்
சிற்கனலை ஏற்றச் சிகரம்.''


உலகக் கோயிலில் உயிர்மேனிப் பெருமான் உலாவுகிறான். அவன் பொது நடம் புரியும் ஐந்தொழிலாளி. அவன் சாதி மத பேதமில்லாத நாத சுத்தான்மப் பொதுவிலே ஒத்து வாழ உம்மை அழைக்கிறான். நல்ல திருத் தொண்டாகி அவன் அருள் வழியே வாழ்ந்தால் அச்சமில்லை, அல்லலில்லை, இன்பமே சூழும்; எல்லாம் அன்புற வாழும். ஆணும் பெண்ணும் சிவ சக்தியருளிற் சேர்ந்து வாழ்க.

''எல்லையிலா உலகையருட் கோயில் என்போம்
எவ்வுயிரும் எம்முயிரென் றினிதே செய்வோம்

தொல்லைசெயும் சாதிமதச் சார்வை நீப்போம்
சுத்தான்மப் பொதுவினிலே ஒத்து வாழ்வோம்!

அல்லலிலை, கலக்கமிலை, அச்சமில்லை
அடிமையிலோம்; நாமார்க்கும் குடியுமல்லோம்;
நல்லதிருத் தொண்டரெல்லாம் வாரீர் இங்கே
நம்பெருமான் பணிசெய்ய நாடுவோமே''

# சேக்கிழார் கண்ட திருநாவுக்கரசர்



தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

ஒரு வரலாற்றுக் காவியம் எழுதுவது எளிதன்று. அதிலும், உணர்ச்சி நிறைந்த பெருமக்கள் வரலாற்றை அந்த உணர்ச்சியில் இம்மியளவும் குறையாமல் வடித்துத் தருவதென்பது அரிய பணி. உளம் நிறைந்த பக்தி அனுபவத்தாலும், அடியார்கள் மாட்சியில் மனங்கலந்த ஈடுபாடு கொண்டமையாலுமே, சேக்கிழார் பெருமானுல் அதைச் செய்ய முடிந்தது. சேக்கிழார் பெரிய புராணத்தை இயற்றித் தராதிருப்பாராஞல், தூய சிவநெறியின் வரலாறு கிடைக்காமலே போயிருக்கும்! சிவநெறி வாழ்க்கையோ டியைந்ததென்னும் பேருண்மையை உலகுக்கு உணர்த்துவதற்குப் பெரிய புராணமே நமக்குரிய சிறந்த சாதனமாகத் திகழ்கிறது.

அப்பரடிகள் வரலாற்றை அருந்தமிழ்ச் சேக்கிழார் அருள் உணர்வு பொங்கித் ததும்பி வழிய எடுத்தியம்பும்முறை, எண்ணத்தக்கது. திருத்தொண்டிற்கொரு தலைவராக வந்தவதரித்த திருநாவுக்கரசரைத் தொண்டின் திருவுருவாகவே சேக்கிழார் பெருமான் படைத்துக் காட்டுகிறுர்.

சேக்கிழார், அப்பரடிகள் காலத்திற்கு மிக மிகப் பிந்தியவர். ஆயினும், அப்பரடிகளை நினைந்து நினைந்து தமது உள்ளக்கிழியில் உரு எழுதி ஓவாத் தமிழ் தந்துள்ள அருமை நினைந்து நினைந்து இன்புறத்தக்கது. அப்பரடிகளின் திருமேனி திருவுள்ளம் ஆகியவற்றைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறுர். அப்பரடிகள், திருநீறணிந்து மகிழ்வதைக் கடமையாகக் கொண்டவர்; பழுதிலாத் துறவாலும், சீலம் நிறை வாழ்வாலும், தவத்தின் வலிமையாலும், திருவருள் நினைவாலும் பொன்னெளிர் மேனி பெற்றவர்; அந்தப் பொன்மேனியில் திருநீறு மண்டி மணம் கமழ்கிறது.

இறைவனின் திருவடிகளை அப்பரடிகள் தம் நெஞ்சு அண்ணித்துத் தொட்டுத் தடவிக் கொண்டிருக்கிறது. அப்பரடிகள் நெஞ்சத்தைத் திருவடிகள் திருக்கோயில் கொண்டருளின. அப்பரடிகளின் நெஞ்சம் ஒன்றையே நினைக்கிறது; மறந்தும் பிறிதொன்றை நினைப்பதில்லை. அதுவே, எந்தை ஈசன் திருவடிகள்! நெஞ்சத்தில் திருவடியை நினைந்து நினைந்து இன்ப அன்பினில் திளைத்து மகிழ்வதால் கண்களில் கண்ணீர் மல்குகிறது. அன்பின் பெருக்கில் ஊற்றெடுக்கும் கண்ணீரே அது! கண்கள் காதற் பெருக்கில் கண்ணீரை மழையெனப் பொழிகின்றன.

அப்பரடிகளின் செந்நா சிவத்தையே பாடிய செந்நா. அவர் திருவாயில் உதித்த சொற்கள் செஞ்சொற்கள்; சிவத்தின் செவிக்கே அமுதமெனத் திகழ்ந்த சொற்கள். நன்றுடையானே நாவுக்கரசரெனப் பெயர் சூட்டிய பேரரசு. அப்பரடிகள் திருவாயில் ஊற்றெடுத்த திருத்தமிழைச் செவிமடுப்பதற்கென்றே எம் பெருமானும் கயிலையை மாற்றிக் கொண்டார்! இத்தகைய இனிய இயல்புகளையுடைய அப்பரடிகள் புலன்கள்மீது தனியரசு செலுத்திய அரசு எனவும், நற்றமிழ்க்கோர் நாவுக்கரசெனவும், சிவநெறிக்கோர் அருளரசு எனவும் விளங்கியமையைச் சேக்கிழார் பெருமான் என்பு நெஞ்சுருகப் பாடுகின்றுர்.

''தூயவெண் ணீறு துதைந்தபொன்
மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழிகண்ணும்
பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே!''

என்பது திருப்பாடல்.

// அருள்மிகு

# வடபழநி ஆண்டவர் திருக்கோயில்

வடபழநி, சென்னை-26.

தொலைபேசி : 421676

திருமுருகன் தலங்களுள் தொன்மை வாய்ந்த தென்பழநியில் பழநியாண்டியாகவும், சென்னை வடபழநியில் வேண்டுவோர்க்கு வேண்டும் வரமளித்துக் கொண்டு கலியுக வரதனுயும் எழுந்தருளியிருப்பவர் வடபழநி ஆண்டவர். வடபழநி ஆண்டவருக்கு வைகாசியில் விசாகப் பெருவிழா, கந்த சஷ்டிப் பெருவிழா, பங்குனி உத்திரப் பெருவிழா முதலியவை இவ்வாலயத்தின் முக்கிய விழாக்களாகும். கந்த சஷ்டி, பங்குனி உத்திரப் பெருவிழாக்களில் இலட்சார்ச்சனைகள் மிக விமரிசையாக நடைபெறும். மாதாந்திரக் கிருத்திகைக்கும், ஆடிக் கார்த்திகை மற்றும் தை மாதத்து விசேடக் கிருத்திகைக்கும் பெருவாரியான பக்தர்கள் தரிசனத்திற்காக வருகிருர்கள். பிரதி தினமும் ஆண்டவனுக்குச் சந்தனக் காப்பு, விபூதி பஞ்சாமிர்த அபிஷேகம், பால் அபிஷேகம் முறையே ரூ. 151, ரூ. 51, ரூ. 21 கட்டணங்களில் செய்யப்படுகின்றன. திருமணங்கள் அதிக அளவில் நடைபெறுகின்றன. திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருப்பணிக்கு நிதி உதவி அளிப்பவர்கள் ''நிர்வாக அதிகாரி'' முகவரிக்கு அனுப்பி வடபழநி ஆண்டவர் அருளுக்குப் பாத்திரராகுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

திரு. வி. டி. முனுசாமி செட்டி,
திரு. ஏ. எஸ். இராமன்,
திரு. வி. பாலகிருஷ்ணன்.
அறங்காவலர் குழு.

திரு. சி. வி. இராசாராம், பி.ஏ., பி.எல்.,
நிர்வாக அதிகாரி,

# எறும்பும் குறும்பும்

கி. வா. ஜகந்நாதன்

பாரதியார், கம்பராமாயணம் முதலிய பழைய நூல்களை ஓதி இன்புற்றவர். பெரியாழ்வாருடைய பாசுரங்களும், ஆண்டாளுடைய பாசுரங்களும், அவருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அதன் பயனாகவே புதிய புதிய கற்பனைகளை அமைத்துக் கண்ணன் பாட்டைப் பாடினார்.

பெரியாழ்வார் கண்ணனுடைய இளம் பருவ விளையாடல்களை மிக அழகாகப் பாடியிருக்கிறார். பின்னால் வந்த பிள்ளைத் தமிழ்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்குவது அவருடைய திருப்பாடல்கள்.

ஓரிடத்தில் கண்ணன் செய்யும் குறும்பைச் சொல்கிறார். அவன் எல்லோரையும் ஆட்டி வைக்கிறவன். அர்ச்சுனன் செயலிழந்து அயர்ந்துவிட்டபோது அவன் காதில் கீதையை ஏற்றிப், போரில் முனையச் செய்தவன். இளம் பருவத்திலேயே இந்தக் குணம் அவனுக்கு உண்டு. கன்றுக்குட்டி துள்ளி ஓட வேண்டும்; அப்போதுதான் அது அழகாக இருக்கும். ஒரு கன்றுக்குட்டி சும்மா கிடந்தது. அதைப் பார்த்தான் கண்ணன். அதைத் துள்ளியோடப் பண்ணவேண்டுமென்று நினைத்தான். அருகில் ஓடிய கட்டெறும்பை எடுத்து அதன் காதில் விட்டான். உடனே கன்றுக்குட்டி துள்ளி ஓடி விட்டது. எறும்பைக் கொண்டு கண்ணன் செய்த இந்தக் குறும்பைப் பெரியாழ்வார் சொல்கிறார்.

> கன்றுகள் ஓடச் செவியில்
> கட்டெறும்பு பிடித் திட்டான்

பாரதியார் இதைப் பார்த்தார். எறும்பும் குறும்பும் அவருள்ளத்தில் பதிந்தன. ஆனால் கன்றுக்குட்டியை அவர் விட்டுவிட்டார். கண்ணன் பாட்டில் வேறு ஒருவகையில் கண்ணன் எறும்பைக் கொண்டு குறும்பு செய்யும் காட்சியை அவர் அமைத்தார்.

தனியாக ஒரு சுவையை அநுபவிப்பதை விட மாறிமாறி அநுபவித்தால் சுவையில் இன்பம் கூடும். ஆகவே பாரதியார் முதலில் ஒரு காட்சியை வைத்துக் காட்டிப் பிறகு குறும்புக் காட்சியைக் காட்டுகிறார். கண்ணன் குழலூதுகிறான். எதிரே கோபிமார்கள் அமர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவன் புல்லாங்குழலூதுகிறான். அது கானமழையாகவா இருக்கிறது? அதில் அமுது பொங்கித் ததும்புகிறது.

> புல்லாங் குழல்கொண்டு வருவான்
> பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்

பாரதியார் திருநெல்வேலிக் காரர். நாம் கீதம் வாசிப்பான் அல்லது பாடுவான் என்று சொல்வோம். திருநெல்வேலிக்காரர்கள் 'பாட்டுப் படிக்கிறான்' என்று சொல்வார்கள். 'கீதம் படிப்பான்' என்பதில் திருநெல்வேலி முத்திரை இருக்கிறது. முன்னால் உள்ள கோபியர்கள் புல்லாங்குழலைக் கேட்கிறார்கள். கண்ணனுடைய வியத்தகு திருமேனி அழகு உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. அதுவும் அவன் மூன்று கோணலையுடைய திரிபங்கியுடன் குழலூதும் கோலம் அழகிலும் அழகு. அதை ஒரு புலவர் ''மிகவிளங்கு ஓவியர் வெள்கிய திரிபங்கியுடன், சுகவிளங் கோவியர் மழலை தொனித்த குழல் இசைத்தோய்'' என்று பாராட்டுவார்.

ஆகவே, கோபியர்களின் கண்ணை மயக்குகிறது அந்தக் கோலம். பாட்டோ உள்ளத்தை அள்ளுகிறது. இரண்டையும் முழுமையாக நுகர முடியவில்லை. 'அவன் வடிவழகைப் பின்பு பார்த்துக் கொள்ளலாம். இப்போது அவன் குழலொலியை நுகரலாம்' என்று எண்ணிக் கண்ணை வேறுமூடிக் கொள்கிறார்கள். அவர்களுக்கு வேறு நினைவேயில்லை. 'ஐந்து பேரறிவும் செவிகளே கொள்ளக்' கேட்கிறார்கள். கள்ளுண்டவர்கள் மயங்கியிருப்பதைப்போல மயங்கிக் கேட்கிறார்கள். அவசரமாகக் கேட்பதனால் வாய் திறந்தபடியே இருக்கிறது. 'வாயில் ஈப்புகுவது தெரியாமல்' கேட்கிறார்கள்.

> புல்லாங் குழல்கொண்டு வருவான்—அமுது
> பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்;
> கள்ளால் மயங்குவது போல—நாங்கள்
> கண்மூடி வாய்திறந் தேகேட்டு நிற்போம்.

தம்மை மறந்து கேட்கிறார்கள், கோபியர்கள். எங்கள் ஆசிரியப்பெருமான் ஒரு வரலாறு சொல்வார்கள். அந்தக் காலத்தில் அரியலூரில் கச்சிரங்கர் என்ற ஜமீன்தார் இருந்தார். அவர் இசையை நன்கு நுகர்ந்து இன்புறுபவர். அந்தக் காலத்தில் அரியலூரைச் சுற்றிக் காடாக இருக்கும். இருந்தாலும் இசைப்புலவர்கள் அவரைத் தேடிக் கொண்டுபோய்த் தம் கலைத் திறமையைக் காட்டுவார்கள். ஜமீன்தார் அதிக அளவில் பரிசைத் தராவிட்டாலும் வரிசையறிந்து தருவாராதலின் அதைப் பெரிதாகப் போற்றிப் பெற்றுக் கொள்வார்கள் புலவர்கள்.

ஒருமுறை வீணையில் மிக்க வல்லுநரான பெருமாளையர் என்பவர் அரியலூருக்கு வந்தார். அந்தக் காலத்தில் வீணைப் பெருமாளை யர் என்ருல் தமிழ்நாட்டு மக்கள் யாவரும் அறிவார்கள். அவர் முன்பு அரியலூருக்கு வந்ததில்லை. மற்ற இசைப்புலவர்கள் அந்த வள்ளலைப் பற்றிச் சொல்லியதைக் கேட்டிருந்த தனுல், அவரிடம் போய்த் தம் கலைத்திறமை யைக் காட்ட வேண்டும் என்ற எண்ணம் பெரு மாளையருக்கு உண்டாயிற்று.

பலபேர்களைக் கூட்டிக் கச்சேரி செய்யச் சொல்லும் வழக்கம் அந்தச் செல்வரிடம் இல்லை. வீணைப் பெருமாளையரின் புகழை அவரும் கேட்டிருக்கிருர். ஆகவே, அவருக்கு வேண்டிய உபகாரங்கள் செய்து ஒருநாள் அவர் பாட்டைக் கேட்க ஏற்பாடு செய்தார்.

சிலபேர்களை உடன் வைத்துக் கொண்டு கச்சிரங்கர் பாட்டைக் கேட்கத் தொடங்கினர். அந்த வள்ளலின் பெருமையைப் பலகாலும் கேட்டவராதலின்சங்கீதவித்துவான்மிகவிரிவாக ஓர் இராகத்தைப் பாடவேண்டுமென்று தீர் மானித்துக்கொண்டார். அப்படியே ஓர் இரா கத்தை வீணையில் வாசிக்கத் தொடங்கினர். அற்புதமாக மேளம் கட்டிவிட்டது. மிக விரி வாக அந்த இராகத்தையே வாசித்தார். மூன் ரும் நாளும் அதையே விரிவாக வாசித்தார். விரிவாகப் பாடும் வகையை அனுபவித்து வள் ளல் மகிழ்வார் என்று எண்ணி அவர்தம் மனே தர்மம் விரிய விரிய வாசித்து வந்தார்.

ஜமீன்தார் எதிரே அமர்ந்து கேட்டு வந் தார். கண்ணை மூடியபடியே கேட்டார். ஒரு சமயத்திலும் கண்ணைத் திறக்கவில்லை. புன் முறுவல் பூக்கவில்லை. தலையை அசைக்கவில்லை. கையைத் தட்டவில்லை. கல்லுப்பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருந்தார்.

கலைஞர்களுக்குத் தம் கலையைச் சுவைத்துப் பாராட்டினுல்தான் ஊக்கம் பிறக்கும். மூன்று நாள் ஒரே இராகத்தை இவ்வளவு விரிவாகப் பாடியும் இவர் இப்படி இருக்கிருரே! என்ற எண்ணம் வீணைப் புலவர் உள்ளத்தில் வேதனையை உண்டாக்கியது. அந்த வேதனை யினுல் உண்டான கவனக் குறைவில் மிகவும் நுட்பமாக அபஸ்வரம் தட்டிவிட்டது.

அப்போது ஜமீன்தார் கண்ணை விழித்து ''சபாஷ்!'' என்று கையைத் தட்டினர். வீணைப் பெருமாளையருக்கு ஒன்றும் விளங்கவில்லை. மூன்று நாட்களாகத் தம் உயிரையே குழைத்து அவர் வாசித்தார். இதுகாறும் எங்கும் வாசித்தி ராத வகையில் அவர் இசையை எழுப்பினர். அப்பொழுதெல்லாம் சும்மா இருந்து விட்டுச் சிறிது அபஸ்வரம் தட்டியவுடன் ''சபாஷ்'' போடுகிருரே! இவருக்குச் சங்கீதம் தெரியும் என்பது பொய்யோ! இப்படி அவர் எண்ணினர்.

உடனே வீணையைக் கீழே வைத்தார். கையைக் குவித்துக் கொண்டார். ''பிரபு அவர் களுக்கு மூன்றுநாட்களாக ஒரே இராகத்தை மிக விரிவாக வாசிக்கிறேன். இதற்கு முன்பு நான் இப்படி வாசித்ததேயில்லை. இனியும் வாசிப்பேனே தெரியாது. அப்படி வாசிக்கும் போது பிரபு அவர்கள் ஓரிடத்தில் கூட மகிழ்ச்சி யைக் காட்டவில்லை. தாங்கள் இப்படி இருக் கிறீர்களே என்ற வேதனை தாக்கச் சிறிது அபஸ் வரம் தட்டியது. அப்போது தாங்கள் சபாஷ் போட்டீர்கள். தாங்கள் மகா சங்கீத ரசிகர்கள் என்று கேட்டது தவருே என்று நினைக்கத் தோன்றுகிறது'' என்ருர்.

கச்சிரங்கர் புன்னகை பூத்தார். ''நீங்கள் அப்படி நினைப்பதில் தவறு ஒன்றுமில்லை. நியாயந்தான். ஆனுல் நான் ரசிக்கும் விதமே வேறு. நீங்கள் வீணையை மீட்டத் தொடங்கிய வுடன் நான் கண்ணை மூடிக்கொள்கிறேன். காது மட்டுந்தான் கேட்கிறது. என் உடம்பே மறந்து போகிறது. உங்கள் பாட்டு அப்படி என்னை மறக்கச் செய்துவிட்டது. உங்கள் இசையமுதம் உள்ளே பாய்ந்துகொண்டே இருந்தது. என் உடம்பு வேலை செய்யவில்லை. கண் வேலை செய்யவில்லை. ஆனுல் உள்ளத்தில் இன்பம் நிறைந்தது. என் உணர்ச்சியை வெளியிடும் வாயில்களெல்லாம் மூடியிருந்தன. நல்லவேளை! நீங்கள் அபஸ்வரம் என்ற சாளரத்தைத் திறந் தீர்கள். என் உணர்ச்சியைக் கொட்டிவிட்டேன். என் செயலை மன்னிக்க வேண்டும்'' என்ருராம். அப்படித் தன்னை மறந்து பாடவேண்டும்; தன்னை மறந்து கேட்கவேண்டும்.

கோபிமார்கள் தம்மை மறந்த லயந்தன்னி லிருந்து புல்லாங்குழலமுதத்தை நுகர்ந்து கொண்டிருந்தார்கள். வாயைத் திறந்தபடி கண்ணை மூடிக்கொண்டு கேட்டுக் கொண்டிருந் தார்கள். கண்ணன் இப்போது புல்லாங்குழலை வாயிலிருந்து எடுத்துவிட்டான். ஆனுல் கோபி யர்களுக்கு இன்னும் உள்ளத்தே இசை கேட்டுக் கொண்டிருக்கிறது. அதுதானே உயர்ந்த சங்கீதம்! அவர்கள் கண்ணைத் திறந்து கொண் டிருந்தால் குழலை எடுத்துவிட்டது தெரியும். அவர்கள் மூடிக்கொண்டிருக்கிருர்களே! தன் புல்லாங்குழல் கீதம் செய்த அதிசயத்தைப் பார்த்தான் கண்ணன்.

குழற்கோவலனுக இருந்த கண்ணன் இப் போது குறும்புக்காரக் கண்ணனுக மாறிவிட் டான். அங்கே ஊர்ந்து கொண்டிருந்த ஆறேழு கட்டெறும்பை எடுத்து அவர்கள் வாயில் போட்டான். தூ தூ என்று கோபிமார்கள் எழுந்தார்கள். இதை அவர்களே சொல்கிருர் கள்.

புல்லாங் குழல்கொண்டு வருவான்—அமுது
பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்;
கள்ளால் மயங்குவது போலே—நாங்கள்
கண்மூடி வாய்திறந் தேகேட் டிருப்போம்.

அங்காந் திருக்கும்வாய் தனிலே—கண்ணன்
ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான்
எங்காகி லும்பார்த்த துண்டோ—கண்ணன்
எங்களைச் செய்கின்ற வேடிக்கை அன்ருே?

பெரியாழ்வார் எறும்பைக்கொண்டு கண் ணன் செய்த குறும்பைச் சொல்லி நகைச் சுவையை எழுப்பினர். பாரதியாரோ இசையை நுகரும் நுட்பமான சாந்தச் சுவையை முன் வைத்து, அமைதியைப் பரவச்செய்து, அப்பால் நகைச்சுவையைப் பெய்து உண்ண வைக்கிருர். இசைத்தேனில் சாந்தத்தையும் கட்டெறும் பினுல் உண்டான துள்ளலில் நகையையும் காட் டும் அழகே அழகு!

# எழிலுடை இருசுடர் தோற்றம்

டாக்டர் சுப்பு ரெட்டியார்

எல்லாம் வல்ல இறைவன் நமக்குப் புலன்களையும் நுண்ணிய அறிவையும் அளித்து அவற்றின் துணை கொண்டு கோடானு கோடி இன்பங்களை நுகர்வதற்கு வாய்ப்பும் அளித்துள்ளான். இதனை எண்ணியே மகாகவி பாரதியார்,

''எத்தனைகோடி இன்பம்
வைத்தாய்!—எங்கள்
இறைவா! இறைவா!
இறைவா!''

என்று பாடித் திளைக்கின்றார். இங்ஙனம் கூறிய கருத்தினை விளக்குவதுபோல்,

''சித்தினை அசித்துடன்
இணைத்தாய்;—அங்குச்
சேரும்ஐம் பூதத்து
வியன்உல கமைத்தாய்!
அத்தனை உலகமும்
வண்ணக் காவியம்
ஆகப் பலப்பல—நல்
அழகுகள் சமைத்தாய்''

என்று பின்னும் கூறுகின்றார். நம் முன்னோர்கள் இயற்கையைக் கண்டு களித்தே தமது வாழ்வைச் சிறப்பித்துக் கொண்டனர் என்பதற்கு அவர்கள் இயற்றிய நூல்களே சான்றுகளாகும். அகன்ற நீலவானமும் அதில் துலங்கும் தாரகையும் தண்மதியும் நமக்கு இன்பத்தை அள்ளித் தெளிக்கக் காத்திருக்கின்றன. கண்ணுக்கு எட்டாத தொலைவில் மரகதத்தை உருக்கி வைத்தாற் போன்று கண்கொள்ளாக் காட்சியளிக்கும் மாக்கடலைப் பார்த்த மாத்திரத்தில் நம்மிடையே தோன்றும் அகத்தெழுச்சிகட்கு எல்லையே இல்லை.

இந்நிலையில் அருமறையிலுள்ள ஒரு வாக்கியத்தில் நம் கருத்தினைச் செலுத்துவோம். ''வானத்தை அண்ணாந்து நோக்கினீர்களா? என்ன எழில்! ஒரே நீலமாய் மேடு பள்ளம் இல்லாத தூய்மையான விளையாட்டுத் திடல்! அப்பரந்த மைதானத்தில் இரண்டு குழந்தைகள் விளையாடுகின்றனர். குழவிகளின் மேனியொளி கண்ணைப் பறிக்கின்றது; நம் உள்ளத்தையுங் கொள்ளை கொண்டு விடுகின்றது. நாடோறும் அக்குழந்தைகள் குணதிசையிலிருந்து குட திசையை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதைப் பார்க்க யாருக்குத்தான் ஆர்வம் பொங்கி எழாது? என்று வெங்கதிரோனையும் தண்மதியையும் வருணித்திருப்பது இயற்கையில் அவர்கள் கொண்ட மோகத்தைக் காட்டுகிறதன்றோ? கதிரவனின் தோற்றமும் மறைவும், தண்மதியின் எழுகையும் அதன் மறைகையும் கவிஞர்கட்குப் பேரானந்தத்தை விளைவித்துள்ளன. அந்த இன்பமயமான சமாதியில், உறங்குகின்ற குழந்தையைத் தாய் அணைத்துக் கொண்டு கிடப்பதைப் போன்று, அச்சமாதி கலையாமல் தழுவுவர். அவர்கள் உறக்கம் கெடாமல், தாய் தன்னை மறந்து விடுவதைப் போன்று அவர்களும் இன்பப் பெருக்கில் மிதப்பர். அவர்கள் அனுபவித்த இன்பப் பெருக்கில் ஒன்றிரண்டு திவலைகள் அவர்கள் பாடிய பாட்டுக்களிலும் ஆடிய கூத்திலும் இல்லாமல் போகாது. அவற்றைப் பார்த்தே 'கலைகள், கலைகள்' என்று கொண்டாடி நாம் உள்ளம் பூரிக்கின்றோம். அத்தகைய கலைத் திறம் வாய்ந்த பாடல்கள் ஒன்றிரண்டில் ஆழங்கால்படுவோம்.

**கதிரவன் உதயம்:**

கம்பன் காட்டும் உதயசூரியனைக் காண்போம். புகர் முக யானையின் தோலை மேற் போர்த்துக் கொண்டிருக்கும் பரமசிவனைப் போல் மிகுந்த கரிய இருளிலே மறைந்து கிடக்கின்றது உதயகிரி. அப் பரமசிவன் நெற்றியில் திறந்து விளங்கும் நெருப்புக் கண் போல் உதயகிரியின் கொடுமுடியில் உதித்து விளங்குகின்றான் பகலவன்.

''சிதையுமனத்து இடருடைய செங்கமல
முகமலரச் செய்ய வெய்யோன்
புதையிருளில் எழுகின்ற புகர்முகயா
னையின்உரிவைப் போர்வை போர்த்த
உதயகிரி எனுங்கடவுள் நுதல்கிழித்த
விழியேபோல் உதயஞ் செய்தான்''

என்ற பாடற் பகுதியில் இக்காட்சி சித்தரிக்கப் பட்டிருப்பதைக் கண்டு மகிழ்க. ஈண்டுக் கரிய இருளின் மீது விளங்குகின்ற வெண்ணிறங் கலந்த சிவந்த விண்மீன்கள், கரிய யானையின் முகத்தில் நிறைந்துள்ள செம்புள்ளிகளாகக் கொள்ளப் பெற்றிருப்பதை நோக்குக. கதிரவனைக் கண்ட மாத்திரத்தில் தாமரை மலர்தலும், அவனைப் பிரிந்த மாத்திரத்தில் அது குவிதலுமாகிய இயல்பு பற்றித் தாமரைக் கொடிகளாகிய மகளிர்க்குக் கதிரவனைத் தலைவனாகக் கூறுதல் கவி மரபாகும். கொழுநனாகிய தன்னைப் பிரியப் பெற்றதனால் நிலைகுலைகின்ற நெஞ்சத்தில் சோகத்தையுடையனவாகக் காணப்படுகின்றன செந்தாமரைகள். தலைவி முக மலரத் தலைவன் தோன்றினதுபோல் தாமரைகள் மலரக் கதிரவன் தோன்றினான் என்ற செய்தி நயம்பட உரைக்கப் பெற்றிருத்தல் கண்டு தெளிக.

வெய்யோன் ஒளி பரந்து விரியுங் காட்சி, அடுத்து அற்புதமாய்ச் சித்தரிக்கப் பெறுகின்றது. அம்பலவன் ஆனந்தத் திருநடனம் புரியுங்கால் அவனுடைய திருச்சடைகள் விரிந்து பரந்து காணப்படுவதுபோல், கதிர்கள் விரிந்து

பரவும் நிலையில் கதிரவன் காணப்பெறுகிறான் என்ற ஒப்புமை நம் நெஞ்சை அள்ளுகின்றது. பாடலைக் காண்போம்.

''எண்ணரிய மறையினோடு கின்னரர்கள்
இசைபாட உலகம் ஏத்த
மண்ணுமணி முழவதிர வானரங்கின்
நடம்புரிவாள் இரவி யான
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரிந்தால்
எனவிரித்த கதிர்கள் எல்லாம்''

வானத்தின் மீது பகலவனின் கதிர்கள் பரவுதல் விண்ணையளாவி ஓங்கியுயர்ந்து நடம் புரியும் சிவபெருமானின் செஞ்சடைகள் விரிந்து நிற்றலை ஒத்திருக்கின்றன. கதிரவன் கனன்று எழுங் காலத்துக் கண்ணுதலோன் ஆனந்தத் திரு நடனம் புரியும்பொழுதும் அந்தணர்களின் அரு மறை முழக்கம் எங்கும் எழுகின்றது. அவ் வமயம் கின்னரர்கள் இசை பாடுகின்றனர்; உயர்ந்தவர்கள் துதித்த நிலையில் உள்ளனர். தேவர்களும் முனிவர்களும் கைகூப்பிய நிலையில் காணப்பெறுகின்றனர். இதயகமலத்திலும் பொற் சபையிலும் ஆனந்தக் கூத்தாடும் ஆடல் அரசனைப் போலவே, வான் அரங்கில் கரகர வென்று சுழன்று, அற்புதக் கூத்தினை நடத்து கின்றான் பகலவன். கூத்தன் நடனத்திற்கு ஏற்ப முழவு ஒலிப்பதுபோலப் பகலவனின் நடனத்திற்குக் கடல் ஒலித்துத் தன் மகிழ்ச் சியைப் புலப்படுத்துகின்றது. இயற்கையில் ஈடுபட்டு களித்து நிற்குங் கம்பன் நம்மையும் இப்பாடல் வாயிலாக ஈடுபடுத்திக் களிக்கும்படி செய்கின்றான்.

**மறையுங் கதிரவன் :**

காலையில் கரகரவென்று எழும் ஞாயிற்றின் எழிலில் ஈடுபட்ட நாம் மாலையில் மறையும் பகலவனின் பாங்கெழிலிலும் பங்கு பெறுவோம். இதற்கு மகாகவி பாரதியார் நமக்குக் கை கொடுத்து உதவுகின்றார். அத்தினபுரத்தை நோக்கிச் செல்லும் பாண்டவர்கள் பயணத்தில் பார்த்தன் பாலைப் போல் மொழி பிதற்றும் பாஞ்சாலிக்குப் பரிதியின் எழிலை விளக்கும் பாணியில் கவிஞன் களிப்புடன் பேசுகின்றான். ''பண்மொழி! வானத்தில் கணந்தோறும் மாறி மாறி நவநவமாகத் தோன்றுங் காட்சியைக் காண்பாயாக. இந்தப் பூவுலகில் யார் எண் ணரிய பொருள் கொடுத்து இத்தகைய தோன் றினை இயற்ற இயலும்? அன்பே, செழுஞ்சோதி வனப்பையெல்லாம் ஒரு சேரக் கண்டு மகிழ் வாயாக'' என்கின்றான். கதிரவன் கரகரவென்று அடிவானத்தில் சுழன்று இறங்குவதைத் தன் சொற்களால் ஓவியம் தீட்டிக் காட்டுகின்றான் கவிஞன்.

அடிவானத் தேஅங்குப் பரிதிக் கோளம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்;
இடிவானத் தொளிமின்னல் பத்துக் கோடி
எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து
முடிவான வட்டத்தைக் காளி ஆங்கே
மொய்குழலாய் சுற்றுவதன் மொய்ம்பு காணாய்
வடிவான தொன்றாகத் தகடி ரண்டு
வட்டமுறச் சுற்றுவதை வளைந்து காண்பாய்''

கணந்தோறும் இங்ஙனம் நவநவமாகப் புதிய வண்ணங்காட்டி நிற்பதைக் காளி பரா சக்தி களிக்கும் கோலமாகக் காண்கின்றான் பாரதி. அம்பிகையின் திருநடனம் அம்பலவ னின் கூத்தினையொத்துக் காணப்பெறுகின்றது. அவளும் நானரங்கில்தான் திருநடனம் புரிகின் றாள். அவள் திருக்கையில் பொன் மயமான வட்டத் தட்டொன்று சுழன்றுகொண்டுள்ளது. பத்துக் கோடி மின்னல்களைத் திரட்டி அவற்றை ஒரு குகையில் போட்டு உருக்கி வார்த்து, தன் திருக்கரத்தில் தாங்கிக் கொண்டு சுழற்று கின்றாள் அன்னை பராசக்தி. அன்னையின் அற்புதத் திருநடனத்தை மானசீகமாகக் கண்டு களிக்கும் பாரதி, நமக்கு அந்த அற்புத வட்டத் தகட்டை மட்டிலும் காட்டுகின்றான். அவள் கையில் கரகரவென்று சுழன்று நிற்கும் வட்டத் தட்டே வானத்தில் கரகரவென்று சுழன்று மறையும் நிலையிலுள்ள வெய்யோன் என்பது கவிஞனின் அற்புதக் கற்பனை. 'கணந்தோறும் அவள் பிறப்பாள்' என்று மேலோர் கருதுவதன் விளக்கத்தை நாம் கண்டு அநுபவிக்கின்றோம்.

பாஞ்சாலிக்குப் பகலவனின் பாங்கெழிலை விளக்கும் பார்த்தன் மேலுங் கூறுகின்றான். ''மின்னே, குடதிசையில் தோன்றும் அற்புதக் காட்சிகளை அமைதியாகக் கண்டு களிப்பாயாக. முதலில் மின்னால் செய்யப்பட்ட வட்டினைக் காண்க. அதற்கு முன்னதாகப் பச்சை நிறமாக வுள்ள வட்டத்தையுங் காண்பாய். மின்வட்டி னின்றும் எண்ணற்ற வயிரக் கால்கள் இடை இடையே எழுவதையுங் காண்பாய். உமை அன்னை கவிதை செய்யத் தொடங்குகின்றாள். நாம் எழுந்து நின்று 'பல்லாண்டு வாழ்க!' என்று பல்லாண்டு பாடுவோம்'' என்கின்றான்.

கவிஞனின் ஆனந்தக் களிப்பு அதன் கொடு முடியை எட்டுகின்றது. கதிரவனின் வடிவமும் மறையும் நிலையில் உள்ளது. பார்த்தன் பாஞ் சாலியிடம் கொஞ்சிப் பேசுகின்றான். ''அன்பே ஊன்றிக் கவனிப்பாயாக'' என்று கூறும் முறை யில் செவ்வானத்தையும் அதில் காணப்பெறும் செந்நிற முகிற் படலங்களையும் சுட்டிக்காட்டிய வண்ணம் ''பரிதியைச் சூழ இருக்கும் படர் முகில்கள் தீப்பட்டு எரிவதைக் காண்க. எத்தனை வடிவம்! எத்தனை கலவை! தீயின் குழம்புகளையும், செழும்பொன் காய்ச்சிவிட்ட ஓடைகளையும் பார்ப்பாயாக. வெம்மை சிறிதுந் தோன்றாது எரிந்திடுந் தங்கத் தீவுகளைக் காண்க. இன்னொரு பக்கம் நீலப் பொய்கையின் மிதந் திடும் தங்கத் தோணிகளைக் கண்கொண்டு பார்க்க. இன்னொரு பக்கம் பொற்கரையிட்ட கருஞ் சிகரங்கள் காட்சியளிப்பதைக் காண்க. பிறிதொரு பக்கம் தங்கத் திமிங்கிலம் மிதக்கும் இருட் கடலைக் கண்டு களிப்பாயாக. எங்கு நோக்கினும் ஒளித் திரள்! வண்ணக் களஞ் சியம்! என்று கூறுவதில் கவிஞனின் எக்களிப்பைக் காணலாம்.

**முழுமதி உதயம் :**

வெங்கதிரோன் உதயக் காட்சியையும் அவன் மறையுங் காட்சியையுங் கண்டுகளித்த நாம், கடலிடையே முழு மதியம் எழுங் காட்சி

யையும் அது நிலாக் கற்றையை எம்மருங்கும் வீசி நிற்குங் காட்சியையுங் கண்டு அவற்றில் ஆழங் கல்படுவோம். மீண்டும் கம்பனின் கலைக் கோயிலுக்கு வருகின்றோம். கவிஞனின் கற்பனை யில் எழுந்த ஒரு திவலை இது :

''பெருந்திண் நெடுமால் வரைநிறுவிப்
பிணித்த பாம்பின் மணித்தாம்பின்
விரிந்த திவலை யுதிர்த்தமணி
விசும்பின் மீனின் மல்விளங்க
அருந்த அமரர் கலக்கியநாள்
அமுது நிறைந்த பொற்கலசம்
இருந்த திடைவந் தெழுந்ததென
எழுந்தது ஆழி வெண்திங்கள்''

திருமால் தேவர்கட்காக அமுதம் பெறச் செய்த ஏற்பாட்டை நமக்கு முதலில் நினைவுறுத் துகின்றான் கவிஞன். இறவாத நிலையைப் பெறு வான் வேண்டித் தேவர்கள் அமுதம் பெற எண்ணுகின்றனர். மந்தர மலையை மத்தாக வும் வாசுகி என்னும் மாநாகத்தைக் கயிறாகவுங் கொண்டு திருப்பாற்கடலைக் கடையுந் திட்டம் நிறைவேற்றப்படுகின்றது. அமுதம் நிறைந்த பொற்கலசம் ஒன்றுபாற்கடலில்அலைகளிடையே தோன்றி ஆடி அசைந்து வருகின்றது. அந்தப் பொற் கலசத்தை ஒப்பச் சந்திரன் கருங்கடலில் உதயமாகின்றான்.

இக்காட்சியின் நுட்பத்தை எண்ணுந் தோறும் இன்பம் ஊற்றெடுக்கின்றது. கருங் கடலினிடையே தோன்றிய பொன்னிறச் சந்தி ரன் பாற்கடலினிடையே தோன்றிய அமுதம் நிறைந்த பொற்கலசமாக உவமிக்கப் பெற்றுள் ளது. மதியின் கதிர்களால் வெண்ணிறம் அடைதல் பற்றிக் கருங்கடலுக்குப் பாற்கடல் ஒப்பாகின்றது. சந்திரன் அமுதக் கதிர்களைக் கொண்டவனுதலால் அவனுக்கு அமுதக் கல சத்தை ஒப்புக் கூறுதல் மிகப் பொருத்தமாக அமைகின்றது. பாற்கடலைக் கடைந்த காலத் தில் அடைந்த அதிர்ச்சியால் வெளியில் தெறித் தெழுந்த பால் துளிகள் விண்ணில் நட்சத்திரங் களாகவும், வலி பொறுக்கமாட்டாமல் பாம் பின் வாயினின்றும் உதிர்ந்த இரத்தினங்கள் கோள்களாகவும் காணப்படுகின்றன என்பது கவிஞனின் குறிப்பு. மேலும், சந்திர மண்டலம் வெண்ணிறத்தாயினும் உதிக்குங் காலத்துச் செந்நிறமாகக் காணப் பெறுதலின் அது பொற் கலசமாக உருவகிக்கப் பெற்றது என்பது ஆழ்ந்து அறிய வேண்டிய குறிப்பு. கவிஞன் கூறும் முழு மதியக் காட்சியை மனத்திசையில் அமைத்து இன்பக் கடலில் மிதக்கின்றோம்.

வெண் மதியத் தோற்றம் இன்னொரு முறையாலும் வருணிக்கப்பெறுகின்றது. பால னுகிய ஏழுலகமும் உண்டு அந்த உண்ட களைப்புத் தீர ஆலிலையில் உறங்குவான் போல் யோகு செய்யும் பரந்தாமனின் உந்திக் கடலில் ஒரு செந்தாமரை முகை தோன்றிற்று. நான் முகன் வண்டாக நின்று நான் மறைகளைப் பாட அம் முகை மலர்ந்தது. திருமாலின் திருவுந்திக் கடல் ஒரு செந்தாமரை மலரைப் பூத்தது கண்டு, கருங்கடலும் ஒரு வெண்டாமரையைப் பூத்தது போல் அக்கடலில் சந்திரன் தோன்றி னுன். இவ்வுலகில் ஒருவர் ஒரு செயலை மேற் கொண்டால் பிறரும் அதுபோன்ற தொன்றை விரும்பிச் செய்தலும் அங்ஙனம் செய்யுங்கால் சிறிது வேறுபாடு காட்டுதலும் உலகத்தாரது தன்மையாதலின், உந்திக் கடல்போல் செந் தாமரை பூவாது வெண்டாமரை பூத்தது என்ற நயந்தோன்ற உரைத்தான் கவிஞன். கலை நிறந்த சந்திரமண்டலம் இதழ் விரிந்த வெண் டாமரை மலரையொத்து நின்றது. தாமரை பூப்பது நீர்நிலையிலாதலின், உந்தி, கடலாகக் கொள்ளப் பெற்றது.

**நிலாக்கற்றை பரவுதல் :**

முழு மதியம் வீசும் கதிர்கள் பரவுந் தன்மையைக் காட்டுங் கவிஞனின் மதிநுட்பம் போற்றத் தக்கதாக அமைகின்றது. புள்ளி களை அடையாளம் இட்டதுபோல் மினுக் மினுக் கென்று விண்மீன்கள் பிரகாசிக்கின்றன வானத் தில், எம்மருங்கும் இருள் கவிந்து நிற்கின்றது. மதியினின்று கிளம்பும் நிலாக் கற்றை நாற் புறமுங் கவிந்து நிற்கும் இருட்படலத்தை நக்கி உண்கின்றது. சந்திரனின் இருப்பும் அதிலிருந்து புறப்படுங் கதிர்களும் ஓர் அழகிய கற்பனை மூலம் விளக்கப் பெறுகின்றன. கீழ்வானத்தில் எழிலுடன் அமைக்கப்பெற்றுள்ளது ஒரு மேடை அதன் மீது வெள்ளி மயமான பூரண கும்பம் வைக்கப்பெற்றுள்ளது. அந்தக் கும்பத்தில் இளங் கமுகம்பாளை விரித்து வைக்கப்பெறுகின் றது. மங்கலத்திற்கு அடையாளமாக வைக்கப் பெறும் பூரண கும்பம் போல் காட்சியளிக்கின்ற கீழ்வானத்தில் உதயமாகும் முழு மதியம்.

இதனை அடுத்து நிலாக் கற்றை பரவும் நேர்த்தியை விளக்கக் கவிஞன் கூறுங் கற்பனை ஓவியம் நம் உள்ளத்தைப் பிணித்து நிற்கின்றது.

''நீத்தம் அதனில் முளைத்தெழுந்த
நெடுவெண் திங்கள் எனுந்தச்சன்
மீத்தன் கரங்கள் அவைபரப்பி
மிகுவெண் நிலவாம் வெண்சுதையால்
காத்த கண்ணன் மணியுந்திக்
கமல நாளத் திடைப்பண்ட
பூத்த அண்டம் பழையதென்று
புதுக்கு வானும் போன்றுளதால்''

பழைய காலத்தில் திருமாலின் திருவுந்திக் கமலத்தில் தோன்றின இந்த அண்டகோள மாகிய வீடு மிகவும் பழையதாகிவிட்டது என்று கருதுகின்றான். கடல் வெள்ளத்தில் உதித்து மேலெழுந்த நெடு வெண் திங்கள் என்னும் சிற்பி. உடனே அவன் அதனைப் புதுப்பிக்க நினைக்கின்றான். தன் கதிர்களாகிய கைகளை நாற்புரமும் பரப்பி வெள்ளிய நிலாவாகிய வெண்ணிறமுள்ள சுண்ணச் சாந்தினுல் புதுப் பிக்கின்றான். சிற்பி வீட்டிற்கு வெள்ளையடிப்பது போல், நிலாக் கற்றை நாற்புறமும் பரவி நிற் கின்றது, என்று கூறுங் கவிஞனின் கற்பனை கற்போர் கருத்தைக் கவர்கின்றதன்றோ?

**புரட்சிக் கவி காட்டும் முழுமதியம்:**

இங்ஙனம் முழு மதியத்தின் பேரழகில் ஈடுபடுகின்றனர் கவிஞர்கள். இக்காலக் கவிஞர் ஒருவர் அந்த அழகில் ஈடுபடுவதைக் காண்போம். காதல் மயக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் ஒரு கவிஞனின் வாயால் பேசுகின்றான் கவிஞன்.

''நீலவான் ஆடைக்குள் உடல்ம றைத்து
நிலாஎன்று காட்டுகின்றாள் ஒளிமு கத்தைக்
கோலமுழு துங்காட்டி விட்டால் காதல்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்கவெள்ளிப் பாற்குடமோ? அமுத ஊற்றோ
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ''

இங்குக் கவிஞன் சந்திரனை ஒரு பெண்ணாக உருவகித்துப்பாடுகின்றான். அந்தப் பெண் நீல ஆடை புனைந்து உடலையெல்லாம் மறைத்துக் கொண்டு முகத்தை மட்டும் வெளிக் காட்டுகின்றாள். அவளுடைய முழு அழகையும் காட்டி விட்டால் அவள் காதல் வெள்ளத்தில் உலகம் இறந்துபடுமோ என்று வினவுகின்றான். ''சந்திரனே! நீ வானச் சோலையில் பூத்த ஒரு தனிப் பூவோ? பாலமுதம் நிறைந்த சொக்க வெள்ளிக் குடமோ? அமுத ஊற்றோ? காலையில் கனன்று எழுந்த செவ்விய சூரியன் கடலில் மூழ்கி வெப்பத்தை இழந்து தண்ணொளி வீசும் ஒளிப் பிழம்பாக வடிவெடுத்ததோ?'' என்று நேருக்கு நேர் பேசுவது நம்மைக் கிளர்ந்தெழச் செய்கின்றது. 'பிள்ளைத் தமிழ்க்' கவிஞர்கள் 'அம்புலிப் பருவத்தில்' அமைத்துக் காட்டுங் கற்பனையெல்லாம் ஆழ்ந்திருக்கும் கவியுள்ளத்தைக் காட்டி நிற்பதாகும்.

இங்ஙனம் கவிஞர்கள் 'எழிலுடை இரு சுடர்த் தோற்றத்தை' இன்பந் ததும்ப எடுத்துக் காட்டியுள்ளனர். உள்ளக் கனிவுடன் பாடலை நுகர்பவர்கட்குத்தான் இந்த இன்பந் தட்டுப்படும். இளமையிலிருந்தே நல்ல முறையில் தரப்பெறும் இலக்கியப் பயிற்சியாலேயே அக் கனிவு பிறக்கும். அக்கனிவு பெற்றால் உலகில் எல்லாவற்றையும் இன்பமயமாகக் காணும் ஆற்றல் தோன்றக் கூடும். துன்பக் கடல் போன்ற இவ்வுலகில் இத்தகைய பாடல்கள் 'மம்மர் அறுக்கும் மருந்தாக' இருந்து அவ்வப் பொழுது சிறிதளவு விண்ணுலக இன்பத் தேன் துளிகளைப் பிலிற்றி நம்மைத் தேற்றி நிற்கின்றன.


*With the best compliments from*

**Sungu**

Venkatesaperumal Chetty & Co.,

MANUFACTURING JEWELLERS

**221, NETHAJI SUBASH CHANDRA BOSE ROAD,**

MADRAS-600001.

Phone: 32156

# ராஜராஜனின் தேவி எடுத்த கோயில்



இரா. நாகசாமி எம். ஏ.,

தமிழகத்தின் தவப் பெருஞ் செல்வன், சிவஞானச் செம்மல், சிவபாத சேகரன் என்று மக்களால் போற்றிப் புகழப்பட்ட அருண்மொழி வர்மனாகிய இராசராசன் தஞ்சையிலும், பிற இடங்களிலும் எடுத்த கோயில்கள் அருள் மிகுந்து பெரும் புகழ் எய்தியது போலவே அவனது தலைமைத் தேவி லோகமாதேவி அருங் கோயில்கள் பல எடுத்துப் புகழ் பெற்றாள். அவற்றில் அழகும் சிறப்பும் நிறைந்தது திருவையாற்றில் அத் தேவி எடுத்த லோகமாதேவீச்சுரம். அக் கோயில் இப்பொழுது உத்தர கைலாயம் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலில் பல வரலாற்றுச் சிறப்புடைய கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இராசராசன், இராசேந்திரன், இராசாதிராசன் முதலிய புகழ்பெற்ற மன்னர்களின் கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன. பெரும் பொருள் செலவு செய்து இக் கல்வெட்டுக்களை வண்ணம் பூசி மறைத்திருக்கின்றார்கள்.

இங்குப் படியெடுக்கப்பட்ட எட்டுக் கல்வெட்டுக்கள், தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் தொகுதி 3-ல் அச்சிடப் பெற்றுள்ளன. அதில் உள்ள செய்திகள் ஆராயத்தக்கவை.

திருவையாறு கோயிலில் மூலக் கோயில் ஒன்றும், இரண்டு சிறு ஆலயங்களும் உள்ளன. மூலக் கோயிலைத் 'திரு ஐயாற்று மகாதேவர்' என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இக்கோயிலின் தென்புறத்தேயுள்ள சிற்றாலயத்தைத் 'தென் கயிலாயம்' (தட்சிண கைலாசம்) என்றும், வடபால் உள்ள ஆலயத்தை 'வட கயிலாயம்' (உத்தர கைலாசம்) என்றும் இப்போது அழைக்கிறார்கள். வட கைலாயத்தை இராசராசனின் தனிப் பெருந் தேவி உலோக மகாதேவி கட்டுவித்தாள். அத்தேவியால் கட்டுவிக்கப்பட்டது ஆதலின் 'உலோக மாதேவீச்சுரம்' எனும் பெயரால் இக்கோயில் விளங்கியது.

இங்கு எட்டுக் கல்வெட்டுக்கள் உள்ளன. ஐந்து கல்வெட்டுக்கள் இராசராசன் காலத்தவை. இரண்டு கல்வெட்டுக்கள் அவனது அருமை மகன் ஆற்றல்மிகுந்த முதலாம் இராசேந்திர சோழன் காலத்தவை. ஒரு கல்வெட்டு இராசேந்திரனின் தலைமகனும் தன் வாழ்நாள் முழுவதும் போர் முரசு கொட்டிப் பல்வேறு போர்க்களங்களிலும் வெற்றி வாகை சூடி இறுதியிலும் ஆனைமேல் அமர்ந்து போர்க்களத்திலே விண்ணுலகெய்தியவனும், கொல்லாபுரமும் கல்யாணபுரமுங் கொண்டு, 'ஆனைமேல் துஞ்சிய அண்ணல்' என்று புகழ் கொண்டவனுமான முதல் இராசாதிராசன் காலத்தது.

இக் கல்வெட்டுக்களில் மிகவும் தொன்மையானது இராசராசனின் இருபத்தொன்றும் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஆகும். இக் கல்வெட்டில் ''ஸ்ரீ ராஜராஜ தேவர் நம்பிராட்டியார் தந்திசக்தி விடங்கியாரான ஒலோக மஹா தேவியார் திருவையாற்றில் எடுப்பித்தருளின ஒலோக மஹாதேவீச்சுரம்'' என்று குறிக்கப்பட்டுள்ளதிலிருந்து இக்கோயிலை அத் தேவியார் கட்டினார் என்று அறிகிறோம். ஆதலின் இக் கோயில் இராசராசனின் சற்றேறக் குறைய 20ஆம் ஆட்சியாண்டில் கட்டப்பெற்றிருத்தல் வேண்டும்.

இராசராசனுடைய கல்வெட்டுக்கள், 21, 22, 24, 29ஆம் ஆட்சியாண்டுகளில் பொறிக்கப்பட்டவை. அதாவது தஞ்சையில் பெருங் கோயில் கட்டி முடிவடையும் சமயத்தே, இக் கோயில் எழுப்பப்பெற்றுள்ளது. தஞ்சையில் தன் தலைவன் ஓர் ஒப்பருங் கோயிலைத் தோற்றுவிக்கத் தானும் அதுபோன்று புகழ் மிக்க கோயில் ஒன்றைத் தன் பெண்மைக்கு ஏற்ப, அதே சமயத்தில் தோற்றுவித்திருக்கிறாள் என்பதை நோக்கும்போது அத் தேவியின் ஆர்வம், கலைமீது கொண்ட ஈடுபாடு, சிவபிரானிடத்துக் கொண்ட பக்தி எவ்வளவு சிறந்ததென்பது தெளிவாகிறது. அது மட்டுமல்ல ; அவள் விட்டுச் சென்றுள்ள கல்வெட்டுக்களில் இருந்து அருஞ் செய்திகள் பல, வரலாறு பற்றியும், சமுதாயத்தில் பெண்களின் உரிமை பற்றியும், அனைத்திற்கும் மேலாக எவ்வளவு சிந்தனைத் தெளிவும், செயலாற்றும் திறனும் உடையவனாக இராசராசன் திகழ்ந்தானோ அதே அளவுக்கு அவனது தலைமைத் தனித் தேவியும் திறம் பூண்டு திகழ்ந்தாள் என்றும் அறிகிறோம்.

இந்தக் கோயிலிலே உறைகின்ற பரம் பொருளை ''லோக மஹா தேவீச்சுரத்து மஹா தேவர்'' என்று அழைத்து அத் தேவி வழிபட்டாள். உள்ளே உறைகின்ற லிங்கத்தின் உரு சிவபிரானின் செப்புத் திருவுருவங்களைச் செய்து அவற்றிற்கு 'ஒலோக விடங்கத் தேவர்' என்றும், 'ஒலோக விடங்க தேவர் நம்பிராட்டியார்'

என்றும் பெயர் சூட்டி இருவருக்கும் இடையிலே திகழ்கின்ற ஞானத் தெய்வமாக முருகனைத் தோற்றுவித்து அவனைப் 'பிள்ளையார் சுப்பிர மணிய தேவர்' என்றும் அழைத்து மகிழ்ந்தாள். இத் தெய்வத் திருமேனிகளை அலங்கரித்து வணங்கி வழிபடப் பல அணிகலன்களும், வழிபாட்டுக்குத் தேவையான பரிகலன்களும் தங்கத்தாலும், வெள்ளியாலும், செம்பாலும் செய்தளித்து மகிழ்ந்தாள். தானே இவை அனைத்தையும் கல்லிலே வெட்டி வைக்க ஆணை யிட்டாள். இவ்வாணையை ஏற்றுச் செயல் படுத்த வேண்டியவர்கள் 'உடன் கூட்டத்து அதிகாரிகள்' என்று குறிக்கப்படுகின்றனர். இவ்வழகிய கல்வெட்டு வாசகங்களைக் காண் போம்.

''ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு 24-வது உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் நம்பிராட்டியார் தந்தி சக்தி விடங்கி யாரான ஸ்ரீ உலோக மாதேவியார் வடகரை இராஜேந்திர சிம்ம வள நாட்டுப் பொய்கை நாட்டுத் திருவை யாற்றுப்பால் நாம் எடுப்பித்த திருக் கற்றளி உலோக மஹாதேவீச்சுரம் உடைய மஹாதேவர்க்கும் லோக விடங்க தேவர் உள்ளிட்ட திருமேனி களுக்கும் செய்வித்த பொற்கொள்கை முதலிய உள்ள திருவாபரணங்களும் திருப்பரிகலங்களும், கல்லிலே வெட்டு விக்க என்று உடன் கூட்டத்து அதி காரம் செய்கின்ற கோவலூருடைய காடன் நூற்றுஎண்மனையும் அதிகா ரிச்சி எருதன் குஞ்சரமல்லியையும் அருளிச் செய்யக் கல்வெட்டினபடி''

என்று உள்ளது.

கல்வெட்டின் இப் பகுதியிலிருந்து லோக மகா தேவி தானே ஆணையிட்டாள் என்றறிகி றோம். 'நாம் எடுப்பித்த திருக்கற்றளி' என் றும், 'கல்லிலே வெட்டுவிக்க என்று அருளிச் செய்ய' என்றும் குறிப்பிட்டுள்ளது தஞ்சையில் பெருங்கோயிலைத் தோற்றுவித்த இராசராசன், ''தஞ்சாவூர் நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஸ்ரீராஜ ராஜீச்சுரமுடையார்க்கு நாம் கொடுத் தனவும், நம்அக்கன் கொடுத்தனவும், மற்றும் கொடுத்தார் கொடுத்தனவும் கல்லிலே வெட் டுக'' என அவன் குறிப்பிட்டுள்ளதைப் லோவே, அவன் தேவியும் இங்கே ஆணையிட் டுள்ளது கண்டு இன்புறத் தக்கது.

இப் பகுதியில் மற்றொரு சிறப்பு, இத்தேவி யின் உடன் கூட்டத்து அதிகாரிகள் இருவர், உடன் குறிக்கப்பட்டுள்ளது ஆகும். இவர்களில் ஒருவர் பெண் அதிகாரி என்பது மிகவும் சிறப் பான செய்தியாகும். அரசியினுடைய ஆணையை ஏற்றுச் செயல்படுத்துபவர்களில் ஒருவர் பெண் ணும், மற்றொருவர் ஆணுமாக இருப்பதோடு இருவரும் சம அதிகாரம் பெற்றுள்ளனர் என்ப தையுங் காண்கின்றோம். சோழர் அரசியல் அமைப்பில் ஆண்களைப் போலவே பெண் அதி காரிகளும் இருந்திருக்கின்றனர் என்பதையும், ஆண்களுக்கிருந்த அதிகாரங்களைப் பெண்களும் சமமாகப் பெற்றிருந்தார்கள் என்றும் அறிகி றோம். இது இக் கல்வெட்டில் மட்டுமல்ல, இங்குள்ள மற்றொரு கல்வெட்டிலிருந்தும் இராசாதிராசன் காலத்திலும் ஒரு பெண் அதிகாரி (அதிகாரிச்சி) இருந்தாள் என்பதை அறிகிறோம்.

உலோக மஹாதேவி லோகவிடங்க தேவர்க்குக் கீழ்க்கண்ட அணிகலன்களைக் கொடுத்திருக்கிறாள். முடி, குதம்பை, தாழக் கூட்டுக் கம்பி, மாலை, தனி வடம், திரிசரம், (மூன்று வடம்), பஞ்ச சரி (ஐந்து வடம்), ஸ்ரீசந்தம், முத்து வளையல், முத்துப் பட்டிகை, பொன்னாலான கால்காறை ஆகியவற்றைக் கொடுத்திருக்கிறாள். இவை ஏராளமான பொற் கழஞ்சுகளால் செய்யப்பட்டு, மாணிக்கம், வைரம், நீலம் முதலிய விலையுயர்ந்த இரத்தி னங்கள் பதிக்கப் பெற்றவையாகத் திகழ்ந்தன. இதைக் கல்வெட்டில் கீழ்வருமாறு குறித்துள் ளனர் :

''லோக விடங்க தேவர் சாத்தியருளும் முடி ஒன்று, பொன் நிறை நூற்று ஐங்கழஞ்சரை; மேற்படியில் கட்டின மாணிக் கம் 21; வைரம் 102; நீலம் 1 ; தருப்பு 64; பொத்தி 79; சப்பிர யோகம் 240; மேற்படியில் கட்டின தகட்டுப் பொன் முக்கழஞ்சு, மேற்படியில் கோத்த முத்து 573; மேற்படியில் கோத்த வெள்ளிக் கழஞ்சு''

இதுபோன்ற ஒவ்வொரு அணியும் எவ்வ ளவு கழஞ்சு பொன்னால் செய்யப்பட்டது ; அதில் பதிக்கப்பெற்ற இரத்தினங்கள், முத்துக் கள் முதலியன அனைத்தும் கல்வெட்டில் தெளிவாகக் குறிக்கப்பெற்றுள்ளன. இதே போன்று உலோக விடங்கரின் நம்பிராட்டியார் என்னும் தெய்வத் திருமேனிக்கும் இதே அணிகலன்களை இத் தேவி கொடுத்து மகிழ்ந் திருக்கின்றாள். இவ்வுருவங்களுடன் உடனிருந்த சுப்பிரமணியருக்கு முடி ஒன்றும், சுட்டி ஒன் றும், குலம் ஒன்றும், இடுக்கு வளையல் இரண் டும் கொடுத்திருக்கிறாள். இதிலிருந்து உலோக விடங்க தேவர் என்னும் தெய்வ உரு சோமாச கந்த உருவாம் என்பது தெளிவாகிறது. தஞ் சைப் பெருங்கோயிலில் இராசராசன் 'தட்சிண மேருவிடங்கன்' என்னும் ஒரு தெய்வத் திரு வுருவைத் தோற்றுவித்தான் என்பதை அங்கு உள்ள கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இவை தவிரத் தங்கத்தினால் செய்யப்பட்ட தாமரை மலர்கள் எழுபத்தொன்றை இத் தெய்வத்தின் காலடியில் அட்டி இத் தேவி தொழுதிருக்கிறாள். இன்னும் பொன்னினால் ஆன பல தளிகை, ஒட்டுவட்டில், மடல், மான வட்டில், சாமரக்கை, ஈச்சோப்பிக்கை, பள்ளித் தொங்கல், மகுடம் ஆகிய பரிகலன்களைக் கொடுத்திருக்கின்றாள். தளிகை, மண்டை, கலசம், சட்டுவம் ஆய பரிகலன்கள் வெள்ளியா லும், தளிகை, பளித்தாலம் கைவட்டகை,

காளம், துத்துரு முதலியவற்றைச் செம்பாலும் செய்து கொடுத்திருக்கிருள். மேலும் கெண்டி, சங்குக் கால், சட்டிக் கால், அட்டணைக் கால், தூப பாத்திரம், குடை, தூங்கு விளக்கு, ஆக்குப்பானைக் கால், சருவம், சருவச் சட்டி, இலைத் தட்டு, காகமுகிழ், சட்டுவம், எரிமணி, தூபமணி, சேகண்டிகை, கைமணி முதலியன கொடுத்திருக்கிருள். இவற்றில் பல தராவாலும், சிலவெண்கலத்தாலும்செய்யப்பட்டவை. விளக்குகளைப் பற்றிய சில குறிப்புகள் சிறப்பாக உள்ளன. ஈழச்சியல் விளக்கு, மலையாஞ்சியல் விளக்கு, சோழிச்சியல் விளக்கு என மூன்று வகையான விளக்குகள் குறிக்கப்படுகின்றன. இவை சில நாட்டுப் பெயர்களைக் கொண்டு விளங்குவதிலிருந்து அந்தந்த நாட்டில் புகழ் பெற்ற படிவங்கள் போலும்! தற்காலத்தில் மலையாளத்து விளக்கு என்று கூறுதல் போல.

உலோக மகாதேவி இக்கோயிலுக்கு அழகிய கண்ணுடி ஒன்று கொடுத்திருக்கின்ருள். அக் கண்ணுடியைப் பாவைக் கண்ணுடி என்று அழைக்கிருள். இது செம்பால் செய்யப் பெற்றிருந்தது. செம்பின்மேல் பொன்தகடு போர்த்தப் பெற்றிருந்தது. இது சாதாரணக் கண்ணுடியல்ல. இசையிலும் கூத்திலும் மெய் மறந்த நிலையில் வடிக்கப்பெற்றஎழில் கொஞ்சும் பெண் பொம்மைகளால் அலங்கரிக்கப் பெற்ற கலைக் கண்ணுடி அது. ஒரு கண்ணுடியைக்கூட நுண்ணிய கலைத் திறன் நிறைந்ததாக அதைக் காணும்போதே காண்போர் தம் இசையிலும் கூத்திலும் லயித்துப் பாவைகளின் அழகிலே மெய் மறக்கச் செய்யும் ஒப்பருங் கலைப் படைப்பாகத் தோற்றுவித்து மகிழ்ந்திடுகிருள், உலோக மஹாதேவி. அவளுக்குக் கலைபால் உள்ள ஈடுபாட்டிற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு எனலாம். அதைக் கல்வெட்டில், ''செம்பின் மேல் பொன் கடுக்கின பாவைக் கண்ணுடியில் ஆடுகிற பாவை ஒன்று; மத்தளம் கொட்டுகிற பாவை ஒன்று; உடுக்கை வாசிக்கிற பாவை ஒன்று; பாடுகிற பாவை ஒன்று; பீடம் ஒன்று உட்படக் கண்ணுடி ஒன்று'' என்று குறித்துள்ளதிலிருந்து எழுத்திலே வடித்துக் காட்டுவதில் கூட எவ்வளவு ஆர்வங் காட்டினுள் என்பதை அறியலாம்.

இத்துடன் இராசேந்திர சோழனுடைய நான்காவது ஆட்சியாண்டுக் கல்வெட்டும் கவனிக்கத் தக்கது. இக்கோயிலில்தட்டாரப் பணி செய்த ஒருவன் அதில் குறிக்கப்பெறுகிருன். அவனுக்குச் சக்கடி கழுதையன் என்பது பெயர். அவன் அணிகலன்கள் செய்வதிலே சிறந்த வல்லமை படைத்தவன் என்று அறிகின்ருேம். அதனுல், 'செம்பியன் மாதேவி பெருந் தட்டான்' என்று அரசால் பட்டம் அளிக்கப் பெற்றுச் சிறப்பிக்கப் பெற்ருன். அவனுக்கு உலோக மஹாதேவி இக்கோயிலிலே தட்டாரப் பணி அளித்துத், தட்டாரக்காணி அளித்திருக்கிருள். அதையே மேற்குறித்த கல்வெட்டுக் குறிக்கிறது. இதிலிருந்து மற்றென்றும் நாம் அறியலாம். லோகவிடங்க தேவருக்கு, உலோக மாதேவி செய்தளித்த அணிகலன்கள் அனைத்தையும், செம்பியன்மாதேவிப் பெருந்தட்டானே செய்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

உலோக மஹாதேவி இக்கோவிலுக்குக் கொடுத்த தானத்தை இராசராசன் காலத்தைய மற்றெரு கல்வெட்டுங் குறிக்கிறது. உலோக மஹாதேவீச்சுரத்துக்குக் கோயிலிலே பூசை செய்தவர்களுக்கு, இராசராசனின் தேவி விற்றுக் கொடுத்த நிலத்தை இக் கல்வெட்டுக் கூறுகிறது. இந் நிலத்தின் எல்லைகள் குறிக்கப் பெற்றுள்ளது மிகவும் சிறப்பாக உள்ளது. திருவையாறுடையார் கோயிலில் பெரிய திருச்சுற்றலை இருந்தது. அதன் வட கிழக்கு மூலையில் இருந்து தானம் கொடுக்கப்பட்ட நில எல்லை தொடங்கியது.

இந்த நிலம் திருவையாற்று மகாதேவர் கோயிலைச் சார்ந்தது. உலோக மகாதேவீச்சுரத்துக்கு விற்றுக் கொடுக்கப்பட்டது. இதை விற்றுக்கொடுத்தவர்கள் கோயில் சிவப்பிராம் மணர், தச்சர், நட்டுவம் செய்வார், கணக்கர், வணிகர் முதலியோர் ஆவர்.

இராசராசனுடைய கல்வெட்டுக்களில் மேலும் இரண்டு கல்வெட்டுக்கள் குறிக்கத் தக்கவை. 29-ஆவது ஆட்சியாண்டையது ஒன்று. இதில் கீழைச் சாளுக்கிய மன்னன் விமலாதித்த தேவன் இக் கோயிலுக்குக் கொடுத்த வெள்ளிக் கலசம் குறிக்கப்பட்டுள்ளது. விமலாதித்தனுக்கு 'விஷ்ணு வர்த்தன மஹாராஜா' என்ற பெயர் உண்டு. கீழைச் சாளுக்கிய நாடு சற்று ஆட்டங்கண்டபோது இராசராசன் விமலாதித்தனுக்குத் தன் மகள் குந்தவையை மணம் செய்து கொடுத்துத் தன் அருகிலேயே வைத்திருந்தான். பிறகு கீழைச் சாளுக்கிய நாட்டை அடிப்படுத்தி அதை விமலாதித்தனுக்கு அளித்தான். விமலாதித்தனுக்கும், குந்தவைக்கும் பிறந்த மகவுக்கு இராசராசனின் பெயரே இடப்பட்டது. விமலாதித்தன் தஞ்சையில் இருந்தபோது அவன்கொடுத்த தானங்களை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. விமலாதித்தன் இராசேந்திர சோழனின் காலத்திலும், முதலாம் இராசாதிராசன் காலத்திலும் இக் கோயிலுக்குப் பல தானங்கள் அளித்திருக்கிருன். அதிலிருந்து தன் மாமி எடுப்பித்த கோயிலின்பால் விமலாதித்தன் சிறந்த ஈடுபாடு கொண்டிருந்தான் என்பது பெறப்படுகிறது.

இதே கோயிலுக்குச் சாளுக்கிய நாட்டைச் சார்ந்த ஒருத்தியுந் தானம் அளித்திருக்கிருள். 'அவள் சாளுக்கிய வீமையன் தேவி வஞ்சயன் பெற்றப்பை மகள் வீமய்யன் வம்பவை' என்பவள் ஆம்.

முதல் இராசாதிராசனின் கல்வெட்டு ஒன்றும் இக் கோயிலில் இன்றியமையாத செய்திகளைத் தருகிறது. 32-ஆம் ஆட்சி ஆண்டில் விமலாதித்தன் இக் கோயிலுக்குக்கொடுத்த கொடைகளை இக் கோயிலைச் சார்ந்த பலர் கண்காணிப்பதாக ஏற்றுக் கொண்டனர். இங்கு அரசு அதிகாரிகளாக இருவர் குறிக்கப்பட்டுள்ளனர். இவ்விருவரில் ஒருவர் பெண் அதிகாரி

(அதிகாரிச்சி). சோமய்யன் அமித்திரவல்லி என்பது அவளது பெயர். மற்ற அதிகாரியின் பெயர் அனுத்திரப் பல்லவராயன். இவர்களைத் தவிரப் பின்வருபவர்களும் குறிக்கப்பெற்றுள் ளனர்.

1. ஸ்தானம் உடையார் செல்வன் மயிலை.

2. திருவாராதனை செய்வார் ஆத்ரேயன் தம்பி காடநம்பி.

3. மானமுதலிபாரதாயன் செல்வன் அரங் கனுன ராஜமார்த்தாண்ட பிரம்மராயன்.

4. வண்ணக்குச் சாத்தன் நின்றுனை வீர சோழ அணுக்கமாயிலட்டி.

5. (அ) பதியிலாள் நக்கள் அரங்கம் ஆன ஜெயங்கொண்ட சோழத் தலைக்கோலி.

(ஆ) நக்கன் பூமியான பரமார்க்க விடங்கத் தலைக்கோலி.

(இ) நக்கன் சோழ விச்சாதிரியான லோகமாதேவி தலைக்கோலி.

6. கரணத்தான் கேசவன் மதுராந்தகன்.

7. பொற்பண்டாரி மணிமாத்தி மாதவக் கிரமவித்தன்.

இவர்கள் அனைவரும் விமலாதித்தன் கொடுத்த தானங்களைப் பெற்றுக் கோயிலில் தானத்தில் குறிப்பிட்டுள்ளபடி நடத்துவிப்ப தாக ஏற்றுக்கொண்டார்கள்.

சோழர் காலத்தில் பெண் அதிகாரிகள், இருந்தனர் என்பதை முன்னரே குறிப்பிட்டுள் ளோம். இக் கல்வெட்டிலிருந்து கோயிலில் இருந்த பல்வேறு பணிகள் யாவை, உலோகமா தேவி கோயிலில் பணி புரிந்தவர்கள் யாவர் என்பதை அறிகிறோம். இராசராசன் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களைப் போலவே திருவை யாற்றில் லோகமஹாதேவி எடுப்பித்த கோயி லில் இருந்தும் அத்தேவியின் பல்துறைச் சிறப்புக் களையும் நம்மால் அறிய முடிகிறது.



கோவை மாவட்டம் வெள்ள கோவில் அருள்மிகு வீரக்குமாரசுவாமி திருக்கோயிலின் திருப்பணிக்கால்கோள் விழாவில் அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் உறைநிகழ்த்துகிறார்கள். மேடையில் திருப்பணி குழுத்தலைவர் திரு. மு. பழனிசாமி எம். எல். ஏ., துணை ஆணையர் திரு. சு. கோபால கிருஷ்ணன் பி.எஸ்ஸி அவர்களும், மற்றும் அறங்காவலர்களும் இருக்கின்றனர்.

# திருவாசகத்தேன்



திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் B.A.B.L

''தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்''

தமிழகத்தில் சைவநன்மக்களால் தெய்வ நிலையில் வைத்துப் போற்றப்பெறும் சமய குரவர் நால்வருள், திருவாதவூரடிகள் ஒருவர். இவருக்கு, மாணிக்கவாசகர், மணிவாசகர், அருள்வாசகர், பெருந்துறைப்பிள்ளை, ஆளுடைய அடிகள், அழுதடி அடைந்த அன்பர், வாத வூரிறை, வாதவூர்மணி, வாதவூர்நாயகன் முதலிய வேறுபல பெயர்களும் வழங்குகின்றன.

மணிவாசகர் அருளிய திருவாசகம் என்னும் தெய்வத் தமிழ்மறை, தமிழ்மொழியில் சிறந்த இலக்கியச் சுடர்மணியாகவும், ஞானக் கருவூல மாகவும் திகழ்கின்றது. இவ் அருள்நூல், திருக் கோவையாருடன் சேர்ந்து, சைவத் திருமுறை கள் பன்னிரண்டில் எட்டாவது திருமுறையாக அமைந்துள்ளது. மணிவாசகர் வாழ்ந்தருளிய காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டு என்பது இன்று இறுதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்நூலுக்கும், மணிவாசகம் மதுரவாச கம் வாசகமாலை ஞானப்பனுவல் மணிவார்த்தை முதலிய வேறுபல திருநாமங்களும் வழங்கி வரு கின்றன. வாசகத்தேன் என்னும் மற்றெரு சிறப்புப் பெயரையும் சிவப்பிரகாச சுவாமி களும், முதலிற் பாடிய வெண்பாவின் ஆசிரிய ரும் திருவாசகத்துக்கு வழங்கியுள்ளனர். இப் பெயர்தான் திருவாசகம் என்ற நூலுக்கு மிக வும் பொருந்திய தொன்றாகும். நாம் குடித்துப் பழகும் செந்தேன், நமது உடலுக்கு வலிவூட்டி நம் குரலின் இனிமையைப் பெருக்கி, வயிற்றின் மலம் கழித்து, நம் பித்தம் தணிவித்து, நம் உடல்நோய்கள் அனைத்தையும் ஒழிக்கும் ஆற் றல் படைத்தது. அதுபோல நாம் படித்துப் பருகும் திருவாசகத்தேன் ஆனது, நமது ஆன்மா விற்கு வலிவூட்டி, நம் ஆன்மத் தொனிக்கு இனிமையேற்றி, அதில் மிகுதியும் பயின்றோர்க் குள்ள மும்மலங்களையும் கழுவி, மாயேயமாகிற பித்தத்தையும் தணிவித்து, நம் உயிரைப் பற்றிய பிறவிநோயையும் தீர்த்தொழிக்கும் ஆற்றல் பெற்றதாகும். இத்தகைய இன்பத் தேனுகிய இத் திருவாசகத்தை இதயம் கலந்து பாடி அனுபவித்த வடலூர் இராமலிங்க வள்ள லின் திருப்பாட்டைக் கேட்போம்.

''வான் கலந்த மாணிக்க
வாசக நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து,
செழுங்கனித் தீஞ்சுவைகலந்தும்
ஊன் கலந்தும் உயிர்கலந்தும்
உவட்டாமல் இனிப்பதுவே''

தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதமாகிய மாணிக்கவாசகனர் திருவாய் மலர்ந்துள்ள மாமறையாகிய திருவாசகம் என்னும் நூலே ஓர் இன்பத் தேன் ஊற்ருக இருப்பதுடன், அந் நூலால் புகழ்ந்து பாடப்பெற்றுள்ள சிவபெரு மானும்கூடத் தேனக மிளிர்ந்து தித்திக்கும் பான்மையர் ஆவர் என்பதும் கண்கூடு.

''எந்தை எந்தாய் சுற்றம்மற்றும்
எல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை
ஆண்டு கொண்டபாண்டிப்பிரான்
அந்த இடை மருதில்
ஆனந்த தேனிருந்த
பொந்தைப் பரவி நாம்
பூவல்லி கொய்யாமோ!''

''நானேயோ தவம் செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்
தேனய் இன்னமுதமுமாய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனரும் உயிர்வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே''

''தினைத்தனை உள்ளதோர்
பூவினில் தேன் உண்ணுதே
நினைத்தொறும் காண்தொறும்
பேசும்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக
ஆனந்தத் தேன் சொரியும்
குனிப் புடையானுக்கே
சென் றூ தாய் கோத்தும்பீ''

இனித் திருவாசகம் என்னும் பெயரின் பொருட்சிறப்பைச் சிறிது காண்போம். நிறை புலமைச் சான்றோராகிய மறைமலையடிகளார் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''திருவாசகம் என்பது, 'பிறி தொன்றற் கில்லாத அழகினை யுடைய வாசகம்' என்னும் பொருட்டாம். 'திருவாசகம்' வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; இதனை ஆகுபெயர் என்பாருமுளர். ஆயினும், உண்மையின் நோக்குவார்க்கு இஃது அன்மொழித் தொகையே யாவதல்லது, ஆகு பெயர்ஆகாமை உணர்க' என்று ஆசிரியர் சிவ ஞானயோகிகள் கூறுதலின் ஈண்டுக் கூறியதே பொருத்தமாம் என்க.

தன்னைக் கற்பார் உள்ளத்தை உருகச் செய்து அவரைப் பேரின்பப் பெருக்கில் ஆழ்த்து தற்குப் பிறிது எந்நூலுக்கும் இல்லாத அழகினை இத்திருவாசகநூல் உடைமையால், இதனினும் மேலான அழகினைப் பெற்ற வேறொரு நூல் இல்லை என்பது தேற்றமாம். அன்பு பொதிந்த இதன் செய்யுட்களை ஓதுந்தோறும் நினைக்குந் தோறும், நெஞ்சம் நெக்குருகக், கண்ணீர் பெருக, நாவுரை குழற, மெய்ம்மயிர் சிலிப்பப், பேரின்ப வெள்ளம் கிளர்ந்தெழுதல் யாவர் மாட்டும் காணப்படுதலானும், தொடர்புபட்டு நிகழும் இத்தகைய பேரின்ப நிகழ்ச்சி மற்றை நூல்களை ஓதுவார் நினைப்பாரிடத்துக் காணப் படாமையானும், இத்திருவாசகம் ஒன்றே ஏனை நூல்களுக்கில்லாத அழகினை உடையது என்பது தெளியப்படும்'' இது மறைமலையடிகள் தம் கூற்றும்.

மற்றுமோர் உரையாசிரியர் கூறுகிறார்:

''எந்நாட்டவராலும், எக்காலத்தவரா லும் உள்ளம் உகந்து ஏற்றுக்கொள்ளுமாறு, என்றும் நிலைத்த பண்புகளையோ, உண்மை களையோ, நெறிகளையோ, சிந்தைக்கும் செவிக்கும் இனிய செஞ்சொற்களால் உரைப்பதே சிறந்த இலக்கியமென அறிஞர் ஓர் இலக்கணம் வகுப் பாராதல், திருவாசகம் உலக இலக்கியங்களுள் தலைசிறந்த ஒன்றாகும் என நாம் உறுதியாகக் கொள்ளலாம். திருவாசகத்தில் பேசப்பெறும் செய்தியானது, காலம் இடம் என்னும் பாகு பாடுகளைக் கடந்து, சிந்தை செல்லாச் சேணகத் ததாய், முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ப், பின்னைப் புதுமைக்கும் பின்னைப் புதுமையதாய் நின்றதொரு பேரருட் பிழம்பைப் பற்றியதும், அவ் அருள் ஒளியை நாடிச் சென்று கலந்த ஒரு சிற்றுயிர்க்கு உற்ற பலதிறப்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றியதும் ஆகும். சிந்தை சென்று அணுகிலாதவைகளைப் பண் இனிமையும் பொருட்செறிவும் மிக்க சொற் களால் அமைத்துக் கற்பவர் பயிற்சிக்கும் பண் புக்கும், முதிர்ச்சிக்கும் ஏற்பப் பொருள் தரு மாறு மக்கள் உலகத்துக்கு அளித்த வள்ளன்மை திருவாசகத்துக்கே உரியதாகும். வினையின் நீங்கி விளங்கிய அறிவின், முனைவராகிய மணி வாசகப் பெருமான், சிவானந்த வெள்ளத்தில் திளைத்து அருளிய இம் முழுமுதல் நூலாகிய திருவாசகம், உலக இலக்கியங்களுள் ஒரு தனி இடம் வகிப்பதாகும். இந்நூல் மொழிக்கு மொழி தேன் ஒழுகும் தன்மையது. இது பத்திச் சுவை நனி சொட்டச் சொட்ட நம் உள்ளத்தை உருக்கும் பான்மையது. பலமுகங் களும், பட்டைகளும் தீர்ந்த ஒரு வைரக்குன் றம், எவ்வாறு கதிர் ஒளிக்கு ஏற்பவும், காண் போர் நிற்கும் கோணத்திற்கேற்பவும், சிறந்த தன் ஒளியின் பகுதிகளைக் காட்டுமோ, அவ்வாறு பொருள் காட்டி உணர்வூட்டுவது இத் தெய்வ நூல், ஒவ்வொரு சொல்லும் நம்மை உணர்வு தந்து உய்யக் கொள்ளத் தக்கது. சித்தம் சிவ மான செம்மலின் செஞ்சொற் றொகுதியே திருவாசகம்''

''நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாய கன்'', சிவபிரான் என்கிறார் வாதவூரடிகள். ''அவனருளாலே அவன்றாள் வணங்கிச் சிவன ருள் செறிந்த தீந்தமிழ் மொழியால் திருவாச கம் பாடிய வாதவூர் வள்ளல், தாம் ''சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார், செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப் பல்லோரும் ஏத்தப் பணிந்து'' என்று அறுதி யிட்டுக் கூறுகின்றார். அவர் சொல்லிய பாட் டாகிய திருவாசகத்தின் பொருள் அம்பலத்துள் நட்டம் பயின்றாடும் நாதனே தான் என்று மணி வாசகப்பெருமானே அன்று தில்லை மூவாயி வர்க்கு அறிவுறுத்தியுள்ளார். அதனால்தான் சிவப்பிரகாச சுவாமிகள்,

''பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசகம், அதற்கு வாச்சியம்
தூசகல் அல்குல் வேய்த் தோளிடத்தவனே''

என்று பாடுகின்றார். எனவே திருவாசகமும் சிவபெருமானும் சொல்லும் பொருளும்போல் ஒன்றித்து நிற்கின்றதைக் காண்கின்றோம். அதேபோலத் திருவாசகத்திற்கும் நடராசா விற்கும் பல பொருத்தங்கள் இருப்பதையும் நாம் கண்கிறோம்.

நடராசப் பெருமானே ஓங்காரமாகிய பிரணவ வடிவினர். அவர் தம் கரத்திலுள்ள துடியை முதன்முதலாக ஒலித்தார். அவ் ஆதி ஒலியாகிய 'ஓம்' எனும் பிரணவம் கீழே வீழ்வ தற்குள் 51 எழுத்துக்களாகப் பிரிந்து பரிண மித்து ஒலித்தது. அந்த 51 அட்சரங்கள்தாம் வர்ணம் எனப்பட்டன. அந்த வர்ணமும், பதம், மந்திரம் என்று விரியலாயிற்று. ஆகை யால் மந்திரம் சமஷ்டி (தொகுநிலை), 51 அட்ச ரங்கள் வியஷ்டி (தனிநிலை) அதே போலத் திரு வாசகம் ஆகிய மந்திரம் சமஷ்டி; அதன் 51 அதிகாரங்கள் வியஷ்டி. அதாவது ஓங்காரத்தி லிருந்து மந்திரங்கள் அனைத்தும் பிறப்பதைப் போல, ஓங்காரத்திலிருந்தே இந்தத் தமிழ் மந்திரமாகிய திருவாசகமும் பிறந்துள்ளது. இதன் காரணமாக ஏற்பட்டுள்ள இந்நூலின் மந்திர சக்தியை அனுபவித்துச் சிவானுபவச் சிகரத்தில் வதிந்த இராமலிங்க வள்ளலார்,

''வருமொழி செய் மாணிக்க
வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையும் என்
உடையனையும் ஒன்றுவித்துத்
தருமொழியாம் என்னில் இனிச்
சாதக மேன் சஞ்சலமேன்,
குருமொழியை விரும்பி அயல்
கூடுவதேன் கூறுதியே''

என்று வாதவூரடிகளையே நோக்கி வினவுகின்றார். அதேபோல ''மதுரவாசகம் ஓதின் முத்தி உறு பயன்'' என்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள்.

# கொங்குநாட்டில் வருணதேவன் வழிபாடு

மா. சுந்திரமூர்த்தி. எம். ஏ.,

உலகில் பல பகுதிகளில் வாழும் ஆதிவாசிகளிடமும், உழவர்களிடமும் மழையை வேண்டி கடவுளை வணங்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. இத்தகைய வழக்கத்தை தமிழகத்திலும் தொன்றுதொட்டு காணலாம். மழை வேண்டி குறிஞ்சி நிலத்தில் உள்ள குறவர்கள் தெய்வத்தை வழிபட்டார்கள் என்பதனைச் சங்க இலக்கியங்கள் எடுத்துக் கூறும். தமிழ் நாட்டில் மழையை வேண்டி செய்யும் சடங்குகளாக 'கொடும்பாவி கட்டி இழுத்தல்', 'மழைக் கஞ்சி எடுத்தல்' போன்ற வழக்கங்கள் இன்றும் உள்ளன.

இச்சடங்குகள் தொடர்பாக மக்கள் பல வாய்மொழி இலக்கியங்களையும் தொன்றுதொட்டு பாடி வருகின்றனர். இவ் வாய்மொழி இலக்கியங்கள் இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப பல மாற்றங்களுடன் விளங்குகின்றன. பொதுவாக மழை பெய்யாத காலங்களிலும், மழை மிகுதியாக பெய்து மகிழ்ச்சி பெற்ற நேரங்களிலும், மழை தேவைக்கு மேல் மிகுதியாகப் பெய்து பாதிக்கப்பட்ட காலங்களிலும் கிராம மக்கள் பல நாட்டுப் பாடல்கள் பாடுவதுண்டு.

குறிப்பாக இக் கட்டுரையில் திருச்சி மாவட்டம், கருவூர்ப் பகுதியில் உள்ள நாட்டுப் பாடல்களும், அது பற்றிய சடங்குகளும் இடம் பெறுகின்றன. இத்தகைய பாடல்களைத் தமிழகத்தில் நாட்டுப் பாடல்களைத் தொகுத்தளித்த திரு. கி. வா. ஜகநாதன், திரு. பெ. தூரன்' திரு. செ. அன்னகாமு, திரு. நா. வானமாமலை ஆகியோரின் தொகுப்பு நூல்களிலும் காணலாம்.

இத்தகைய வழிபாட்டுச் சடங்கிற்கு 'மாலக் கிண்ணிச் சோறு' என்றும் 'மழைக் கஞ்சி எடுத்தல்' என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

**மழைக்கஞ்சி எடுக்கும் முறை**

தொடர்ந்து மழை பெய்யாதக் காலங்களில் கிராமத்துக் கன்னிப் பெண்கள் கூட்டமாக ஒன்றுகூடி, சுடுமண் கலயத்தை கையில் ஏந்திக் கொண்டு வீடுதோறும் சென்று மழைக் கஞ்சி எடுக்கச் செல்வர். செல்லும்பொழுது தங்கள் வறுமையின் நிலையை தெளிவுபடுத்தும் பாடலை பாடுவர். அப்பாடலில் அவர்கள் வறுமையும், வருணன் வழிபாடும், வானிலை அறிவும் தெளிவாகக் காணலாம். துட்டுக்கு நெல் வாங்கி தோட்டம் தெளித்து வைத்து, வானத்தை நோக்க, வந்த மழைப் போகும் காட்சி அவர்களை வாட்டமுறச் செய்கின்றது. வட்டிக்கு நெல் வாங்கி வயல் எல்லாம் தெளித்து வைத்து, வானத்தை நோக்க வந்த மழை செல்லும் குறிகள் ஏழை நெஞ்சங்களை வறுமையில் சுமை தாங்கியாக்குகிறது.

வான வீதியில் உள்ள ஒன்பது கோள்களில் 'வெள்ளி' என்ற சுக்கிரனைப் பற்றி பண்டு அறிந்திருந்தனர். சூரிய மண்டலத்தில் ஒளி மிக்க கோள் இதுவே ஆகும். வெள்ளிக் கோள் தென்திசை எழுதல் தீய நிகழ்ச்சியின் அறிகுறி என்றும், வெள்ளிகோள் வடதிசையில் நில்லாமல் திசை திரிந்து தெற்கே ஏகின் நாட்டில் மழை பெய்யாது வற்கடம் உண்டாகும் என்றும், பண்டைய தமிழ் மக்கள் நம்பினர். இதனைச் சங்க இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

'இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்'—புறம் *(35 : 7)*

'தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்'—புறம் *(117 : 2)*.

'வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்
பள்ளம் வாடிய பயினில் காலை'—புறம் *(388 : 1-2)*.

'வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற்கேகினும்'—பட்டின. *(1-2)*

''விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்'
—சிலம்பு *(10 : 103)*.

இவ்வாறு வெள்ளிக் கோளைப் பற்றி சங்க இலக்கியம் காட்டும் கருத்துக்களை இருபதாம் நூற்றாண்டில் கருவூர் பகுதியில் உள்ள கிராம மக்களின் வாய்மொழி இலக்கியத்திலும் காணலாம். அப்பாட்டலை நோக்குவோம்

'கிண்ணியிலே மாக்கரைச்சி
கங்கையிலே கோலம் போட்டு
கோலம் கலையலியே
கொள்ளை மழை பெய்யலியே!

சட்டியிலே மாக்கரைச்சி
சாலையெல்லாம் கோலம் போட்டு
கோலம் கலையிலியே
கொள்ளை மழை பெய்யலியே!

வட்டிலிலே மாக்கரைச்சி
வாசலிலே கோலம் போட்டு
கோலம் கலையிலியே!
கொள்ளை மழை பெய்யலியே!

வெள்ளி தென்தெசையில்
வெண்மேகம் வடதெசையில்
வெள்ளாமை நம்பி நிற்கும்
வெள்ளாளன் எத்திசையில்!

துட்டுக்கு நெல் வாங்கி
தோட்டம் தெளிச்சி வைச்சி
துட்டோ சுமருதய்யா
தொடுத்த மழை போயிடுச்சே!

வட்டிக்கு நெல் வாங்கி
வயலெல்லாம் தெளிச்சி வைச்சி
வட்டி சுமருதய்யா
வந்த மழை போயிடுச்சே!

கம்பம் பயிரெல்லாம்
கரையான் அரிக்காது
அந்தரவம் கேட்டு
வந்திறங்கு வருணதேவா!

சோள பயிரெல்லாம்
சொக்கான் அரிக்காது
அந்தரவம் கேட்டு
வந்திறங்கு வருணதேவா!

புஞ்சை பயிரெல்லாம்
பூச்சி அரிக்காது
அந்தரவம் கேட்டு
வந்திறங்கு வருணதேவா!

இத்தகைய கருத்துப் பொதிந்த பாடலை கவுண்டர் இனப் பெண்கள் பாடிக் கொண்டு, கஞ்சிக் கலயத்தை கையில் ஏந்தி வீடு வீடாகச் செல்வர். அப்பொழுது கிராமத்தினர் சோறு, கம்பஞ் சோறு, சோளக் கூழ், வரகுக் கூழ், அரிசிக் கஞ்சி முதலியவற்றை உப்பில்லாமல் கலயத்தில் இடுவர். இத்தகைய முறைக்கு மழைக் கஞ்சி எடுத்தல் எனப் பெயர். இத்தகைய வழக்கு கொங்கு நாட்டில் பிற பகுதிகளிலும் இருப்பதாக அறிகிறோம்.

### வழிபாடு

உப்பில்லாக் கஞ்சியை கலயத்தில் பெற்றுக் கொண்ட கன்னிப் பெண்கள், ஊரில் உள்ள பிள்ளையார் கோயிலுக்கு எடுத்துச் செல்வர். பிள்ளையாரை வணங்கி வழிபடுவர். கஞ்சிக் கலயத்தை கோயிலின் ஒரு பகுதியில் வைத்து, ஊரில் உள்ள கன்னிப் பெண்கள் எல்லாம் கலயத்தைச் சூழ்ந்து வட்டமாக அமர்வர். ஊரில் உள்ள வெள்ளைச் சேலைக்கார விதவைப் பெருமகள் அக்கலயத்தில் உள்ள உப்பில்லாக் கஞ்சியை அகப்பையில் எடுத்து எல்லாக்கன்னிப் பெண்களுக்கும் கொடுப்பாள். அப்பெண்கள் தம் இருகை குவித்து கஞ்சியை வாங்கிக் குடிப்பர். ஒவ்வொரு பெண்ணிற்கும் கஞ்சியைக் கொடுக்கும் விதைவை பெருமகள், தன் கையில் உள்ள அகப்பையால் எல்லோருடைய தலையிலும் தட்டுவாள். இவ்வாறு வழிபாடு செய்வர்.

பூசை முடிந்து, வானேந்திரம் செல்லுமுன் கஞ்சிக் கலயத்தைச் சூழ்ந்துள்ள பெண்கள் ஒன்று சேர்ந்து ஒப்பாரி வைப்பர். அப்பாடல்கள் கண்ணீரில் பூத்த கவிதை மலர்களாக விளங்குவதைக் காணலாம்.

பணத்துக்கு நெல் வாங்கி
பாடெல்லாம் நாத்து விட்டேன்
பத்தி நீங்க பாருங்களேன்
பத்தினியா புலம்பு வதை
பாடெல்லாம் வாடு வதை!

கடனுக்கு நெல் வாங்கி
காடெல்லாம் நாத்து விட்டேன்
கண்டு நீங்கி பாருங்களேன்
கர்ணகியா கலங்குவதை
காடெல்லாம் வாடுவதை!

துட்டுக்கு நெல் வாங்கி
தோட்டமெல்லாம் நாத்துவிட்டேன்
தோப்பேறிப் பாருங்களேன்
தோகை மயில் புலம்புவதை
தோட்டமெல்லாம் வாடுவதை!

அசலுக்கு நெல் வாங்கி
அசலூரு நாத்து விட்டேன்
அண்டி நீங்க பாருங்களேன்
அருந்ததியா புலம்பு வதை
அசலூரு வாடுவதை!

ஏலத்துக்கு நெல் வாங்கி
ஏகதேசம் நாத்துவிட்டேன்
எட்டி நீங்க பாருங்களேன்
ஏந்திழையா புலம்புவதை
ஏகதேசம் வாடுவதை!

விவசாயத்தையே நம்பியிருக்கும் ஏழை மக்கள் அசலுக்கும், பணத்துக்கும், கடனுக்கும், ஏலத்திற்கும் நெல் வாங்கி நிலங்களில் நாற்று விட்டு மழை இல்லாமல் பயிர்கள் வாடும் பொழுது அவர்கள் மனதில் ஏற்படும் துன்பச் சுமைகளை இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

### வானேந்திரம் செல்லுதல்

பெண்கள் எல்லாம் கோயிலில் கூடி வழிபட்டுக் கஞ்சியை குடித்து முடித்த பிறகு, வெற்றுக் கலயம், அகப்பை, பிரிமனை ஆகியவற்றை எடுத்துக் கொண்டு, குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு ஊரின் எல்லையைத் தாண்டித் தேசாந்திரம் செல்வர். இப்படி செல்வதை 'வானேந்திரம் செல்லுதல்', 'தேசாந்திரம் செல்லுதல்', 'பரதேசம் செல்லுதல்' என்று பலவாறு அழைக்கிறார்கள். தேசாந்திரம் செல்லும் வழக்கம் பாண்டி நாட்டிலும் உண்டு. இப்படி செல்லும்பொழுது மழையின்றி வருந்தும் துயரினைப் பாடலாகப் பாடுவர். அவற்றுள் ஒரு சில காணலாம்.

பூமியை நம்பியல்லோ வருணமகாதேவா!
புள்ளைகளை பெத்துவிட்டோம் வருணமகாதேவா!

பூமிசெய்யும் கோளாறு வருணமகாதேவா!
புள்ளதொந்தி வாடுதப்பா வருணமகாதேவா!

மானத்தை நம்பியல்லோ வருணமகாதேவா!
மக்களைப் பெத்துவிட்டோம் வருணமகாதேவா!

மானம் பண்ணும் கோளாறு வருணமகாதேவா!
மக்க தொந்தி வாடுதப்பா வருணமகாதேவா!

வேலித் தழைப்பறிச்சி வருணமகாதேவா!
விரலெல்லாம் கொப்புளங்க வருணமகாதேவா!

கள்ளி தழைப்பறிச்சி வருணமகாதேவா!
கையெல்லாம் கொப்புளங்க வருணமகாதேவா!

கொப்புளங்க புண்ணாற வருணமகாதேவா!
கோடிநாள் செல்லுதுங்கோ வருணமகாதேவா!

என்ற பாடலைப் பாடுகின்றனர்.

பின்னர் கஞ்சிக் கலயத்தை வெள்ளைச் சேலை உடுத்திய விதவை ஊரின் எல்லையிலோ, மந்தையிலோ அல்லது சுடுகாட்டிலோ போட்டு

உடைப்பாள். அவ்வாறே அவர்கள் கொண்டு சென்ற அகப்பை, பிரிமனை, சட்டி முதலியவற்றையும் தூக்கி எரிந்துவிடுவார்கள். மந்தையை விட்டு ஊர் எல்லையை நெருங்கி வரும்பொழுது மறுபடியும் வருணதேவனை வழிபட்டுப் பாடுவார்கள். தெற்கே சென்ற வெள்ளி மீண்டும் வடக்கே வந்து வற்கடம் நீங்கி, வயல் எல்லாம் நீர் பெருகி வற்றாத வளம்பெருக வேண்டும் என்று வருணதேவனை வேண்டிப் பாடுவார்கள்.

பாஞ்சாங் கலப்பை வெட்டி
பஞ்சாங்க மேழி செஞ்சி
முகம் சோர்ந்து நிக்கிறாங்க
அந்தரவம் கேட்டு
வந்திறங்கு வருணதேவா!
வடக்கே வெள்ளி வர
வயலெல்லாம் நீர் சொரிய
அந்தரவம் கேட்டு
வந்திறங்கு வருணதேவா!

பொதுவாக இப்பாடலைப் பாடி அப்பெண்கள் கிராமத்தை அடையும்பொழுது மழை வந்து விடுகிறது. அப்படி மழை பெய்யாவிட்டால் அவ்வூரில் உள்ள குடியானவர்களும், வாலிபர்களும் ஒன்று சேர்ந்து அப்பெண்களை ஊரின் எல்லைக்குள் வரவிடாமல் மறித்து நிறுத்துகிறார்கள். ஆனால் இவ்வழிபாட்டு சடங்கிற்குப் பிறகு பெரும்பாலான நேரங்களில் மழை வருவதாக நம்புகின்றனர். ஒரு சில நேரங்களில் வராமல் போவதும் உண்டு.

கிராம மக்கள் இறைவனிடம் கொண்டுள்ள பயமும் பக்தியும் எல்லையற்றது. மக்கள் நம்பிக்கை பெரும்பாலும் வீண் போவதில்லை இவ்வருண தேவன் வழிபாடு மூன்று நாட்களிலிருந்து ஆறு நாட்கள் வரை சில கிராமங்களில் தொடர்ந்து நடைபெறுகிறது. இச்சடங்கு முடியும் ஆறு நாட்களுக்குள் மழை வந்துவிடுகிறது என நம்புகிறார்கள். மழை வந்தால் மீண்டும் மகிழ்ச்சி பொங்க ஊரில் உள்ள ஆடவர்கள் பாடி., அப்பெண்களை ஆரவாரத்தோடு ஊருக்குள் அழைத்துச் செல்வர்.

நாடு செழிச்சுடுத்து
நல்ல மழை பெஞ்சிடுத்து
ஊரு செழிச்சிடுத்து
ஒத்த மழை பெஞ்சிடுத்து
கொல்ல செழிச்சிடுத்து
கொள்ளை மழை பெஞ்சிடுத்து
கோளு திரிஞ்சிடுத்து
கோடை மழை பெஞ்சிடுத்து
காலம் செழிச்சிடுத்து
காரி மழை பெஞ்சிடுத்து
வாங்க ஆயா! வாங்க!!

இத்தகைய முறையில் மழைக் கஞ்சி எடுத்து வருணதேவனை வணங்கும் வழக்கம் கருவூரைச் சூழ்ந்த வடுகப்பட்டி, வெள்ளாளப்பட்டி, வாங்கல்பாளையம், வெண்ணமலை, நரிகட்டியூர், மூலகாட்டானூர், ராமசரப்பட்டி ஆகிய ஊர்களில் காணலாம். இவ்வாறு கிராம மக்கள் மழையை எதிர்பார்த்து ஏங்குவதும், மழை பெய்ததன் மகிழ்ச்சியில் வருணதேவனை வணங்கிப் பாடுவதும் நல்ல நாட்டு இலக்கியங்களாகும்.

இந்தியாவிலே சிறந்த அப்பளம்
AMBIKA APPALAM DEPOT
12 RANGANATHAN ST. T. NAGAR MADRAS-17
TRADE MARK REGD. 214426
யாவரும் விரும்புவது
அம்பிகா அப்பளம்
அழகாய் பொரியும்
அம்பிகா அப்பளம்
போன்: 74840.
வெளியூர் ஆர்டர்கள் உடனடியாக கவனிக்கப்படும்
அம்பிகா அப்பளம் டிப்போ
45-A, வடக்கு மாடவீதி, மைலாப்பூர், சென்னை-4.
மாம்பலத்திலும் கிளைகள் உள்ளன.

# அருள்மிகு

# தாயுமானசுவாமி திருக்கோயில்,

## மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி-2,

நகரின் நடுவே கலைக்கோயிலான மலைக்கோயிலில் அருள்மிகு தாயுமான இறைவன் மட்டுவார் குழலம்மை, மலைஉச்சியில் கணேசர் காட்சி கொடுக்கிறார்கள். இக்கோயிலின் பெரும்பகுதி கருங்கற்கூரைகளால் வேயப்பட்டது. கணேசர் திருக்கோயிலைத் தன்முடியில் கொண்டது. இம் மலையின் மேலிருந்து நாம் காணும் இயற்கை எழிலும், நகரப்பொலிவும் நம் உள்ளத்து உணர் வினை மிகமிக உயர்ந்து நிலைக்குக் கொண்டு செல்கின்றன.

கி.பி. ஆறும் நூற்றாண்டில் வாழ்ந்த மகேந்திர பல்லவன் குடைவித்த குகைக்கோயில்கள் நம் உள்ளத்திற்கு உவகை ஊட்டுவதாகும்.

இக்கோயிலின் அமைப்பும் சிற்ப வேலைப்பாடும் உறுதியும், நம் முன்னோர்களின் கட்டிடக் கலை ஞானத்தை குறிப்பிடுகிறது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர், தாயுமான அடி கள் ஆகிய அருளாளர்களால் பாடல் பெற்ற தலம்.

வரலாற்றுக்கு முற்பட்டதாயினும் கி.பி. 9, 13, 15, 16-ம் நூற்றாண்டுகளில் முறையே சோழர், பாண்டியர், விஜயநகரப் பேரரசு வழியினர் குறுநில நாயக்க மன்னர்களால் அமைக்கப் பெற்ற சுற்றமைப்பும், திருப்பணியும், பராமரிப்பும் போற்றத்தக்கதாகும்.

வணிக குலப் பெண்ணுக்கு இறைவன் தாயாகவே வந்து மருத்துவப் பிணிக்கு உதவியதால் சுகப் பிரசவ மருத்துவப் பிணிக்கு வேண்டி பக்தர்கள் காணிக்கைப் பொருள்களை பெருமளவில் செலுத்தி இறையருளுக்குப் பாத்திரமாகி வருகிறார்கள். வரப்பிரசாதியான அருள் மிகு மாணிக்க விநாயகருக்கும், மலைஉச்சியில் கோயில் கொண்டுள்ள அருள்மிகு கணேசருக்கும் பெரு மளவில் காணிக்கை செலுத்தி மனச் சாந்தி அடைகிறார்கள்.

அருள்மிகு தாயுமான இறைவன், மட்டுவார் குழலம்மை, கணேசர் ஆகிய மூர்த்திகளுக்கு அதிகாலை பூசை நிரந்தரத் திட்டமாக பிரமாதீச ஆண்டு தைத் திங்கள் முதல் நாள் முதல் (14—1—74 முதல்) நடைபெற்று வருவதற்கு ஏற்படும் செலவை ஈடுசெய்ய சிவநேயச் செல்வர் கள் ரூ. 303-க்கு குறைவின்றியும், குறைந்த அளவு நன்கொடையாக ரூ. 101- வீதம் செலுத்தி இறைவன் அருள் பெற்றுய்ய வேண்டுகிறோம். நன்கொடைகளை ''நிர்வாக அதிகாரி, அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில், மலைக்கோட்டை, திருச்சி—2'' என்ற முகவரிக்கு மணியார்டர் மூலமோ, நேரிலோ செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளலாம்.

கல்கத்தா ''பிர்லா ஜான்ஹிட்'' அறநிலைய நிதியிலிருந்து இத் திருக்கோயிலுக்கு 1923-ம் ஆண்டில் போடப்பட்ட மின் விளக்குகள் அதன் பாகங்களின் பொருள்களும் பழுதடைந்துள் ளதை சுமார் இரண்டு லட்சம் செலவில் பூராவும் புதுப்பித்துள்ளார்கள். மேலும் இத்திருக் கோயிலுக்குப் பல திருப்பணிகளை செய்ய மனமுவந்து இசைந்துள்ளார்கள்.

மலையும் அதன் மீதுள்ள தெய்வத் திருக்கோயிலுமே திருச்சிராப்பள்ளியின் பெருமையாக இன்றும் நின்று நிலவுகின்றன.

திருச்சி டவுன், திருச்சி கோட்டை, திருச்சி ஜங்ஷன் ரயில் நிலையங்களிலிருந்து கோயிலுக்குச் செல்லலாம். வழிபாட்டிற்கு வருக! வருக! என சிவநேயச் செல்வர்களை அழைக்கின்றோம்.

**ஆ. தே. ப. தேவராஜப் பிள்ளை,**
அறங்காவலர் குழுத்தலைவர்,

**சு. பாலசுப்பிரமணியன், பி.ஏ., பி.எல்.,**
செயல் அலுவலர்.

**அ. முத்துக்குமரன்,**
**ரா. சுப்பிரமணியன்,**
**ப. மூக்கப்பிள்ளை,**
**வே. பிச்சைக்காரன்,**
அறங்காவலர்கள்.

# தூய்மை!

பேரூர் தவத்திரு இராமசாமியடிகள்

குழந்தை விளையாட்டுப் பொருளில் ஆசை கொள்ளும். வீட்டினுள் விளையாடும் எண்ணத்திலும் வீதியில் விளையாடுவதே இன்பமாகக் கருதும். அன்புத் தாய் சீராட்டிப் பாராட்டி வளர்த்து நீராட்டி நறுமணப் பொருள்களால் மேனியழகு செய்கிறாள். சிற்றுடை அணிவித்துச் சிறப்பு செய்கிறாள். அவ்வழகிலேயே மனம் பறி கொடுத்து உச்சி மோந்து உள்ளங் களிக்கிறாள். குழந்தையோ பூட்டிய பொற்கலனும், பொலிவுள்ள ஆடைகளும் தம் நலனிழக்க வீதிக்கு ஓடுகிறது. கையிலுள்ள விளையாட்டுப் பொருளுடன் புழுதியிலே களித்து விளையாடுகிறது. வாரி முடித்து மலர் சூட்டிய அன்னையின் அன்புள்ளம் அது அறிவதில்லை. உடம்பெல்லாம் புழுதியும் உச்சந் தலையில் மண்ணும் பொருந்திய கோலத்தினை நாளும் பார்க்கிறோம். இயல்பாக அமைந்த நியதி இது. பெற்றெடுத்த தாய் மீண்டும் குழந்தையை வாரியெடுத்துக் குளிப்பாட்டித் தூய்மை செய்கிறாள்.

இது போலவே உயிர்க் கூட்டங்களும் அறியாமையினால் பிணிப்புண்டிருக்கின்றன. இறைவன் உயிர்களுக்கு அப்பிணிப்பு நீங்க, உடல் மனம் இடம் நுகர்வு (தனு கரண புவன போகம்) ஆகியவற்றையளிக்கிறான். ஆனால் உடம்பினைப் பெற்ற பயனை அறியாத உயிர்க் கூட்டங்கள், மீண்டும் வாழ்க்கையாகிய வீதியிலே ஆசையாகிய மண்ணில் புரண்டு, வினையாகிய புழுதியே இன்பமாகக் கருதி மாந்தி மகிழ்கின்றன. பல்வகைப் பிறவியிற் படிந்து உழலும் இவ்வுயிர், பகுத்தறிவு பெற்று நன்னெறியில் வாழ மனிதப் பிறவியை இறைவன் அருளுகின்றான். மனிதப் பிறவியிலே வந்த நல்லுயிர் நல்லோர் இணக்கத்தால், முன்னோர்கள் அருளுரையால் மேன்மை எய்துவதும், அவை பொருந்தா நிலையில் தாழ்வெய்துவதும் கண்கூடு.

ஒவ்வொரு மனிதனும் தூய்மையை விரும்புகிறான். தான் வாழும் இடம் தூய்மையாக இருக்கப் பாடுபடுகிறான். தன் பக்கத்திலிருப்போர் தூயவர்களாக இருக்க வேண்டும் என்று கருதுகிறான். தன் அழுக்கு மெய்யினையும், தூயதாக்க நினைக்கின்றான். ஆனால் நம் உள்ளத்தைத் தூய்மை செய்ய எண்ணியதுண்டா? இந் நிலையை யறிந்தன்றோ வள்ளுவர் நம் போலி மாண்பை,

''மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்''

என்று குறிப்பிடுகின்றார்.

மனித மனம் ஆசைக் காற்றால் அலைப்புறும் காற்றாடியாக அலைகிறது. இதனால் உள்ளத்தை மறைத்துப் பொய்ம்மையை வளர்க்கும் பண்பு வளர்கிறது. எனவே புறத்தே தூய்மையை விரும்பி நறுமணப் பொருள்களால் நன்னீரால் தூய்மை செய்யக் கருதுபவன், அகத்திலேயும் தூய்மை நிறையும் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். அகவாழ்க்கை தூய்மையடைய வேண்டுமாயின் நம்மைச் சுற்றியுள்ள சூழல் நன்றாக இருத்தல் இன்றியமையாததாகும்.

ஒருவன் தன் இருப்பிடத்தைத் தூயதாக வைத்துக் கொள்ள நினைக்கின்றான். அவன் ஆவின் சாணத்தால் மெழுகிக் கோலமிட்டுச் சந்தனமும், பன்னீரும் தெளிக்கிறான். நறுமணப் புகையையும் உண்டாக்குகின்றான். ஆனால் அவன் இடத்தைச் சுற்றிலும், புழு நெளியும் சாக்கடை இருக்குமானால், அவன் செய்த நற்செயல்களால் பயனின்றித் தீ நாற்றமே மிகுவதாக இருக்கும். ஆதலின் தான் செய்யும் நற்செயல்களுக்குப் புறச் சூழலும் நன்கமைய வேண்டும் என்பதை அறிகிறோம். அதுபோலத் தனி மனிதன் தான் தூயவனாக வாழ முயற்சிக்கும்போது அவன் சேர்கின்ற கூட்டமும், தூயவர்களாக இருக்க வேண்டும். அவர்களையே நன்னெறியாளர்கள் என்கிறோம். இயல்பாக அன்பும் அறனும் பொருந்திய வாழ்க்கையை மேற்கொள்பவனுக்கு அக்கூட்டம் நன்கு துணை புரியும். அவ்வாழ்க்கையைப் பொருந்தாதவனையும் பொருந்தச் செய்யும். இது குறித்தே வள்ளுவர்,

''மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்''

என்று குறிப்பிடுகின்றார்.

158595

Tel : "COTTON"

PHONE: Office: 216 and 321
Resi. : 310 and 311

# SUNDARAM SPINNING MILLS

Post Box No. 25

KOMARAPALAYAM-638183.

**(VIA) ERODE, S. RY. S. INDIA.**

## LEADING EXPORTING MILL IN THE SOUTH

Proudly announce that their Export performance of Cotton Yarn for the year 1973 is

Rs. 1,49,37,700/-

Spindles working : 25,228. Dobling Spindles : 1,200.

Licensed to install Automatic Looms : 300.

*Managing Partners :* **J. K. K. Angappan**
**J. K. K. Sundaram**
**J. K. K. Natarajah**
**J. K. K. Munirajah**

(முற்றொடர்ச்சி)

# அம்பிகையின் அழகு வெள்ளம்

(சௌந்தர்ய லகரி)

### (21) ஆதியொடு அந்தம்

அம்பிகை வேதங்களின் ஆதியும் அந்தமுமாக இருக்கின்ருள். மெல்லிய தாமரை மலர் போல் உள்ள ஆறு ஆதாரங்களேயும் ஊடுருவிக் கொண்டு, மூவகை மண்டலத்தினிடத்தும் இருக்கின்ற சூரியன் சந்திரன் அக்கினி என்னும் முச்சுடரினுடைய, ஒப்பற்ற நிறம் கிளர்ந்து விளங்குகின்ற அழகிய மின்கொடி போலும் நிலேயில், திகழ்கின்ருள். ஆறு ஆதாரங்களுக்கும் மேலாக இருக்கும் ஆயிரம் இதழை உடைய தாமரை மலர்க் காட்டில், சதாசிவனுடன்கூடி மகிழ்ச்சியுற்றிருக்கின்ருள். அத்தகைய அம்பிகையின் ஞானக் கலேயை, உறுதிமிக்க ஆணவம் மாயை கன்மம் என்னும் மூவகை மலங்களும், அவற்றில் அடங்கிய சிந்தையும் கெட்டொழிந்து நிற்கத் தரிசிப்பவர்களின் அறிவு, பேரின்பத்தை அடையும்.

''ஆன மின்கொடி போலும்மென் முண்டகம்
ஆறில், மண்டலம் மூவகையின்கண் ஓர்
பானு அம்புலி தீயின் நிறங்கிளர்
பான்மைகொண்டு, இதழ் ஆயிரக் கஞ்சம்நீள்
கானில் உன்களி ஞானம் உறும்கலே
காழ் மலங்களின் மூவகை பொன்றியே
போன சிந்தையின் மாயை ஒழித்தவர்
போதம் இன்புறும் ஆதியொடு அந்தமே

அம்பிகை உலகங்களின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமாக இருத்தல்பற்றி, ''ஆதியொடு அந்தம்'' என்ருர் எனினுமாம். அம்பிகையினுடைய திருவுருவத்தின் மென்மை தன்மையும், ஒளியுடைமையும், அடக்கமுடைமையும் கருதி, மின்கொடியை உவமையாகக் கூறினுர். ஆறு ஆதாரச் சக்கரங்களும் தாமரை மலரின் வடிவமாக இருத்தலால் அவற்றை 'முண்டகம்' (தாமரை மலர்) எனக் குறிப்பிட்டருளினுர். ஆறு ஆதாரங்களும் அக்கினி சூரியன் சந்திரன் என்னும் மூன்று மண்டலங்களாக உள்ளன என்பது யோக நூலார் கூற்று. அதன்படி 'தீ பானு அம்புலி' என்றே கூறுதல் வேண்டுமாயினும், செய்யுளோசை பற்றி 'பானு அம்புலி தீ' என நிறைபிறழக் கூறினுர். ஆறு ஆதாரங்களுக்கும் மேலே இருக்கும் சகசிராரம் என்பது, ஆயிரம் இதழ்களே உடைய தாமரை மலர் போல விளங்குதலின், அதனேக் 'கான்' என்றும், 'நீள்கான்' என்றும் விசேடித்தார். வான வில்லானது பல நிறமுடையதாக விளங்குதல்போலக் குண்டலிசத்தியும் பல நிறமுடையவளாய் விளங்குவள். அவளது நிறத்தினுல் சூரியன் சந்திரன் அக்கினி என்னும் மூவர்க்கும் ஒளிநலம் அமைவதாயிற்று. பானு-சூரியன். அம்புலி-சந்திரன். கஞ்சம்-தாமரை. கான்-காடு களி-மகிழ்ச்சி. கலே-சொரூபம், இயல்பு, வடிவம் காழ்-வைரம், உறுதி. பொன்றி-அழிந்து. போதம்-அறிவு. இன்புறும்-பேரின்பத்தை அடையும். இப்பாடல் சமாதியும் நிட்டையும் உடையோர் அம்பிகையைத் தரிசிக்கும் இயல்பு கூறியது.

### (22) தேட அரிய சிவமதங்கி

ஒருவன் தன்னுடைய மகனே வேறு பெயரிட்டு அழைப்பினும், தன் தந்தையின் பெயர் இடுதற்கு உரியவனுவன். அதனுல், அத்தந்தையின் அன்பையும் அருளேயும் பெறுவதற்கு அவனுக்கு இயல்பாகவே தகுதியும் உரிமையும் உண்டு. அதுபோல, 'யான் அம்பிகைக்கு அடியவன்' என்னும் உணர்வு வரப்பெறுபவன், அது காரணமாகவே அம்பிகையின் அருளேப் பெறுவதற்குத் தகுதியும் உரிமையும் பெற்றவனுகி விடுகின்ருன். 'யான் நின் அடியவன்; என்பால் அன்புகொண்டு நீ நின்னுடைய கடைக் கண் பார்வையை என்பாற் செலுத்துக' என்று அடியவன் ஒருவன் வேண்டிக் கொள்ள நினேத்துத் தன் வாயைத் திறப்பதற்கு முன்னரே, அம்பிகை அதுகண்டு ஓடிவந்து அவனுக்குத் தன் அருளே விரைந்து வழங்குகின்ருள். வாய் திறக்கும் முன்னரே இங்ஙனம் அருள் செய்பவள், அவ்வடியவன் தன் வேண்டுகோட் சொல்லே முழுவதும் கூறினுல், எத்தகைய பெரு வாழ்வை அளிப்பாள்! தன்னுடைய திருவடிகளில் சேர்ந்து ஒன்றுகின்ற, சாயுச்சியம் என்னும் நல்ல பெருவாழ்வை, நயந்தினிது அளிப்பாள் என்பதற்கும் ஐயம் உண்டோ?

பேர்உறும் கயிலாசன் மகள்பெறு
பேரன், அன்புறு பேரன் எனும்சொலால்,
வாரம் அன்பொடு பார்வை வழங்கென
வாய்திறந்திட ஓடி வழங்கினுய்;
வேரி முண்டகன் மால் மகுடங்களின்
வீசுறும் ப்ரபைத் தீபம் உவந்ததாள்
சேரும் நன்பெரு வாழ்வும் வழங்குவை
தேடரும் சிவமாய மதங்கியே

அம்பிகை ஏழிசையாய் இசைப்பயனுய் விளங்குபவள்; இசைக் கலேயில் வல்லவள்; ஆத லின் அம்பிகைக்கு 'மதங்கி' என்று ஒரு பெயர் உண்டு. மதங்கர் என்னும் முனிவருக்கு மக ளாகத் தோன்றியருளிய காரணம்பற்றி, அம்பிகைக்கு 'மதங்கி' எனப் பெயரமைந்தது என்றும் சிலர் கூறுவர். இறைவன் நம்மனேர் தந்தை தந்தை தந்தைக்கும் தந்தையாதலின், மக்கள் அனேவருக்கும் மூலமுதற் பாட்டனுக விளங்குபவன் ஆவான். பாட்டனின் அன்பையும் அருளேயும் பெறுதற்கு, இயல்பாகவே பேரனுக்குத் தகுதியும், உரிமையும் அமைந்து விடுதல் போல, 'யாம் அம்பிகையின் அடியவர்' என்னும் உணர்வு வரப் பெறுபவரும் அம்பிகையின் அழகைப் பெறுதற்குத் தகுதியையும் உரி

மையையும் இயல்பாகப் பெற்றுவிடுகின்றனர் என்பது, ''பேருறுங் கயிலாசன் மகன்பெறு பேரன் அன்புறு எனுஞ் சொலால், வாரம் அன் பொடு பார்வை வழங்கு என வாய் திறந்திட ஓடி வழங்கினுய்'' என்னும் வரிகளால் புலப் படுத்தப்பட்டது. சொலால்-சொல்லின்படி. வாரம்-அன்பு. அம்பிகை தன்னை அன்பால் நினை வார்க்கு உடனே விரைந்து வந்து அருள் புரியும் இயல்பினை 'வாய் திறந்திட ஓடி வழங்கினுய்' என்பதனுற் குறிப்பிட்டருளினுர். ஓடி-ஓடிவந்து அம்பிகையின் திருவடிச் சிறப்பை விளக்குவார், அதனை நான் முகனும் திருமாலும் வீழ்ந்து வணங்குகின்றனர் என்றும், அவர் தம் அழகிய மணிகள் பதித்த மகுடங்களினின்றும் வீசுகின்ற பேரொளிப் பிழம்பானது, அம்பிகைக்கு ஆலத்து எடுப்பது போன்று, தீப ஆலத்திபோலத் திகழ் கின்றது என்றும் குறிக்கும் கருத்து, 'வேரி முண்டகன் மால் மகுடங்களில் வீசுறும்பிரபைத் தீபம் உகந்த தாள்' என்று சிறப்பித்தார். வேரி-தேன். முண்டகம்-தாமரை மலரில் உள்ள பிரமன். பிரவை-ஒளி. தீபம்-தீபஆலத்தி. அம் பிகை தன்னைத் துதித்து வழிபடுவோருக்குத் தன் திருவடிகளிற் சேர்த்துக் கொள்ளுதலாகிய சிவசாயுச்சியம் என்னும் பெரு வாழ்வை அளித் தருளும் இயல்பினள் என்பதைச் ''சேரும் நன் பெரு வாழ்வும் வழங்குவை'' என்ருர். வாய் திறந்திடும் அளவில் ஓடி வழங்கினுய் என்பத ஞல், வாய் திறந்து சொல் முழுவதும் கூறினுல், தாள்சேரும் நற்பெரு வாழ்வு வழங்குவள் என் பது பெறப்பட்டது. இப்பாடல் அம்பிகையின் பெருங் கருணைத் திறத்தினையும், அன்பர்க்கு விரைந்தோடி வந்து அருள்புரியும் செயலையும் விளக்குகின்றது.

## (23) நாயகர் பங்கும் கவர்ந்தவள்

சிவபெருமான் 'மாதியலும் பாதியன்' (அர்த்தநாரீசுவரன்) எனப் பெயர் பெறுவான். அதன்படி சிவபெருமானின் திருமேனியிற் பாதியில் அம்பிகை விளங்குகின்ருள் என்பர் ஒரு சாரார். அது பொருந்தாது. அம்பிகை சிவபெருமானின் மேனியிற் பாதியில் மட்டும் விளங்குகின்ருள் எனின், மற்றைப் பாதியில் அவள் விளங்குகின்ருள் அல்லன் எனப் பொருள் படும். சிவபெருமானின் திருமேனியில் மற்றைப் பகுதியாகிய வலப்பாகத்தையும்கூட, அம்பி கையே கவர்ந்து கொண்டனள். அதற்குச் சான்று, சிவபிரானின் சிவந்த கதிரையுடைய மேனி அம்பிகையின் மேனியாகத் திகழ்ந்தது. சிவபெருமானின் முக்கண்களும், அம்பிகையின் முக்கண்களாக அமைந்துள்ளன. சிவபெருமான் சடைமுடியில் அணிந்துள்ள இளம்பிறை, அம் பிகையின் நீண்ட முடியெங்கும் அழகிய நில வொளியாய்த் திகழ்ந்தது. ஆதலின் அம்பி கையே சிவபெருமானின் திருமேனியின் இடப் பக்கப் பாதியைப் போல, மற்றை வலப்பக்கப் பாதியையும் கூடக் கவர்ந்து கொண்டாள் என் பது தெளிவு. அம்பிகையின் வேருகச் சிவ பெருமான் தனியாக விளங்கிற்றிலர்.

ஆதி சங்கரர் பாதியுடம்பு, இனிது
ஆளும் அம்பிகை; பாதியும் விஞ்சுமோ?
நீதி யன்றுஎன, நாயகர் பங்கையும்
நீ கவர்ந் தனையால்; அவர் எங்குளார்?
சோதி செங்கதிர் மேனி நிறைந்தது;
தூய கண்களும் மூவகை; கொங்கையோ
ஈது இரண்டு; உடல் கூனும் இளம்பிறை
ஏர் பொழிந்தது நீள்முடி எங்குமே!

சிவபெருமான் எப்பொருளுக்கும் எவருக் கும் மூலமுதற் காரணமாக விளங்கி நலம் செய் தலின் அவரை 'ஆதிசங்கரர்' என்ருர். ஆதி-முதல், மூலகாரணம். சங்கரர்-நன்மையைச் செய்பவர். அம்பிகை என்பது அண்மைவிளி. அம்பிகையின் தலைமையும் சிறப்பும் கூறுவார். ''பாதி உடம்பு இனிது ஆளும் அம்பிகை'' என்ருர். 'விஞ்சுமோ' என்னும் வினு ஓகாரம், 'விஞ்சாது' என எதிர்மறைப் பொருளை விளக் கியது. சிவபெருமானுக்குரிய சிவந்த நிறமும், முக்கண்களும், இளம்பிறை முடியும் அம்பிகைக் கும் உண்டு. ஆதலின் 'நாயகர் பங்கையும் நீ கவர்ந்தனை' என்ருர். சக்தியின் வேருகச் சிவம் என்பது தனியே இல்லையாதலின் 'அவர் எங் குளார்'? அம்பிகை நாயகர் பங்கையும் கவர்ந்து ஆளும் திறத்திற்குச் சான்று கூறுவார் ''சோதி செங்கதிர் மேனி நிறைந்தது; தூய கண்களும் மூவகை; இளம்பிறை ஏர் பொழிந் தது நீள்முடி எங்குமே'' என்ருர். அம்பிகைக் குரிய செந்நிறமும் முக்கண்களும் இளம்பிறை யும் ஆகியவற்றைச் சிவபெருமானும் பெற்றி ருத்தலால், அவரே அம்பிகையின் திருமேனி யைக் கவர்ந்தார் எனக் கூறல் அமையாதோ என வினவுவாரை நோக்கி விடைகூறுதற்காக, 'ஈது கொங்கை இரண்டு' எனக் குறிப்பிட்டார். அதனுல் இவளே சிவபிரானின் திருமேனியைக் கவர்ந்தாளன்றி, சிவபிரான் இவளுடைய திரு மேனியைக் கவரும் திறம் பெற்றிலர் என்பதனை வலியுறுத்தியவாறு. உத்தர கவுளர் என்னும் வாமசக்தி மதத்தினர், சத்தியிற் சிவம் அடங் கிற்று என்று கொண்டு, சத்தியைச் சிவபிரா னின் ஒரு பகுதியாகக் கொள்ளாமல், தனிப் பெரும் நிலையில் தன்னுட் சிவத்தை ஒடுக்கிக் கொண்டு இருப்பதாகப் போற்றி வழிபடுவர். அவ்வியல்பு இப்பாடலால் சிறப்பித்துக் கூறப் பெற்றது.

## (24) தேவியின் ஏவற்றிறன்

உலகத்தில் படைத்தல் காத்தல் ஒடுக்கல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில் கள் நிகழ்வதாகவும், அவற்றுள் படைத்தலைப் பிரமதேவனும், காத்தலைத் திருமாலும், ஒடுக் கலை உருத்திரனும், மறைத்தலை மகேசுவரனும், அருளலை சதாசிவனும் ஆகிய ஐம்பெருங் கடவு ளர்களும் முறையே நிகழ்த்துவதாகவும், நூல் களில் ஆங்காங்கே கூறப்படுவது உண்டு. ஆயி னும் அவ்வைவரையும் அத்தொழில்களைச் செய்யுமாறு ஏவி, அவற்றைச் செய்தற்குரிய ஆற்றலையும் தன் கடைக்கண் பார்வையால் அளித்து அருள்புரிந்து வருபவள் அம்பிகையே யாவள்.

ஆதி முண்டகன், மால், சிவன், அண்டர்
மகேசன், அந்த சதாசிவன், ஐந்துபேர்
மேதகும் தொழில்போல, வனைந்தருள்
வீறும், அங்கதன் ஊறலும், உண்டென
யாதும் இன்றியும், மேனியொடு எங்கணும்
மாயை தந்ததும், ஞானம் இரங்கும் ஓர்
நீதியும், திருவே! புருவங்கொடு
நீசொல் இங்கித ஏவல் புரிந்ததே!

அழகிற்கு உறைவிடமாய்த் திகழ்தலின் அம்பிகையைத் 'திரு' எனப் புகழ்ந்தார். படைத்தல் காத்தல் ஒடுக்கல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில்களையும், ''ஐந்து பேர் மேதகும் தொழில்'' என்றார். அவ் ஐந்து பேர் இவர் என்பார். 'ஆதிமுண்டகன், மால், சிவன், அண்டர்மகேசன், அந்த சதாசிவம்' என்றார். முண்டகம்-தாமரை மலர். முண்டகன்-தாமரை மலரிலுள்ள பிரமன். பிரமன் படைப்பாகிய (ஆதி) முதற்றொழிலைச் செய்பவன் ஆதலின், 'ஆதி முண்டகன்' என்றார். 'சிவன்' என்பது ஈண்டு ஒடுக்கற் றொழில்புரியும் பிரளய கால உருத்திரனைக் குறித்தது. சடப் பொருள்களைப் படைத்தல் காத்தல் ஒடுக்கல் ஆகிய முத்தொழில்களைப் புரியும் பிரமன் மால் உருத்திரன் ஆகியோரைப் போலாது. சேதனப் பொருள்களாகிய அறிவுடைய உயிர்களின்பால், மறைத்தல் அருளல் ஆகிய செயல்களைப் புரிபவர்கள் ஆதலின் அண்டர்மகேசன், அந்தசதாசிவன்' என்று புகழ்ந்து சிறப்பித்தார். அண்டர்-தேவர்கள். 'அந்த' என்பது உலகறி சுட்டு. ஐந்தொழில்களை ஐங்கடவுளர்கள் செய்வதாக நூல்கள் உபசாரமாகக் கூறினும், உண்மையில் இவற்றைச் செய்பவளும் செய்விப்பவளும் இறைவியே யாவள் என்பது கருத்து. இறைவியின் ஆணைவழி நின்றே ஐங்கடவுளர்கள் ஐந்தொழில்களைப் புரிந்து வருகின்றனர் ஆதலின், ''திருவே! நீ சொல் இங்கித ஏவல் புரிந்ததே'' என்றார். வாயாற் சொல்லி ஏவுதலினும், கண்ணுற் குறிப்பிட்டு ஏவுதல், பேரறிவும் பெருந்திறமையும் பெருந்தலைமையும் ஆகும். ''கண்ணிற் சொலிச் செவியில் நோக்கும் இறைமாட்சி'' என்பது குமரகுருபரர் திருமொழி. கண்ணிற் சொல்லுதலினும், புருவநெறிப்பால் உணர்த்துதல், மிக்க பெரும் தலைமைப் பண்பினை உணர்த்தும் அறிகுறியாம். ஆதலின் அம்பிகையின் தலைமைப் பெருஞ்சிறப்பினை உணர்த்த ''புருவம் கொடு நீ சொல் ஏவல் புரிந்ததே'' என்றார். அம்பிகையின் தனிப்பெருந் தலைமையும், ஐம்பெருங் கடவுளின் எளிமை நிலைப் பண்பும் குறிக்க, 'புரிந்தனர்' என்னது 'புரிந்தது' என்றார். பெரும்பாலும் ஏவல் என்பன துன்பம் விளைவிப்பனவாதலின், அவற்றை விலக்குதற்கு 'இங்கித ஏவல்' என்றார். அம்பிகை புரிந்தருளும் ஐந்தொழிற் றிறம் கூறுவார் படைத்தலை 'வனைந்தருள் வீறு' என்றும்; காத்தலை 'அங்கு அதன் ஊறல்' என்றும்; ஒடுக்குதலை 'உண்டு என யாதும் இன்மை' என்றும்; மறைத்தலை 'மேனியொடு எங்கணும் மாயை தந்தது' என்றும்; அருளலை 'ஞானம் இரங்கும் ஓர் நீதி' என்றும் நிரல்பட அழகுற குறித்தார். இரங்குதல்-அருளுதல். இது நிரல்நிறை என்னும் அணியாகும். தேவியைப் பூசிப்போர் ஐந்தொழில் இயற்றும் கடவுளரையும் பூசித்த பலன்பெறுவர் என்பதும்; தேவியின் அருள்பெற்றால், ஒருவர் ஐந்தொழிலையும் இயற்ற வல்லவராவர் என்பதும் இப்பாடலால் உணர்த்தப்பெற்றது.

## (25) மூவருக்கும் முதல்வி

அயன் அரி அரன் என்னும் மூவரும், மும்மூர்த்திகள் எனச் சிறப்பித்துக் கூறப்பெறுவர். இம்மூவரும் இராசதம் தாமதம் சாத்துவிகம் என்னும் முக்குணங்களினின்று தோன்றுவர். இராசத குணம் சிவப்பு நிறம்; அதில் தோன்றியவன் அயன். தாமதகுணம் கறுப்பு நிறம்; அதில் தோன்றியவன் அரன்; பிரளய கால உருத்திரன். சாத்துவிக குணம் வெண்மை நிறம்; அதில் தோன்றியவன் அரி. இம்மூவரும் தோன்றுதற்குக் காரணமாகிய முக்குணங்களும், தேவிக்கு உரியனவாகும். எனவே தேவியின் முக்குணமாகிய கடலின்றே மும்மூர்த்திகளும் தோன்றலாயினர். இவ்வுண்மையைச் செவ்வி தின் உணர்ந்த மும்மூர்த்திகளும், அம்பிகையின் திருமுன்னிலையில் அவளது திருவடிகளில் தமது தலைகளின் தம்முடைய கைகளைக் குவித்து இடையறாது தொழுது கொண்டும், பணிந்து கொண்டும் நிற்பர். ஆதலின் மும்மூர்த்திகளை வழிபடுவதனால் பெறும் வரங்களையெல்லாம், அம்பிகையைப் பூசிப்பதன் மூலம் எளிதாகவும் இனிதாகவும் பெறலாம். இதனால் மும்மூர்த்திகளும்கூட, மிகவும் மகிழ்ச்சியுறுவர். அம்பிகை வழிபாடு நம்மனோர்க்கு மிகமேலான எல்லா நலங்களையும் எளிதாகத் தரவல்லதாகும்.

> மூவருக்கும் முதற்பிறப்பு நின்
> முக்குணக் கடல்என்று, முன்
> சேவடிக்கண் இருப்பர், சென்னி
> குவித்த செங்கை பிரிக்கிலார்;
> பூஎடுத்து அவர் சென்னி வைத்திடு
> போதம் உற்றவர், அம்மைநின்
> கா அலர்ப் பொதி தாளில் வைக்கவும்,
> மூவர் சென்னி களிக்குமே

தேவியின் இராசதம் தாமதம் சாத்துவிகம் என்னும் முக்குணமாகிய கடலிலிருந்தே பிரமன் திருமால் உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் தோன்றுதலின் 'மூவருக்கும் முதற்பிறப்பு நின் முக்குணக் கடல்' என்றார். மும்மூர்த்திகளும் தேவியின் திருமுன்னிலையில் தங்கள் தலைகளின் மீது தமது கைகளை குவித்துக் கொண்டு இடையறாது தொழுது கொண்டு நிற்றலின் அவர்களை ''முன்சேவடிக் கண் இருப்பர், சென்னி குவித்த செங்கைபிரிக்கிலார்'' என்றார். மும்மூர்த்திகளை வழிபடுவதினும் அம்மையை வழிபடுதல் மிக்க பெரும்பயன் விளைக்குமாதலானும், அதனால் மும்மூர்த்திகளும் மகிழ்வர் ஆதலானும், ''பூ எடுத்து அவர் சென்னி வைத்திடு போதம் உற்றவர், அம்மை நின் தாளில் வைக்கவும், மூவர் சென்னி களிக்குமே'' என்றார். 'அவர்' என்றது மும்மூர்த்திகளைக் குறிக்கும். சென்னி-தலை, திருமுடி. மும்மூர்த்திகளின் சென்னிகளைக் காட்டிலும், அம்மையின் தாள்கள் சிறந்தவை என்றபடி. போதம்-அறிவு. அம்மையின் திருவடிகள் தேவர் உலகிலுள்ள கற்பக மரச் சோலையின் மலர்களால் அருச்சித்துப் பூசிக்கப் பெறுதலின், அவற்றைக் ''கா அலர் பொதி தாள்'' என்றார். அம்மையின் திருவடிகளில் வைத்துப் பூசிக்கப்படும் மலர்கள், அம்மையின் திருவடிகளில் வந்து வீழ்ந்து பணியும் மும்மூர்த்திகளின் முடிகளில் பொருந்தி, அவர்களுக்குச் சிறப்பை அளித்தலின், 'மூவர் சென்னி களிக்கும்' என்றார். இச்செய்யுள் தேவியின் திருவடி வழிபாட்டின் சிறப்பை உணர்த்திற்று. இஃது உதாத்தம் என்னும் வீறுகோள் அணியாகும்.



# திருநீலகண்டம்

ந.ரா.முருகவேள், எம்.ஏ.எம்.ஓ.எல்.,

**முன்னுரை :**

சிவ பெருமான் மேற்கொண்டருளிய திருவுருவங்கள் பலவற்றுள், திருநீலகண்டத் திருவுருவம் என்பது ஒன்று. சிவ பெருமானின் திருவுருவங்களில் இது மிக மிகச் சிறப்புடைய தொன்றாகும். இத் திருவுருவம், சிவ பெருமானின் பேரருட் பெருந் தகைமையினைப் பெரிதும் விளக்குவதாகத் திகழ்கின்றது. ஆதலின் இதனைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்து, சைவ சமய ஆசிரியர்கள் அனைவரும், திருமறைகளிலும் சித்தாந்த சாத்திரங்களிலும், மற்றும் பல சைவ இலக்கியங்களிலும் விதந்து வியந்து துதித்துப் பாடியுள்ளனர். திருநீலகண்டம் எனப் புகழ்ந்து போற்றப் பெறும் இத் திருவுருவின் சிறப்பினைப் பெரிதும் விதந்து போற்றியே, திருஞானசம்பந்தர் ''அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்'' எனத் தொடங்கும் திருநீலகண்டத் திருப்பதிகம் பாடினர்.

''அவ்வினைக்கு இவ்வினை என்றெடுத்து
ஐயர் அமுது செய்த
வெவ்விடம் முன்தடுத்து எம்இடர்
நீக்கிய வெற்றியினல்,
எவ்விடத்தும் அடியார்இடர்
காப்பது கண்டம் என்றே
செய்வினை தீண்டா திருநீலகண்டம்
எனச் செப்பினர்''

—சேக்கிழார்.

திருநீலகண்டர் என்னும் திருப்பெயரைப் பலகாலும் அன்புடன் பயின்று ஓதி வந்த பக்திமையால், திருநீலகண்டர் எனவே ஒரு நாயனர் பெயர் வழங்கப் பெற்றார். சைவ நாயன்மார்கள் அறுபான்மூவரில், திருநீலகண்டர் (யாழ்ப்பாணர்) என வேறு ஒருவரும் பெயர் பெற்றிருந்தமை கருதற்பாலது.

''புவனங்கள் உய்ய, ஐயர்
பொங்கும் நஞ்சுண்ண, யாம்செய்
தவம்நின்று தடுத்த தென்னத்
தகைந்துதான் தரித்த தென்று
சிவன்எந்தை கண்டம் தன்னைத்
திருநீலகண்டம் என்பார்''

—சேக்கிழார்.

**வரலாறு :**

முன்னொரு காலத்தில் தேவர்களும் அசுரர்களும் தம்முள் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போரிட்டு வந்தனர். அங்ஙனம் போர் நிகழுங் காலங்களிலெல்லாம் தேவர்களிலும் அசுரர்களிலும் பற்பலர் இறந்தொழிந்தனர். அதனல் தேவர்களும் அசுரர்களும் தாம் இறவாமல் நெடுங்காலம் இருத்தல் வேண்டும் என விரும்பினர். அதற்காகப் பிரமதேவனை அணுகிப் பெரிதும் துதித்து வேண்டினர். அதற்குப் பிரமதேவன் நீங்கள் திருமாலை அடைந்து அவர்தம் உதவியைப் பெற்றுத் திருப்பாற்கடலைக் கடைந்தால், அதிலிருந்து இறவாமையைத் தரக்கூடிய அமிர்தம் வெளிப்படும். அதனை உண்டால் நீங்கள் நெடுங்காலம் இருக்கலாம் என்றார். அதன்படியே அவர்கள் திருமாலைச் சென்றடைந்து, அவர்தம் அருளைப் பெற்று மந்தரமலையை மத்தாகவும், சந்திரனைக் கடைதறியாகவும், வாசுகியைக் கயிருகவும் கொண்டு, அக்கயிற்றின் ஒரு புறத்தைத் தேவர்களும், மற்றொரு புறத்தை அசுரர்களும் பற்றிக் கொண்டு, திருப்பாற்கடலைக் கடைய முற்பட்டனர். அப்போது திருமால் ஆமை வடிவம் கொண்டு, மந்தர மலையாகிய மத்து நிலை குலையாதபடி, தமது முதுகினலும் கைகளினலும் தாங்கினர். இங்ஙனம் நெடுங்காலம் கடைந்ததனல் பாற்கடல் பொங்கித் ததும்பி, உலகங்கள் நிலை குலைந்தன. தேவர்கள் வலிகுன்றினர். மலைகள் சலித்தன. எண்திசை யானைகள் அஞ்சிக் கதறின. கயிருக அமைந்த வாசுகி என்னும் பாம்பு உடல் வலி பொறுக்க மாட்டாமல் வெய்துயிர்த்து, மெய் பதைத்து வெஞ்சினம் கொண்டு தனது ஆயிரம் வாய்களினின்றும் ஆலாலம் என்னும் நஞ்சினைக் கக்கிற்று. அவ்வமயம் பாற்கடலும் பொங்கிக் கொடிய நஞ்சினை உமிழ்ந்தது. அஃது உருண்டு திரண்டு சூல் கொண்ட மேகத் திரள்கள் போலக் கறுத்து இருண்டு, உலகிலுள்ள உயிர்களெல்லாம் தாங்க முடியாமல் மயங்கி வீழ்ந்து அழிந்து போகும்படி, எங்ஙணும் பரவத் தொடங்கியது.

ஆலாலம் என்னும் அந் நஞ்சின் கொடுமையும், வெப்பமும் தாங்க மட்டாமல், தேவர்களும் அசுரர்களும் பிரமனும் திருமாலும் ஆகிய அனைவரும் ஆங்காங்கே பலவகைகளில் பதறிச் சிதறி ஓடி ஒளிய முற்பட்டனர். அந் நிலையில் அவர்கள் அனைவரும் திருக்கயிலாயம் அடைந்து, தம்மையெல்லாம் காத்தருளும்படி சிவபெருமானிடம் முறையிட்டுக் கொண்டு அடைக்கலம் புகுந்தனர். அவர்கள்பால் இரக்கம் கொண்டு அருளிய சிவபெருமான் தமது அணுக்கத்தொண்டராகிய சுந்தரரை அனுப்பி அந் நஞ்சினைத் திரட்டி உருட்டி எடுத்து வரும்படி பணித்தருளினர். அதன்படியே சுந்தரர் சிவபெருமானின் திருவருட்டுணை கொண்டு, ஆலாலம் என்னும் அக்கொடிய நஞ்சினை ஒரு சிறிய திவலை (துளி)

போல் திரட்டிக் கொண்டு வந்து சிவபிரானிடம் கொடுத்தார். அந் நஞ்சினை வெளியில் எங்கேனும் விடில், உலக உயிர்களுக்குப் பெருந்திங்கு விளைவிக்கும் ஆதலின், அக் கொடிய நஞ்சினை, அமிழ்தம் போலக் கருதிச் சிவபிரான் அதனைத் தம் திருவாயிலிட்டு உட்கொண்டருளினர். அஃது அவர்தம் திருமிடற்றிற் சென்றது. அதனை யாவரும் நோக்கி, எம்பெருமானே இன்று எங்கள் உயிரையெல்லாம் காத்தருளியதற்குச் சான்ருகவும், தங்களது பேரருட்பெருங் கருணைத் திறனை விளக்கும் எடுத்துக் காட்டாகவும் அமையும்படி, இந் நஞ்சினைத் தாங்கள் தங்கள் திருக்கண்டத்திலேயே தங்கி நிற்கும்படி அருள் செய்க என்று துதித்து வேண்டிக் கொண்டனர். அதன்படியே சிவபெருமான் தம்முடைய அழகிய திருமிடற்றில், ஒரு நீல மணிபோல விளங்கும்படி, அந் நஞ்சினை நிலை நிறுத்திக் கொண்டருளினர். அதனுல் சிவபெருமானுக்குத் திருநீலகண்டம் என்பது, அவர்தம் சிறப்பு அடையாளங்களில் ஒன்ருயிற்று.

**சங்க இலக்கியங்கள் :**

சிவபெருமான் ஆலாலம் என்னும் நஞ்சினை உண்டருளியதும், அந் நஞ்சு அவர்தம் கண்டத்தில் தங்கித் திருநீலகண்டம் எனத் திகழப் பெற்றதும் ஆகிய செயல்கள், ஏறத்தாழ இற்றைக்கு 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்டைச் சங்க கால இலக்கியங்களிலும் பெரிதும் புகழ்ந்து போற்றப்பட்டுள்ளன.

''கறைமிடறு அணியலும் அணிந்தன்று, அக்கறை
மறைநவில் அந்ணர் நவிலவும் படுமே''

—புறநானூறு.

''விண்ணோர் அமுதுண்டும் சாவ, ஒருவரும்
உண்ணுத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்''

—சிலப்பதிகாரம்.

''நீரகம் பணிக்கும் அஞ்சுவரு கடுந்திறற்
பேரிசை நவிரம் மேஎய் உறையும்
காரி யுண்டிக் கடவுளது இயற்கை''

—மலைபடுகடாம்.

**சேக்கிழார்*:**

சிவபெருமான், ஒருவரும் உண்ணுத கொடிய ஆலாலம் என்னும் நஞ்சினையுண்டு ஒரு தீங்கும் இன்றித் திகழ்ந்து, உலகுக்கு நலம் புரிந்தருளிய ஒப்பரிய சிறப்பினைத் தமது பெரிய புராணத்தில், தக்கதோர் இடத்தில் நினைவு கூர்ந்து, நமக்கும் நினைவூட்டுகின்ருர். திருநாவுக்கரசர் சமண் சமயம் விடுத்துச் சைவ சமயம் சார்ந்தமைக்காக மகேந்திரவர்ம பல்லவன் (கி.பி. 600—638), தனது சமண சமயக் குருமார்கள் பணித்தபடி, அவருக்குப் பலவகையான தண்டனைகளைத் தருகின்ருன். அதன்படி சமணர்கள் திருநாவுக்கரசருக்குப் பாற்சோற்றில் நஞ்சு கலந்து கொடுத்து உண்பித்தனர். நஞ்சுண்டு உலகுக்கு நலம் புரிந்த நம் சிவபெருமானின் திருவருள் துணையிருக்கும் போது, இந்த நஞ்சு நம்மை என்ன செய்யக் கூடும்? எனத் தெளிந்த உள்ளத்தினராய்த் திருநாவுக்கரசர் பெருமான், அவ்வஞ்சனைப் பாற்சோற்று நஞ்சினை வாங்கியுண்டார். அஃது அவருக்கு யாதொரு தீங்கும் செய்திலது! சிறந்த நல்ல தவப் பயிற்சியினுல், நஞ்சையும் அமுதமாக்கி உண்டு, யாதொரு தீங்கும் இன்றி இருத்தல் கூடும் என்று அரவிந்த அடிகளார் குறிப்பிட்டிருத்தலும், இங்கு நாம் இயைபுடைமை பற்றி உணர்ந்து இன்புறலாம்.

''நஞ்சும் அமுதாம் எங்கள்
நாதன் அடியார்க் கென்று
வஞ்சமிகு நெஞ்சுடையார்
வஞ்சனையாம் படியறிந்தே,
செஞ்சடையார் சீர்விளங்கும்
திறலுடையார், தீவிடத்தால்
வெஞ்சமணர் இடுவித்த
பாலடிசில் மிசைந்திருந்தார்!''

''பொடியார்க்கும் திருமேனிப்;
புனிதற்குப் புவனங்கள்
முடிவாக்கும் துயர்நீங்க
முன்னைவிடம் அமுதானுல்
படியார்க்கும் அறிவரிய
பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சு அமுதம்
ஆவதுதான் அற்புதமோ?''

—பெரிய புராணம்.

**அவ்வையார் :**

சிவபெருமானின் திருநீலகண்டத் திருவுருவம் சங்க காலத்திலேயே தமிழ் மக்களிடையிற் பெரிதும் சிறப்பாகப் போற்றப்பெற்று வந்தது. சங்க காலப் புலவர் பெருமக்களுள் தலைசிறந்த ஒருவராகத் திகழ்ந்திருந்த செவ்வி புலமைச் செல்வியார் ஆகிய அவ்வைப் பிராட்டியார், தமக்கு அதிகமான் அஞ்சி என்னும் சங்க கால வள்ளல், நெடுநாள் இறவாமல் வாழ்ந்திருக்கும் பேற்றைத் தரக்கூடிய அருநெல்லிக் கனி ஒன்றினை யளித்து உண்ணச் செய்தபோது, அவனது தன்னலமற்ற பெருந்தகைமைப் பண்பினை வியந்து, நீ நீடுழிகாலம் நலம்மிக இனிது வாழ்க என வாழ்த்துகின்ருர்! அங்ஙனம் வாழ்த்துங்கால் 'நீல மணி மிடற்று ஒருவன்' ஆகிய சிவபெருமான் போல வாழ்க என வாழ்த்துகின்ருர்.

---

*'There is the Dravyaguna, the particular nature of food as well as fixed ideas in our beings. But the removal of the idea from the mind alone does not free you from it. You must become conscious of the same idea in your vital being and remove it from there as well. The vital also has strong likes and dislikes like that.

I have removed all such fixed ideas from my being down to the physico-vital and can now take any food, whether hot, cold or spiced, good or bad; I can now take the essential rasa out of any and every kind of food.

In my case, this desire for and antipathy to certain kinds of food is stiil there in the atoms of my physical being, If that can be removed, then it may be possible that even a cup of poison will not affect''.

—SRI AUROBINDO,

*Reminiscenses & Anecdotes of Sri Aurobindo, M.P. Pandit.*

'வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னர்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்!
போர்அடு திருவிற் பொலந்தார் அஞ்சி
பால்புரை பிறைநுதற்பொலிந்த சென்னி
நீல மணி மிடற்று ருவன் போல,
மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்
பெருமலை விடர்அகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது,
ஆதல்நின் அகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்குஈத் தனையே''

என்பது புகழ் மிக்க, புறநானூற்றுப் பாடல்களுள் ஒன்று. சாதற்குக் காரணமாகிய நஞ்சுண்டும், சிவபெருமான் சாவாது நிலைபெற்றிருந்தாற் போல, நீயும் சாவாது நீடினிது வாழ்க என்பது, இப் பாடலின் கருத்து. நீலமணி மிடற்று ஒருவனுகிய சிவபெருமானை நினைந்து வழிபட்டு வந்தால், இறவாத பெருவாழ்வை நாம் இனிது எய்தலாம் என்னும் உண்மையும், இதனுல் அறியப்படும்.

**பிற்கால நூல்கள் :**

சங்க இலக்கியங்களிலும், சைவத் திருமுறைகளிலும் மட்டுமேயன்றி, வேறு பிற சமய நூல்களிலும் சிவபிரானின் நஞ்சுண்ட செயலும், திருநீலகண்டத்தின் சிறப்பும் பெரிதும் புகழப்பட்டுள்ளது.

''பஞ்செனச் சிவக்கும் மென்கால்
தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக்கு இளைய என்னை
வருகஎன் றருள்செய் தானே?
தஞ்செனக் கருதி னுனே?
தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்செனத் தகையன் அன்றே,
நாயகன் அருளின் நாயேன்''

—கம்பர்.

''விடமும் வந்து ஈசன் கோல
மிடற்றினில் நீல வண்ண
வடிவுபெற் றணிய தாகி
வயங்கிற்றுப் பெரிதும் என்றால்,
கொடியரும் பெருமை யோரைக்
கூடின்வெங் கோது நீங்கி
ஒடிவறு நலம்பெற் றுய்தல்
உரைப்பதென் உலகின் அம்மா?''

—சூளாமணி.

**குமரகுருபரர் :**

சிவபெருமான் நஞ்சுண்டு தேவர்களையும் பிறரையும் காத்தருளிய செயலைப் பிற்காலச் சான்றோர்கள் பல வகைகளில் சுவை பெறப் பாடியுள்ளனர். சிவபெருமான் நஞ்சுண்டதனுல்தான், தேவமாதர்கள் தம்முடைய காதுகளில் காதோலை அணிந்து கொண்டு சுமங்கலிகளாக விளங்குகின்றனர் ; இல்லையேல் தம் கணவர்களாகிய தேவர்கள் இறந்து போக, தேவப் பெண்கள் தம் காதோலைகளை இழந்து அமங்கலிகள் ஆகியிருப்பர். எனவே சிவபெருமான் ''தேவர்தம் பாவையர்க்கு அன்று காதோலை பாலித்த தயவாளர் ஆவார்'' என்று குமரகுருபரர் தமது மதுரைக் கலம்பகத்தில் பாடுகின்ருர். மேலும் அவர், சிவபெருமான் ஆலாலம் என்னும் நஞ்சினை உண்ணுமலும், அவர்தம் கண்டம் நீல நிறம் ஆகாமலும் இருந்திருந்தால், தேவர்கள் அனைவரும் இறந்து அழிந்து போயிருப்பார்கள். அதனுல் தம் கணவன் மாரை இழந்து தேவ மாதர்கள் தம் கைகளால் மார்பில் அடித்துக் கொண்டு அழுது புலம்பியிருப்பார்கள். அப்போது அவர்களின் செங்கைகளும் கொங்கைகளும் சிவந்து போய் இருக்கும். அங்ஙனம் சிவந்து போகாமல் இருப்பதற்காகவே, சிவபெருமான் அக்கொடிய நஞ்சினையுண்டு, தமது கண்டத்தினை நீல நிறம் ஆக்கிக்கொண்டு அருளினர் என்றும், அழகுறப் பாடியிருக்கின்ருர்.

**காளமேகப் புலவர் :**

இக் கருத்தினையே வேருெரு வகையில் காளமேகப் புலவர் கற்பனைச் சுவை நலம் பொலியத் தமது தனிப் பாடல் ஒன்றில் இனிப் பாகப் பாடியிருக்கின்ருர். ஒரு சமயம் காள மேகப் புலவர் ஆலங்குடி என்னும் ஊருக்குச் சென்ருர். அங்குச் சிவாலயத்தினுள், சென்று இங்குள்ள இறைவனின் பெயர் யாது என்று அருகிலிருந்தாரை வினவினர். அவர்கள் அதற்கு ஆலங்குடியில் இருப்பதனுல் இவருக்கு ஆலங்குடியான் என்பது பெயர் எனக் கூறினர். அது கேட்ட காள மேகப் புலவர் இங்குள்ள சிவபெருமானுக்கு ஆலங்குடியான் என்பதா பெயர்? சிவபெருமான் ஆலம் குடித்தவனுயிற்றே? சிவபெருமான் ஆலம் குடித்திருக்காவிட்டால் மண்ணுலகமும் விண்ணுலகமும் தேவர்களும் யாவர்களும் அழிந்தொழிந்திருக்க நேருமே? இங்ஙனம் அழிந்தொழிந்து போகாதபடி எல்லோரையும் காத்தருளுவதற்காக ஆலம் குடித்தருளிய பெருமானை, ஆலங்குடியான் என்று சொல்வது எவ்வாறு பொருந்தும்? என்னும் கருத்தமைய அழகாகப் பாடி, இறைவனின் பெருங் கருணைத் திறத்தினை இனிது விளக்கியருளினுர்.

''ஆலங் குடியானை ஆலாலம் உண்டானை
ஆலங் குடியான்என்று ஆர்சொன்னுர்?—ஆலம்
குடியானேல் வானும் குவலயமும் எல்லாம்
மடியாவோ முற்ருெருங்கு மாய்ந்து''

என்பது காளமேகப் புலவரின் கவி நலம் சான்ற தனிப் பாடலாகும். இராமலிங்க அடிகளும், ''மால் எங்கே? தேவன் உயர் வாழ்வெங்கே? இந்திரன் செங்கோல் எங்கே? வானேர் குடி எங்கே? கோலஞ்சேர் அண்டம் எங்கே? அவ்வவ் அரும் பொருள் எங்கே? நினது கண்டம் அங்கே நீலம் உறுக்கால்?'' என்று தமது திருவருட்பாவில் பாடியிருத்தல் போல்வன, இங்கு நாம் இயைபுடைமை பற்றி அறிந்து இன்புறத் தக்கனவாகும்.

**முடிவுரை :**

இவ்வுலகில் உள்ள மக்களைத் தலையாயர் இடையாயர் கடையாயர் என மூவகையினராகப் பிரிக்கலாம். பிறரைத் துன்புறுத்தித் தாமே வாழ விரும்புபவர்கள் கடையாயர்;

பிறரும் வாழ்க நாமும் வாழ்வோம் என்றிருப்பவர்கள் இடையாயர்; தம்மை அழித்துக் கொண்டாலும் பிறரை வாழ்விக்க முயல்பவர்கள் தலையாயவர்கள். இங்ஙனம் தமக்கென வாழாமல் பிறர்க்கெனவே வாழ்ந்து வருபவர்கள், மன்னுயிர்களின் இன்ப நலங் கருதித் தாம் எத்துணைத் துன்பங்களையும் ஏற்றுக் கொள்வர். "அளவிலா அன்பு அளவிலாத் துன்பு" என்பதற்கு, அவர்களின் தூய சிறந்த வாழ்வு மேலான எடுத்துக்காட்டாக விளங்கும். இவ்வியல்பினையும் உண்மையினையும் தெள்ளிதின் அறிவுறுப்பதே, சிவபெருமானின் திருநீலகண்டத் திருவுருவம் ஆகும்.

"பெயக் கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

என்னும் திருவள்ளுவரின் திருக்குறளுக்குச் சிறந்துயர்ந்த இலக்கியமாகத் திகழ்வது, சிவபிரானின் திருநீலகண்டத் திருவுருவமே எனலாம். இத்தகைய சிறப்பு மிக்க திருவுருவிற் சிவபெருமானை வணங்கி வழிபடுவதன் மூலம், நாமும் நயத்தக்க நாகரிக நல்வாழ்வின் பயனைப் பெற்றுய்ய முயல்வோமாக!

* Suffering rinses our spirit clean. According to Hindu mythology, the God Siva undertakes himself to swallow the poison which comes up when the ocean is churned. The God of the christians gave His Son in order to save mankind. Even if they are myths, why should they have arisen if the did not express some deep-seated intutions in men. The more you love, the more you suffer. Infinite love is, infinit suffering".

—Dr. S. RADHAKRISHNAN,
*Religion as Life in God.*

நீநாளும் நன்னெஞ்சே! நினைக்கண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும்? சாய்க்காட்டுடம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

கண்காட்டும் நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பெண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் சௌடியானே

ஈராய் முதல் ஒன்றாய் இருபெண் ஆண் குணம் மூன்றாய்
மாறா மறை நான்காய் வருபூதம் அவை ஐந்தாய்
ஆறு ஆர்சுவை ஏழ் ஓசையோடு எட்டுத்திசை தானாய்
வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம்மிழலையே.

'திருஞானசம்பந்தர்'


**BUY 22Ct. GOLD JEWELS**

*from*

# M. V. RANGAM CHETTY & CO.,

**JEWELLERS**

Estd. 1932

Grams : "RANGAMADI" Phone : 33790

29, N. S. C. BOSE ROAD,

**MADRAS-600001.**

# அல்லல் அறு பதிகம்



மா. கோபாலன், பி.ஏ.,

காணிப் புலமு மிலானைக் கழலினாற் காலனையும்
நாணிப் புறமிடச் செய்தானை நாதனை நற்புனல்சேர்
வேணிப் புனிதனை வேண்டுவார் உள்ளம் விழைந்திடுமோர்
ஆணிக் கனகனை ஏத்துவார்க் கில்லையிங் கல்லல்களே.

பேரொன் றிலாதானைப் பெம்மானை எம்மானைப் பிஞ்ஞகனைத்
தாரொன்று கொன்றை தரித்திடு வானைநற் சங்கரனைக்
காரொன்றுளத்தினர் காணாக் கழலனைக் கள்ளொழுகும்
ஆரொன்று மார்பனை ஏத்துவார்க் கில்லையிங் கல்லல்களே.

நாகம் அணிந்தானை நாதமே ஆனானை நற்புலவோர்
ஏகன் அநேகன்என் றேத்தித் தொழநின்ற இறையவனை
வேகம் அடக்கிவந் தாள்வானை வேற்கண் விளங்கிழையாட்கு
ஆகம தீந்தானை ஏத்துவார்க் கில்லையிங் கல்லல்களே.

திங்களைச் செஞ்சடை சேர்த்தானைத் தேசுறு தீக்கண்ணனை
வெங்கடு வுண்டானை வெண்பிட் டுவந்தானை வேய்நெடுந்தோள்
மங்கையைப் பல்லற மும்செய்வித் தானை மன்னியவேள்
அங்கமே தீய்த்தானை யேத்துவார்க் கில்லையிங் கல்லல்களே.

பித்தனைப் பேயனைப் பின்னு சடையனைப் பெண்ணிடங்கொள்
மத்தனை மாலயன் காணா மலையனை மாதவனை
எத்தனை தீங்குசெய் தாலும் பொறுத்தே யிருப்பவனை
அத்தனை ஐயனை ஏத்துவார்க் கில்லையிங் கல்லல்களே.

செப்பும்ஓர் ஐந்தெழுத் தின்செம் பொருளைச் சிறுபிறையை
அப்புறு செஞ்சடை யிற்கரந் தன்பர்க் கருள்பவனை,
எப்பொழு தும்வே றுடன்ஒன் றெனஇங் கிருப்பவனை
அப்பனை ஈசனை ஏத்துவார்க் கில்லையிங் கல்லல்களே.

காலனை வாராது காலா லுதைத்தானைக் கண்ணகன்ற
ஞாலம் அழிந்துழி நட்டம் பயில்வானை நான்மறைகள்
ஓலமிட் டேஅழத் தோன்றா தொளித்தானை ஓதமலி
ஆலமி டற்றானை ஏத்துவார்க் கில்லையிங் கல்லல்களே.

துடியார் கரத்தானைத் தொன்மறை தந்தானைத் தூயகொற்றங்
குடியார்க் கொருவெண்பாத் தந்துய்த் தருளிய கூத்தனையிப்
படியார் உயிரெலாம் பற்றிடும் நம்பனைப் பந்தமிலா
அடியார்க் கெளியனை யேத்துவார்க் கில்லையிங் கல்லல்களே.

ஞானத் தொருவனை நல்லாலின் கீழன்று நால்வருக்கும்
மோனத் துருவினில் முப்பொரு ளுண்மை மொழிந்தவனை
வானத் தவரும் வழுத்தித் துதித்திடும் வள்ளலைத்தாய்
ஆன பரமனை ஏத்துவார்க் கில்லையிங் கல்லல்களே.

சக்கரச் செல்வத் தவரும், சகல கலைகளிலும்
மிக்குயர் தேர்ச்சிபெற் றோர்களும் காணொணா வித்தகனை,
இக்கொரு வில்லா யுடையவன் மேனி எரித்தவனை
அக்கரம் ஐந்தானை ஏத்துவார்க் கில்லையிங் கல்லல்களே.

# முத்தகம், குளகம் காவியம், சித்திரம்

ந. ரா. முருகவேள். எம். ஏ. எம். ஓ. எல்.,

**முன்னுரை**

அழகை விரும்பாதார் உலகத்தில் யாரும் இல்லை. 'அழகுப் பொருள் என்றும் அளவிலா இன்பப் பொருள்'. எல்லாப் பொருள்களிலும் நாம் அழகை எதிர்பார்ப்பது போலவே, செய்யுட்களிலும் சிறப்பும் அழகும் இருத்தல் வேண்டும் என விரும்புகின்றோம். அது பற்றியே ''உணர்வினின் வல்லோர் அணி பெறச் செய்வன செய்யுள்'' என நன்னூலார் நவின்றருளினர். செய்யுட்களுக்கு அழகும் சுவையும் சிறப்பும் அளிக்கவல்ல அணி நலங்கள் இன்றியமையாதன. ''அணி யிலாக் கவிதை பணி யிலா வனிதை'' என்பது பழமொழி.

**உவமையணி**

செய்யுட்களுக்கு இன்றியமையாத சிறப்பிற்குரியனவாகத் திகழும் அணிகளையெல்லாம், ஆசிரியர் தொல்காப்பியனார் உவமை யொன்றின் கண்ணேயே அடக்கி விளக்கியருளினர். உவமையினின்றே ஏனைய பல அணிகளெல்லாம் ஏற்படலாயின என்பதனை,

கற்பனை செறிந்த நல்ல
    கவிதையாம் அரங்கம் தன்னில்
பொற்புறும் உவமை என்னும்
    புகழ்மிகும் விறலி தானே,
பற்பல வேடம் பூண்டு
    பண்பமை சுவைஞர் உள்ளம்
நற்பெரு மகிழ்ச்சி பொங்க
    நடனம்செய் தின்பம் நல்கும்!

நலமிகும் உவமை என்னும்
    நல்லெழில் விறலி தானே
பலவகைச் சிறந்த கோலம்
    பாங்குறப் புனைந்து போந்து,
கலைநிறைத் துயர்ந்து நிற்கும்
    காவிய அரங்கில் தோன்றிப்
புலவர்தம் உள்ளத் தின்பம்
    பொங்கிட நடிப்பள் நன்றே

என அறிஞர்கள் சுவைபடக்கூறுமாற்றால், தெளியலாம். இஃதெங்ஙனமாயினும், இற்றைநாளில் செய்யுட்களுக்குரிய அணிகளைக் குறித்து நூல்கள் பல தமிழில் உள்ளன. அவற்றிற் பெரிதும் தலை சிறந்தது தண்டியலங்காரம். அது காவியாதர்சம் என்னும் வட நூலைத் தழுவி இயற்றப் பெற்ற தென்பர். அணி இலக்கண நூல்களுள், 'முத்தகம்,' 'குளகம்', 'காவியம்', 'சித்திரம்' எனக் கவி வகைகளைப் பற்றிய குறியீடுகள் வழங்கும்.

**அணி இலக்கணம்**

செய்யுள் அல்லது கவிதைகள், முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர் நிலை என நான்கு வகைப்படும். 'முத்தகச் செய்யுள் தனி நின்று முடியும்'. 'குளகம் பலபாட்டு ஒருவினை கொள்ளும்'. ஒரு செய்யுளோடு மற்றொரு செய்யுளுக்குத் தொடர்பு யாதும் இன்றித் தனித் தனியே ஒரு பொருளை உணர்த்தும் செய்யுட்கள் பல தொகுக்கப்பட்ட நூல், தொகை நிலைச் செய்யுள் எனப்படும். அது பொருள் இடம் காலம் தொழில் பாட்டு அளவு என்பனவற்றாற் பெயர் பெறும். அவை முறையே புறநானூறு களவழிநாற்பது கார்நாற்பது ஐந்திணை யைம்பது கலித்தொகை குறுந்தொகை என்றாற் போல்வனவாம். தொடர்நிலைச் செய்யுள், சொல் பொருள் என்னும் இரு வகையிலும் தொடர்ந்து வரும். அந்தாதியாகப் பாடப் பெற்ற சிற்றிலக்கியங்கள் சொற்றொடர் நிலைச் செய்யுள் எனப்படும். சிலப்பதிகாரம் சிந்தாமணி முதலியன பொருட்டொடர் நிலைச் செய்யுட்கள் ஆகும். பொருட்டொடர் நிலைச் செய்யுள் எனினும், காவியம் (காப்பியம்) எனினும் ஒக்கும். சொல்லணிகளால் அமையும் கோமூத்திரி கூடசதுக்கம் மாலைமாற்று எழுத்து வருத்தனம் நாகபந்தம் வினாவுத்தரம் காதை கரப்பு கரந்துறைச்செய்யுள் சக்கரம் சுழிகுளம் சருப்பதோபத்திரம் அக்கரச்சுதகம் போல்வன, சித்திர கவிகள் என வழங்கும்.

**மதுரைக் கலம்பகம்**

முருகன் திருவருளால் பழுத்த தமிழ்ப் புலமை பாலிக்கப் பெற்ற குமரகுருபர அடிகள், முத்தகம் காவியம் சித்திரப் பாட்டு என்னும் செய்யுளுக்குரிய அணியியல் இலக்கண நூற் குறியீடுகளைப் பின்வரும் மதுரைக் கலம்பகச் செய்யுளிற் பயன்படுத்தியிருத்தல் காணலாம்.

''குண்டுநீர்ப் பட்டத்து ஒண்டுறைச் சங்கமும்
வண்டமிழ்க் கடலின் தண்டுறைச் சங்கமும்
முத்தகம் பயின்று காவியங் கற்றுச்
சித்திரப் பாட்டியல் தேர்ந்தன செல்லும்
தடம்பணை யுடுத்த தண்டமிழ்க் கூடல்...''

மதுரைமா நகரில் இரு வகைச் சங்கங்கள் உள்ளன. ஒருவகை, நீர்நிலைகளின் துறைகளில் இருப்பன. மற்றொரு வகை, தமிழாகிய கடலிலுள்ள அகத்துறை புறத்துறைகளைத் தேர்வன. நீர் நிலைகளில் உள்ள சங்குகள் முத்தை அகத்தே பயின்று, காவில் இயங்குதல் கற்று, ஏரல் எழுத்து எனும் கோடுகளால் சித்திரப் பாட்டியல் தேர்ந்து கொண்டு, ஊர்ந்து செல்கின்றன. தமிழ்ச் சங்கங்கள் முத்தகம் என்னும் செய்யுளைப் பயின்று, காவிய நூல்களைக் கற்று, சித்திரப் பாட்டியல்களை ஆராய்ந்து கொண்டு நடைபெறுகின்றன என்பது இதன் பொருள்.

''சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய அங்கண் மூதூர்
நூல்பாய் இடத்தும்உள, நோன்றலை மேதி பாயப்
பால்பாய் முலைத்தோய் மதுப்பங்கயம் பாய எங்குஞ்
சேல்பாய் தடத்தும் உள, செய்யுள் மிக்கேறு சங்கம்''

என வரும் அரிய பெரிய புராணத் திருப்பாடலும் ஈண்டு நம்மனோர் நினைவு கூர்ந்து மகிழற்பாலது.

*

# அருள்மிகு
# பட்டிப்பெருமான் திருக்கோயில்

## பேரூர், கோவை-10.

இது தொன்மையும் பழமையும் வாய்ந்த சிவாலயம். இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் சுயம்பு மூர்த்தி. இவ்வாலயத்திலுள்ள கனக சபையில் கோமுனி, பட்டிமுனி இருவருக்காக ஆடிய பாதத்தோடு விளங்கும் நடராஜர் வடிவம் மிக மிக அழகானது. நடராஜ பெருமானை வலம் வரும் வண்ணம் அமையப் பெற்றுள்ள தலம் இது ஒன்றே என்று சொல்லலாம். இத் தலம் மேலைச் சிதம்பரம் எனவும் வழங்கப்படுகிறது. கனகசபை மதுரை திருமலை நாய்க்கர் சகோதரரான அளகாத்திரி நாயக்கரால் (1625—1659) கட்டப்பட்டது. இக் கனகசபையில் சிற்பக் கலை வேலைப்பாடுகள் மிளிர்கின்றது.

புராதனமான பட்டிப்பெருமாள் கோயிலில் கற்பக்கிருகத்தைக் கரிகால் சோழன் அமைத்ததாகச் சொல்லப்படுகிறது. என்றும் அழிவற்ற இறவாப் பனையும், பிறப்பேயில்லாத பிறவாப் புளியும் பைத்தியத்தை நீக்கும் புண்ணிய தீர்த்தம் சுரக்கும் பிரம்ம தீர்த்தக் கிணறும், இத்தலத்தின் புனிதத்தை இன்றும் எடுத்துக் கூறுபவை. அப்பரும் சுந்தரரும் இத்தலத்தைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இங்குள்ள முருகப் பெருமான் தண்டாயுதபாணி என அழைக்கப்படுகிறார். மேற்கு நோக்கி நின்று அருள் புரிகின்றார். அருணகிரிநாதர் இத்தாண்டயுதபாணிப் பெருமானை இரு திருப்புகழ்ப் பாடல்களாற் பாடியுள்ளார்.

ஆலய வெளிப் பிரகார கருங்கல் திருப்பணி, கோபுர விமானங்கள் பழுது பார்த்து வர்ணம் வைப்பது முதலிய வேலைகள் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் நடைபெற்று வருகிறது.

இவ்வாலய குடமுழுக்கு விழா 29—8—74 அன்று மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் தலைமையில் விமரிசையாக நடைபெற உள்ளது. தமிழகத்திலுள்ள மடாதிபதிகள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

நிதி பற்றாக்குறையாக இருப்பதால் ஆலயத் திருப்பணிக்கும் குடமுழுக்கு விழாவிற்கும் தாராளமாக நிதி உதவுமாறு அன்பர்கள் வேண்டப்படுகிறார்கள். ''செயல் அலுவலர், அருள்மிகு பட்டிப்பெருமான் திருக்கோயில், பேரூர், கோவை—10'' என்ற முகவரிக்குத் தொகைகளை அனுப்பி இரசீது பெற்றுக் கொள்ளலாம்.

ஆரூரத்தா! ஐயாற்றமுதே! அளப்பூர் அம்மானே!
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற் கருகாவூரானே!
பேரூர் உறைவாய்ப் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே!
பாரூர் பலரும் பரவப் படுவாய் பாரூர் அம்மானே!

—சுந்தரமூர்த்திகள் தேவாரம்.


தீராப் பிணிதீர சீவாத்துமஞான
ஊராட்சியதான ஓர்வாக் கருள்வாயே
பாரோர்க் கிறைசேயே பாலாக் கிரிராசா
பேராற் பெரியோனே பேரூர் பெருமானே.

—திருப்புகழ்.

**மா. இரா. சிவசாமி,**
அறங்காவலர் குழுத்தலைவர்.

**என். ஆர். லிங்கமராஜா**, எம்.ஏ.,
செயல் அலுவலர்.

**க. சிவசாமி,**
**இரா. கருப்பசாமி,**
**கு. ப. ஜெகன்னாதன்,**
**ந. இராசு,**
அறங்காவலர்கள்.



# குறள் கூறும் நன்னெறி

## கே.எஸ்.ஜெகன்னாதன்

தமிழ் மொழியில் முதலில் தோன்றிய நூல்கள் எனத் திருக்குறளையும், தொல்காப்பியத்தையுமே கூறுவர். உலகத்தில் சாதி, மதம், ஏற்றத் தாழ்வு, காலம், கொள்கை, நாடு முதலிய வேறுபாடு ஏதும் இல்லாது, எல்லா நாட்டிற்கும் எல்லா இனமக்களுக்கும் வாழ்க்கைக்கு வழி காட்டியாக அமைந்திருப்பது ''திருக்குறள்'' ஆகும்.

திருவள்ளுவரால் உருவாக்கித் தரப்பட்ட நன்னெறிகளை உடைய திருக்குறள் தமிழ் நாட்டிற்குத் தனிப் புகழையும், பெருமையையும், அளித்து வருகிறது.

''வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு''

என்று தேசியகவி பாரதியார் அவர்கள் பாடினார்கள்.

தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், திவ்வியப் பிரபந்தம், கம்பராமாயணம் முதலிய அரும்பெரும் இறை அருளைக் கூறும் நூல்களில் திருக்குறள் ஆங்காங்கே எடுத்துக் கையாளப்பட்டிருக்கின்றதை நாம் காண்கிறோம்.

''தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆனா அறமுதலா வந்நான்கும்—ஏனோருக்
கூழின் உரைத் தாற்கும்''

என்று குறளின் மேன்மையை ''நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே'' என ஈசனிடமே வாதம் புரிந்து, தமிழ்மொழியைக் காத்து வளர்த்த நக்கீரர் கூறுகின்றதையும் காண்கின்றோம்.

எல்லா உயிர்களுக்கும் முதல்வன் இறைவன். நம்மைப் படைத்து ஐம்புல இன்பங்களையும் அளித்து, அவற்றை உணரச் செய்து மீண்டும் அவனடிக்கே அழைத்துக் கொள்கின்றான். இறைவனே முதல்வன் என்பதால்தான் குறளில் முதல் குறளாக,

''அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''
என்று பாடிக் குறளைத் துவக்கியிருக்கின்றார்.

எவ்வாறு எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதன்மையாகக் கொண்டு விளங்குகின்றதோ அதேபோல் இறைவனாகிய ஆதிபகவனை உலகம் தனக்கு முதல்வனாகக் கொண்டு வாழ்கிறது என்று கூறுகின்றார்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் இந்த ஐவகையான தொழில்களை இடைவிடாது இயக்கி வருகின்றான் இறைவன். படைத்தலை இரு வகையாகத் திருமூலர் சுட்டிக் காட்டுகின்றார். ஒன்று சர்வ சிருட்டி, உலகத் தோற்றம் முதலியவற்றைப் பற்றிக் கூறுவது. இரண்டு கர்ப்பக்கிரியை என்பது. இது இறைவன் தாயின் கருவில் வளரும் சேயிற்கு அருள்புரிவது.

ஆதியும் அந்தமுமில்லாத அரும்பெரும் சோதியாக இலங்கும் இறைவன் கருவிலே உயிரைத் தந்து பிறப்பிலே உறவைத் தருகிறான். உயிரையும், உறவையும் தருகின்ற அவனே வாழ்க்கையின் முறைகளையும் வகுத்துத் தருகின்றான். இதைத் தான் குறளில் வள்ளுவர்,

''பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்''

என்று கூறுகின்றார்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாக வரும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் ஐந்தின்கண்ணும் செல்லும் மன நிகழ்ச்சியை அடக்கிப் பொய்ம்மை இல்லாத ஒழுக்க நெறியிலே இருந்து வாழ்கின்றவன் நெடிது நீண்ட காலம் வாழ்வான் என்று கூறுகின்றார்.

ஐந்தொழில் புரியும் இறைவனது மலரடி அடைய மனித உறுப்புகளான ஐம்பொறிகளினால் ஏற்படும் ஐவகை நிகழ்ச்சிகளை அடக்கிப் பொய்ம்மை கிஞ்சிற்றும் இல்லாத நன்னெறியையும் தூய ஒழுக்கமும் கொண்டு வாழ்பவன் தான் இறைவனது திருவடிகளை அடையமுடியும் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார்.

உலகில் வாழும் மக்கள் பலரும் தெய்வத்தைத் தேடிச் செல்வதைப் பார்க்கின்றோம். ஆனால் அதே நேரத்தில் தெய்வத் தன்மைகளைப் போற்றிப் பின்பற்றி வாழ்க்கையில் அவர்கள் மேற்கொண்டு நடந்திடாத காட்சிகளையும் காண்கின்றோம்.

''நல்லதோர் வீணை செய்தே—அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி
வல்லமை தாராயோ? இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே''

என்ற கேள்விக் கணையினைத் தொடுக்கின்றார் பாரதியார். அவரின் கேள்வி நியாயத்தின்பாற் பட்டதேயாகும்.

நல்ல வீணையாயினும் அதனை மீட்டி இசையினை இப்புவிக்கு வழங்கிட, ஆற்றலைப் பெற்றவன் மீட்டிட வேண்டும். ஒவ்வொருவரின் திறமைக்கேற்ப வீணையிலிருந்து இசை பிறக்கின்றது. மீட்டுபவன் இசை ஞானம் இல்லாதவனாயின் சுருதி பேதம் ஏற்படுகின்றது. வீணையின் இசையில் அபசுரம் பிறக்கின்றது.

வீணையைப் போன்றதே மனித வாழ்க்கையுமாகும், மனித வாழ்க்கையை அன்புள்ள வாழ்க்கையாகவும் மாற்றலாம், அறிவுள்ள வாழ்க்கையாகவும், அருள், ஒழுக்கம் இவைகளையுடைய வாழ்க்கையாகவும் மாற்றலாம். மனிதன் முயன்று செய்தால் இவ்வரிய நல் வாழ்க்கை முறைகளால் இவ் வையத்துள் வாழ்வாங்கு வாழ்கின்ற மனித தெய்வமாகின்றான்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

என்று இரண்டே வரிகளில் நன்னெறிபுகட்டும் நற்கருத்தை குறளிலே வள்ளுவர் கூறுகின்றார்.

மனித வாழ்க்கையில் அவன் செய்யும் அறம் அவனை உயர்த்துகின்றது. சமுதாயத்தில் அறம் செய்கின்றவன் தனிப் புகழுடன் வாழ முடிகின்றது.

''அறம் செய்ய விரும்பு''

என்று அறம் செய்திட விரும்பவேண்டும். விரும்பிச் செய்கின்ற அறமே சிறந்தது என்று ''ஔவையார்' நினைவூட்டுகின்றார். 'தருமம் தலைகாக்கும்' என்பது பழமொழி. அத் தருமம் செய்யும்போது அவனுக்கு இன்பம் பயக்கும். அறம் செய்வதற்கு மேல் வேறொன்றுமில்லை. அறத்தினைச் செய்யாதுமறந்து இருப்பது போன்ற கேடும் இல்லை. கேட்டதும் கொடுப்பவன் கண்ணன், என்று கீதையின் நாயகனைப் போற்றுகின்றனர். கேட்காமலேயே கொடுத்துச் சிறப்புப் பெற வேண்டும்.

''அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு''

என்று அறத்தினை வலியுறுத்தி வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார். அறத்தினை வலியுறுத்திக் கூறுகின்ற வள்ளுவர், இல்வாழ்க்கையிலும் அதனைப் பின்பற்ற வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றார்.

''அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று''

என்கின்றார். அறத்தோடு கூடிய இல்வாழ்க்கை தான் சிறந்தது என்றும், அறத்தோடு கூடிய அவ்வாழ்க்கையும் பிறர் குற்றம் குறைகூறாத பழிச்சொல் சொல்லாத வாழ்க்கையாக இல் வாழ்க்கை அமைதல் வேண்டும் என்பதோடு மட்டுமின்றி, வாழ்க்கை என்பதை இரு கூறாகப் பிரித்து, ஒன்று இல்வாழ்க்கை மற்றது துறவு வாழ்க்கை. இவ்வாழ்வில் எவ்வாழ்க்கையினை மேற்கொள்வதாயினும் அறத்தோடு, பிறர் பழி கூறாத வாழ்க்கையாக அமைய வேண்டும் என்பதையும் நன்கு வலியுறுத்திக் கூறுகின்றார்.

ஊழின் உண்மையை நாம் மறுத்திட இயலாத ஒன்று. ஊழை மறுப்பதால் உலகில் கடவுளை மறுப்பதாகவே கொள்ள வேண்டும். ஊழ்வினை தெய்வீக சக்தியைக் கொண்டது.

''தினை விதைத்தவன் தினையறுப்பான்
வினை விதைத்தவன் வினையறுப்பான்''

என்பது ஊழின் தன்மையினை விளக்கிக் காட்டுகின்றது. இதனால்தான் இறைவன்மீது மிகுந்த பக்தி கொண்டு இறைவனையே வாழ்நாள் முழுதும் பாடிய ''திருநாவுக்கரசர்'' கூட ஊழ் வினையினை எண்ணிப்பாடும் பொழுது இறைவனது அடிமையாகிய என்னை அவ்வினை என் செய்யும் என்று பாடுகின்றார்.

''அல்லல் என்செய்யும்? அருவினை என் செய்யும்?
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செய்யும்?
தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்க்(கு)
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே''
—திருநாவுக்கரசர்—தேவாரம்.

அதேபோல அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்தில் வினையினை அகற்றிட முருகனை நினைந்து நெஞ்சுருகப் பாடுகின்றார்.

''நாளென்செயும்வினை தானென் செயுமெனை நாடி வந்த
கோளென் செயுங்கொடுங்கூற்றென் செய்யுங் குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமும்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே''
அருணகிரிநாதர்—கந்தரலங்காரம்

நல்லவை நினைத்து நல்லவை செய்பவன் நலம்பெற்று வாழ்கின்றான். தீயதை நினைந்து தீயவை செய்பவன் நலிந்து போகின்றான். ''விதை ஒன்றுபோடச் சுரை ஒன்று முளைக்குமா'' என்ற பழமொழியும் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றது.

''வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது''

என்ற குறள், ஊழின் வலிமையினை உணர்த்துகின்றது. ஊழ்வினை தான் கோவலன் இறப்புக்குக் காரணம் என்பதை நாம் சிலப்பதிகாரத்திலே காண்கிறோம். எனவே உள்ளத்தால் வகுத்துச் செயல்படும் எண்ணங்கள் நல்லனவாக அமைந்திடல் வேண்டும்.

நமக்குக் குற்றம் இருக்கின்ற இடம் தெரிகின்றது. அந்தக் குற்றங்களை உருவாக்குகின்ற நம்மை நாம் மறந்து விடுகின்றோம். குற்றம்

நம்மிடம் இருந்தாலும் அதனை மறைத்திட முற்படுகின்றோம். முயன்று பிறர் குற்றம் கண்டு அவற்றைப் பிறரிடம் கூறி நம் குற்றத்தை மறைத்து ஆறுதல் பெற்றிட முயல்கின்றோம்.

பொய் பேசுதல் குற்றம் என்று தெரிகிறது. இருந்தும், உணர்ந்து சுயநல வேட்கைக்காக உள்ளம் கூசாது பொய்யினைப் பேசுகிறோம். அதனையே பிறர் செய்யும்போது சுட்டிக்காட்டி ஏசுகின்றோம். இதனால்தான் நன்னெறிகளைக் குறளிலே கூறும் வள்ளுவர்,

''தன்குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின்
என் குற்றமாகும் இறைக்கு''

என்று கூறி, ''உன்னையே நீ எண்ணிப்பார்'' என்ற சாக்ரடீசின் அறிவுப் புரட்சி தரும் கருத்தினை வலியுறுத்துகின்றார்.

''உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்'' என்றார் திருமூலர். உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள உறவு நீங்குவதே இறப்பாகும். இறந்துபடுவது உடம்பே. ஆனாலும் உயிர்போய் விட்டது என்று கூறுவதே வழக்கம். ஏனெனில் உடம்பு வழியே உயிர் இயங்குகின்றது. உயிர் வாழ இன்றியமையாத் தேவைகள் தண்ணீர், காற்று, உணவு. இவை மூன்றும் இன்றி உயிர் நிலையாது.

உயிர் நிலைத்திருக்க உணவு மிக மிகத் தேவையாகின்றது. மனித உயிரைக் காத்து வளர்க்கும் உணவைக் கிடைத்தது போதும் என்று சுவைத்து உண்டு சுகமடைதல் நன்னெறி ஆகாது.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை''

பகுத்துண்டு வாழ்தலும், பல்லுயிர் ஓம்புதலும் மனிதனின் கடமையாகும். கடமைகளை முறையோடு காலம் கடத்தாது செய்தல் இறைவனது மலரடியைத் தொழுவதற்குச் சமமாகின்றது.

கடமையே சிறந்த நோக்கமாகும். ஏன் என்றால் கடமையும் கடவுளின் கருத்தைத் தழுவியதாக இருக்கின்றது. ஆகவேதான் கடமையை விருப்பத்தோடு செய்பவர்களுக்குக் கடவுள் எப்பொழுதும் உதவியாக இருக்கின்றார்.

உயிர்கள் தம்முடைய கடமைகளை உடனடியாகச் செய்வதாக முடிவெடுத்துக் கொள்வது கடவுள் இதயத்தின் சந்நிதி!

உயிரைப் பேணுகின்ற உணவை அளிப்பது நெறிகளில் எல்லாம் தலை சிறந்த நன்னெறி என்று குறள் கூறுகின்றது. நாமும் அவ்வழி நடப்போம். நன்னெறி வாழ்வில் ஈடுபடுவோம்.



கோவை மாவட்டம் வெள்ள கோவிலில் அருள்மிகு வீரக்குமாரசாமி கோயில் திருப்பணிக்கு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள் கால் கோள் செய்தார்கள், அதுபோது கலந்துகொண்ட பெருமக்கள்.

# மீனாட்சி சுந்தரேசுவரர்

ந. ரா. முருகவேள் எம். ஏ. எம். ஓ. எல்.,

## மீனாட்சி

மதுரையில் உள்ள அம்பிகைக்கு மீனாட்சி அம்மை என்றும், சுவாமிக்குச் சுந்தரேசுவரர் என்றும் பெயர் வழங்கும். மீனாட்சி என்னும் சொல்லுக்கு 'மீன் போன்ற கண்ணையுடையவள்' என்பது பொருள். அட்சம்—கண்; அட்சி—கண்ணையுடையவள். மீனம்—மீன். மீன+அட்சி—மீனாட்சி.

கோழி, தன் முட்டைகளைச் சிறகுகளால் அணைத்து அடைகாத்துக் குஞ்சு பொரிக்கச் செய்து பாதுகாக்கும். ஆமை, கடலில் ஓர் இடத்தில் தான் இட்டு வைத்த முட்டைகளை, அங்கிருந்து நெடுந் தூரம் சென்று விட்ட பின்னரும் மனத்தால் நினைவு கூர்ந்து, அந் நினைவு மாத்திரத்தினாலேயே அம் முட்டைகள் குஞ்சு பொரித்து உயிர் வாழும்படி செய்யும். இங்ஙனமே மீனானது, தான் இட்ட முட்டைகளைத் தனது கண்களினாற் பார்த்து, அப் பார்வையினாலேயே குஞ்சு பொரிக்கச் செய்து காப்பாற்றும்.

''இரங்கிய வாரணம் யாமை மீன்
அண்டம் சினையை
இயல்பினொடும் பரிசித்தும்,
நினைந்தும், பார்த்தும்
பரிந்து இவை தாம் ஆக்குமா
போல், சிவமே ஆக்கும்;
பரிசித்தும் சிந்தித்தும்
பார்த்தும் தானே''

—சிவஞான சித்தியார், 12 : 7.

மீனானது தன் கண்களின் பார்வையினாலேயே தன் முட்டைகளைக் குஞ்சு பொரிக்கச் செய்து காப்பாற்றுதல் போல, உலக அன்னையாகிய அம்பிகையும் தனது திருவருட் கடைக்கண்பார்வையினாலேயே உலகத்திலுள்ள உயிர்த் திரள்களையெல்லாம் பாதுகாத்து வருகின்றாள். ஆதலின், மீனாட்சி (அங்கயற்கண்ணி) என்பது, அம்பிகைக்கு ஒரு பெயர் ஆயிற்று.

''ஒளியால் உலகீன்று உயிர் அனைத்தும்
மீன்போற் செவ்வி யுறநோக்கி
அளியால் வளர்க்கும் அங்கயற்கண்
அன்னே கன்னி அன்னமே!

—பரஞ்சோதி முனிவர்.

மலைவல்லி, கர்ப்பூரவல்லி, அபிராமவல்லி, மாணிக்கவல்லி, மரகதவல்லி முதலிய வேறு பல பெயர்களும், மீனாட்சியம்மைக்கு உண்டு.

## சுந்தரேசுவரர்

சுந்தரம் என்பது அழகு; ஈசுவரர், கடவுள். 'அழகே வடிவமான கடவுள்' சுந்தரேசுவரர் (சுந்தர+ஈசுவரர்) எனப்படுவர். கடவுள் பேரழகு உடையவராதலின், அவருக்குச் 'சுந்தரேசுவரர்' என்பது ஒரு திருநாமம். இப்பெயர் சுந்தரேசர் எனவும் வழங்கப்படும்.

சொக்கு—அழகு. பிறரைச்சொக்க வைக்கும் பேரழகு சொக்கு எனப்படும். எனவே, தமிழிற் சொக்கநாதர் என்பதற்கும், 'சுந்தரேசுவரர்' என்பதற்குப் போலப் 'பேரழகு மிக்கவர்' என்பதே பொருள்.

மதுரையில் மலையத் துவச பாண்டியனின் மகளாகத் தோன்றியருளிய தடாதகைப் பிராட்டியாகிய மீனாட்சியம்மையைச் சுந்தரபாண்டியர் ஆகப் போந்து சிவபெருமான் திருக்கல்யாணம் புரிந்து கொண்டதனால் கல்யாணசுந்தரர் எனப் பெயர் பெற்றார். இயல்பாகச் சுந்தரர் என இருந்த சுந்தரேசுவரர், திருமணம் செய்து கொண்டு மீனாட்சியோடு கூடியதனால் மீனாட்சி சுந்தரேசுவரர் என வழங்கப் பெற்றார்.

## சோமசுந்தரர்

மீனாட்சி சுந்தரேசுவரருக்குச் சோமசுந்தரர் என்றும் பெயர் வழங்கும். சோமசுந்தரர் (சஹ—உமா—சுந்தரர்) என்பதற்கு 'உமையோடு கூடிய அழகர்' என்பது பொருள்.

''இந்தமா இலிங்கத்து எண்நான்கு
இலக்கண இச்சை மேனி
அந்தமில் அழகன், பாகத்து
உமையொடும் அழகு செய்து,
சந்ததம் விளக்கம் செய்யும்
தகைமையை நோக்கிச், சோம
சுந்தரன் என்று, நாமம்
சாத்தினர் துறக்க வாணர்''

கர்ப்பூர சுந்தரர், கடம்பவன சுந்தரர், அபிராம சுந்தரர், சண்பக சுந்தரர், மகுட சுந்தரர், பழியஞ்சு சுந்தரர் முதலிய வேறு பல பெயர்களும், மதுரையில் உள்ள சுவர்மிக்கு வழங்கும்.

புழுகு நெய்ச் சொக்கர், அபிடேகச் சொக்கர், கர்ப்பூரச் சொக்கர், அழகிய சொக்கர், கடம்பவனச் சொக்கர், செந்தமிழ்ச் சொக்கர் முதலிய வேறு பல பெயர்களும் சுந்தரேசுவரருக்கு உண்டு.

# மயிலை கபாலீசுவரர் கோயில்




ஆலயத்தில் ஆண்டவனையும் வழிபடலாம்; அறிவுக்கு விருந்தூட்டும் நூல்களையும் படிக்கலாம்.

ஆலயத்தில் ஆதிபகவனையும் வணங்கலாம்; பச்சிளங் குழந்தைகளுக்குப் பாலும் பெறலாம்.

ஆலயத்தில் கடவுள் வாழ்த்தும் பாடலாம்; கண்ணொளித் திட்டத்திற்கு நிதியுதவியும் பெறலாம்!

இவையெல்லாம் எங்கே பெறலாம்?

சிங்காரச் சென்னையில், சிறந்தோங்கும் திருமயிலையில் விளங்கும் அருள்மிகு கபாலீசுவரர் கோயிலில்தான்!

ஆலயத்தின் கம்பீரமான கோபுர வாயிலினுள் நுழைகிறோம். ஆடவரும், மகளிரும், குழந்தைகளும் வந்த வண்ணமிருக்கின்றனர். தெய்வ மணங் கமழும் இத்திருக்கோயில் துப்புரவாய்க் காட்சியளிக்கிறது. அமைதியான சூழ்நிலையும், நல்ல காற்றோட்டமும் உள்ள இக்கோயிலில் வழிபட வருவோருக்கு வசதிகள் பலவும் செய்திருப்பதைப் பார்த்து மகிழ்கிறோம். மயிலைக் கபாலீசுவரர் கோயில், வரலாற் சிறப்பு மிக்கது. அந்த வரலாற்றைத் தெரிந்து கொள்வோமா?

மயிலாப்பூர்—அன்றும் இன்றும் அழகு கொழிக்கும் பழம்பெரும் நகராகத் திகழ்கிறது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே செல்வம் கொழித்த திருநகராய்த் திகழ்ந்திருந்தது. கி.பி. 1662-ல் ஜான் நையுப் (John Neiuhef) ''மயிலையை அடுத்த சாந்தோம் கிழக்குப் பகுதியில் உள்ள செல்வம் மல்கிய துறைமுகங்களில் ஒன்று'' என்று கூறியுள்ளார்.

கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் மயிலாப்பூர் வருகை புரிந்த ஜான் டீ மரிக் நோலி (John De Marig Noli) என்பார் மயிலாப்பூரின் மயில்களைப் பற்றியும், மயிலாப்பூருக்குச் சீனத்துக் கப்பல்கள் வந்து போன செய்தியினையும் சுவைபடத் தெரிவித்துள்ளார்.

கி.பி. 13 ஆம் நூற்றுண்டில் வெனிஸ் நாட்டிலிருந்து வந்த மார்க்க போலோ (Marco polo) என்ற புகழ் வாய்ந்த பயணி, மயிலாப்பூர் மயில்களுக்குப் பெயர் போனதென்று குறித்துள்ளார். எனவே, மயிலாப்பூர் பண்டை நாட்களில் பன்னாட்டினரும் வந்து குழுமும் ஓர் புகழ் பெற்ற பெரிய துறைமுகமாக விளங்கியது.

பல்லவர் காலத்தில் மாமல்லபுரம் முக்கியத் துறைமுகமாக அமைவதற்கு முன் மயிலாப்பூரே பல்லவர்களின் முக்கியத் துறைமுகமாக விளங்கி இருக்கிறது. காஞ்சியினைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவப் பேரரசர்கள் தங்களை ''மயிலைக் காவலன்'' என்று அழைத்துக் கொண்டு பெருமிதங் கொண்டனர்!

2 ஆம் நூற்றுண்டைச் சார்ந்த டாலமி (Ptolemy) என்பார் மயிலையை ''மயிலார்பன்'' (Mylarphan) என்றுர். 9 ஆம் நூற்றுண்டின் கல்வெட்டிலிருந்து இவ்வூர் ''மயிலார்ப்பு'' என்றும் ''மயிலாப்பில்'' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. ''மயிலாப்பில்'' என்றால் மயில் அகவும் இடம் எனப் பொருள்.

5 ஆம் நூற்றுண்டைச் சார்ந்த திருமழிசை ஆழ்வார் மயிலாப்பூரை ''மாமயிலை'' எனவும், 7ஆம் நூற்றுண்டைச் சார்ந்த ஞானசம்பந்தர் ''மயிலை'' எனவும், ''மயிலாப்பு'' எனவும் குறிப்பிடுகிறுர். நாவுக்கரசரோ இதனை ''மயிலாப்பில்'' என அழைக்கின்றுர். நந்திக் கலம்பகமும்' கலிங்கத்துப் பரணியும் இவ்வூரினை ''மயிலை', என்றே அழைத்து மகிழ்ந்தன. சுந்தரரும் திருமயிலை ஆழ்வாரும், அருணகிரிநாதரும் இவ்வூரை ''மயிலை'' என்றே அழைக்கின்றனர். பெரிய புராணம் கண்ட சேக்கிழார் பெருமானே ''திருமயிலாபுரி'' என இவ்வூருக்குப் பெயர் சூட்டினர்.

மயில் உருவமான உமையம்மை சிவபெருமானை இங்கே வழிபட்டு மயிலுரு நீங்கப் பெற்றதால், இவ்வூருக்கு மயிலாப்பூர் எனப் பெயர் வழங்கலாயிற்று என்பது, புராணம் கூறும் கதையாகும்.

இலக்கியமும், வரலாறும் இவ்வூரில் அழகிய மயில்கள் அகவிய காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டிப் புராணக் கூற்றுக்கு வலிவு தேடுகின்றன.

சேக்கிழார் என்ற வேளாண் குடிக்குப் புகழ்தேடித் தந்தவர்க்குச் ''சேக்கிழார்'' என்று பெயர் சூட்டியது போல, தொல்காப்பியக் குடியில் பிறந்து அக்குடிக்குப் பேரும் புகழும் பெருமையும் சேர்த்தவர்க்குத் 'தொல்காப்பியர்' என்ற பெயரே நிலைத்தது போல, 'வாயிலார்' என்ற வேளாண் குடியில் பிறந்து அக்குடிக்கு அளப்பரும் பெருமையைத் தேடித் தந்த வாயிலார் நாயனர் பிறந்தது, இம்மயிலையிலேயே!

வள்ளுவனை உலகினுக்கும் வான் புகழைத் தமிழ் நாட்டுக்கும் தந்தது திருமயிலைதான்!

அருள் சுரக்கும் ஆழ்வார்கள் பன்னிருவரில் மூன்றுமவராகிய பேயாழ்வாரைப் பெற்றெடுத்து, பாமணக்கும் பாசுரங்களை அருவியாய், ஆறுய், பெருவெள்ளமாய் ஓடச் செய்த பெருமையைப் பெற்றதும் இத்திருமயிலைதான்!

இன்று தனிப் பேரூராய்த் திகழும் திருவல்லிக்கேணி அன்று மாடங்கள் மலிந்த மயிலைப் பேரூரின் ஒரு பகுதியாக இருந்ததென்பது 'தேனமர்சோலை மாடமா மயிலைத் திருவல்லிக் கேணி' என்று பாடிய திருமங்கையாழ்வார் பாசுரத்தில் இருந்து தெரிய வருகிறது. இதனுல் அன்றைய மயிலை இன்றைய திருவல்லிக் கேணிப் பகுதியையும் உள்ளடக்கிய பெரும் பேரூராய்த் திகழ்ந்திருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை.

திருக்கோயில் மேற்கு நோக்கி இருக்கிறது. வாயிலின் முன்புறம் நடுமண்டபத்தோடு கூடிய பெரிய திருக்குளம் பேரழகுடையதாய்க் காணப்படுகிறது. இதுவே 'கபாலி தீர்த்தம்' எனப் படும்.

திருவமிகு சிவலிங்கத் திருமேனியோடு மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறுன், கபாலீச்சுவரன். பெருமானுக்கு வலப்புறம் தெற்கு நோக்கிய தனிக் கோயிலில் ஆட்சி புரிகிறுள் கற்பகத் தாய். பெருமானுக்கு இடப்புறம் உள்ள கோயிலில் மேற்குத் திசையில் மேவி, ஆறுமுகத்தோடு அமர்ந்திருக்கிறுன் சிங்கார வேலன். அன்னை கற்பகத்துக்கு நேர் தெற்கே வாயிலார் நாயனர் கோயில் கொண்டுள்ளார்.

கபாலிப் பெருமானுக்கு எதிரே தலை வாயிலின் வடபுறம் திருஞான சம்பந்தர் பூம்பாவையுடன் இருக்கிறுர். கோவிலின் வடக்கு வெளிச் சுற்றிலே அலுவலகத்துக்கு எதிரே புனிதப் புன்னை மரம் இருக்கிறது. அரச கோபுரமென அழைக்கப்படும் கீழை வாயிலில் கூத்தாடும் பிள்ளையார் காட்சி தருகின்றுர்.

இவ்வூருக்கே பெருமை தரும் திருவிழா அறுபத்து மூவர் காட்சியேயாகும். அன்றைக்குச் சுமார் பத்து இலட்சம் மக்கள் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வருகின்றனர்; இப் பெருவிழாவையொட்டித் திருக்கோயிலினுள் இன்னிசை நிகழ்ச்சிகள், கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமண்டபம் ஆகியவை மக்களுக்குக் கருத்து விருந்து படைக்கின்றன.

இப்பெருவிழாவைத் தவிர வைகாசித் திங்களில் வசந்தத் திருவிழாவும், ஆவணித் திங்களில் பன்னிரு திருமுறைப் பெருந் திருவிழாவும், புரட்டாசித் திங்களில் நவராத்திரித் திருவிழாவும், ஐப்பசித் திங்களில் கந்தர் சஷ்டித் திருவிழாவும், தைப்பூசத்தில் தெப்பத் திருவிழாவும், மாசித் திங்களில் கடலாட்டுத் திருவிழாவும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

திருக்கோயில் ஆற்றிவரும் திருப்பணிகள் பல. அவை :

1. ஆண்டுதோறும் திருமுறை விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவது.



அறுபத்துமூவர் திருவிழாக் காட்சி

2. ஒவ்வோர் ஆங்கில மாதமும் மூன்றும் ஞாயிற்றுக்கிழமை காலை, மாலை இரு வேளையும் தேவாரம் மற்றும் திருமுறைப் பண்ணிசை ஓதுவா மூர்த்திகளைக் கொண்டு நிகழ்த்தி வருவது.

3. தேவார பள்ளி ஆகமப் பள்ளி நடத்துவது.

4. திருமணங்கள் நடத்திக் கொள்வதற்காகக் கபாலீசுவரர் திருமண மண்டபம் கட்டியிருப்பது.

5. குளிர்ந்த குடிநீர் வசதி செய்யப்பட்டிருப்பது.

6. சுவாமி அம்மன் சன்னிதிகளில் விரைவில் குளிர்காற்று வசதி பொருத்தப்பட இருப்பது.

7. விநாயகர், சிங்காரவேலர், சனீசுவரர், நவக்கிரகம் ஆகிய நான்கு சன்னிதிகளிலும் சலவைக் கல் பதிக்கப்பட்டிருப்பது. விரைவில் மற்றச் சன்னிதிகளுக்கும் அமைக்கப்படவிருப்பது.

8. தெய்வீக வண்ண ஓவியங்கள் கண்ணாடிச் சட்டமிட்டுக் கண்ணைக் கவரும் வண்ணம் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருப்பது.

9. கோயிற் சுற்றில் கருங்கல் தள வரிசை போடப்பட்டு வருவது.

10. பொதுமக்கள் நலனுக்காகப் பிரசாதங்கள் விற்பனை நிலையம் அமைத்திருப்பது.

11. ஆலய வருவாயினைப் பெருக்க அருச்சனைகளுக்குக் கட்டணங்கள் வசூலித்து வருவது.

12. கோயிற் சுற்றில் அதிக ஒளி உமிழ் மின் விளக்குகள் பொருத்தியிருப்பது.

13. கண்ணைக் கவரும் கட்டடங்கள் கட்டி வாடகைக்கு விட்டு வருவாயைப் பெருக்குவது.

14. வசதியற்றோர்க்கு இலவசமாகத் திருமணங்கள் செய்துவைப்பது.

15. திருப்பணி செய்து, திருக்குடமுழுக்கு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருவது.

பொதுவாக ஆலயங்கள் வெறும் வழிபடும் இடங்களாக மட்டுமில்லாமல், பல்வேறு பொதுப் பணிகளையும் செவ்வனே ஆற்றிவருகின்றன. தமிழகத்திலுள்ள பல திருக்கோயில்கள் இது போன்ற திருப்பணிகள் பலவற்றைச் செய்து வருகின்றன.

# Sakthi Sugars Limited

*MANUFACTURERS OF :*

**BEST QUALITY WHITE SUGAR**

**and**

**SAKTHI HYBRID SORGHUM**

**and**

**BAJRA SEEDS**

FACTORY:

**SAKTHI NAGAR P.O.,**

BHAVANI TALUK,

ERODE R.M.S.

REGD. OFFICE:

**"GREEN LANDS"**

8/28, RACE COURSE ROAD,

COIMBATORE-6410118.

'மக்கள் பணியே மகேசன் பணி' என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் ஆலயத் திருப்பணிகள் இன்று விரிவடைந்து வருகின்றன.

சென்னை மயிலைக் கபாலீசுவரர் கோயில், ஏழை எளியவர்களுக்கு இலவசத் திருமணங்களை நடத்தி வருகின்றது. இதற்காக ஆண்டுதோறும் ரூ. 5,000 செலவிடுகிறது. ஒரு திருமணத்துக்காகும் செலவு சுமார் ரூ. 200. புடவை, வேட்டி, திருமாங்கல்யம் முதலியன மணமக்களுக்கு வழங்கப்படுகிறது.

தீ விபத்துக்களின்போது பாதிக்கப்படும் ஏழை மக்களுக்கு இவ்வாலயத்தின் சார்பில் நூற்றுக்கணக்கான வேட்டி, புடவைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்திற்காகவும், கண்ணொளி வழங்கும் திட்டத்திற்காகவும், இவ்வாலயத்தின் சார்பில் சுமார் ரூ.20,000 நன்கொடை வழங்கப்பட்டுள்ளதையும் இங்குக் குறிப்பிட வேண்டும். இவ்வாண்டு ஊனமுற்றவர்களுக்காகவும் ஒரு கணிசமான தொகை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் நோக்கோடு பல அரிய செயல்களைச் செய்து வருகின்றது இத் திருக்கோயில்.

நாள்தோறும் சுமார் 25 குழந்தைகளுக்கு, இந்த ஆலயத்திலேயே பால் வழங்கப்படுகிறது. சிறுவர், சிறுமியர், பெரியவர் ஆகியோர் குழந்தைகளுக்காகப் பால் பெற, வரிசையாக நிற்கும் காட்சியை இங்கே அன்றாடம் பார்க்கலாம்.

இத் திருக்கோயில் ஒரு புதிய திட்டத்தையும் செயல்படுத்தி வருகின்றது. அதுதான் 'பிடி அரிசித் திட்டம்'. கோயிலுக்கு வருகிறவர்கள் இங்கே உள்ள ஒரு பெரிய உண்டியலில் பிடி அரிசியைப் போடுகின்றனர். இந்த அரிசியைக்கொண்டு வாரத்துக்கு இரண்டு நாள் அதாவது திங்கள், வெள்ளிக் கிழமைகளில் 50 ஏழைகளுக்குச் சுவையான உணவு வழங்கப்படுகிறது, 10 காசுக்கு!

கடந்த 9 ஆண்டுகளாக இங்குத் தேவாரப் பள்ளி ஒன்று மிகச் சிறப்பாக நடந்து வருகிறது. சிறுவர், சிறுமிகள் பலர் இப்பள்ளியில், ஒரு ஆசிரியரின் துணையோடு தேவார இசைப் பயிற்சி பெறுகின்றனர். இப் பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்கு இலவச உணவு, உடை வழங்கப்படுகிறது.

குறைந்த வாடகையில் நல்ல வீடுகளை வழங்கும் நோக்கத்துடன் இரு காலனிகள் உருவாக்கப்பட்டுள்ளன. கபாலீசுவரர் நகர், வாயிலார் நாயனுர் நகர் என்னும் நகர்களில் உள்ள இல்லங்களில் பலர் குடிவந்துள்ளனர்.

ஆலயத்துக்குள்ளே அழகிய நூலகம் ஒன்றிருக்கிறது. சுமார் 5,000 நூல்கள் உள்ள இந்த நூலகம் மாணவர்களுக்கும், பெரியவர்களுக்கும் பெரிதும் பயன்பட்டு வருகின்றது. காலையும், மாலையும் இங்கு அறிவு விருந்து பெறலாம்.

கோயில் வருமானத்தைப் பொறுத்தே அதன் செயல் திட்டங்கள் அமையும் அல்லவா? சில கோயில்கள் உண்டியல் வருமானத்தைக் கொண்டு செயலாற்றுகின்றன; ஆனுல் இத்திருக் கோயிலோ வீடுகள் மூலமாக வருமானத்தைப் பெறுகின்றன. இக்கோயிலுக்குச் சொந்தமாக 125 வீடுகள் இருக்கின்றன. இவையன்றி ரூ. 6 இலட்சம் செலவில் ஒரு அங்காடி ஒன்றையும் கட்டத் திட்டமிட்டு, இப்போது அதற்கான அடிக்கல் போடப்பட்டிருக்கிறது.

இந்த ஆலயத்தின் சார்பில் அனுதை இல்லம் ஒன்றை அமைக்கவும் திட்டமிருக்கிறது. முதலில் 15 குழந்தைகள் இவ்வில்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அவர்களுக்குப் படிக்க வசதி, இலவச உணவு, உடை முதலிய எல்லா வசதிகளும் வழங்கப்படும். இந்த இல்லம் விரைவில் துவக்கப்படவிருக்கிறது.

இத் திருக்கோயிலின் சார்பில் ரூ. 10 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள கற்பகாம்பாள் திருமண மண்டபம் நிறைந்த வசதிகளுடன் திகழ்கிறது.

இந்த ஆலயத்துக்கு ஒரு நாளைக்குச் சுமார் 10 மேலை நாடுகளைச் சேர்ந்த பயணிகள் வருகை புரிகின்றனர். வெளி நாட்டுப் பயணிகளுக்கு உதவியாக இக்கோயிலின் சார்பில் ஒரு வழிகாட்டியும் உள்ளார். ரஷியா, இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, நேபாளம் முதலிய நாடுகளிலுள்ள பயணிகளை இக்கோயில் வெகுவாகக் கவர்ந்துள்ளது.

கோயிலில் தமிழ் அர்ச்சனையும், அபிராமி அந்தாதியும் சலவைக் கற்களில் அழகாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

இன்னெரு நல்ல காரியத்தையும் இக் கோயில் செய்து வருகிறது. போதிய நிதி வசதி இல்லாத மற்ற கோயில்களுக்கு இது நிதி உதவி அளித்து வருகிறது. இதற்காக ஒரு ஆண்டிற்கு ரூ. 10,000 ஒதுக்கி எல்லாவற்றுக்கும் பகிர்ந்து அளிக்கிறது.

இவ்வாறு மக்கள் பணியில் அக்கறையும், ஆர்வமும் கொண்டு ஆலயத்தின் சார்பில் அரும்பணியாற்றத் துணை நிற்பவர்கள் நிருவாக அலுவலரும் உதவி ஆணையருமான திரு. த. நாகராசன், அறங்காவலர்கள் திருவாளர்கள்: திரு. சி. செல்வநடராச முதலியார், டி. பாலகிருட்டிணன், ஆர். கோதண்டராமன், எஸ். ஜெயராமன், ஜி. குசேலர் ஆகியோர் பாராட்டுக்குரியராவர்.

சமுதாயம் வளமும் நலமும் பெற்றிட, ஒவ்வொருவரும் தம்மாலான உதவிகளைச் செய்திட முன்வருதல் வேண்டும். சிறு துளி பெரு வெள்ளம் என்பதுபோல ஒவ்வொருவர் செய்யும் சிறு உதவியும் பல்கிப் பெருகிப் பயன் பெறச் செய்யும் அல்லவா? இந்த வகையில் பணியாற்றும் ஆலயங்களை நோக்கி இருகரம் கூப்பி வணங்குவோம்.

**நன்றி: தமிழரசு**

# அருள்மிகு

# சுவாமிநாதசுவாமி

# திருக்கோயில்

சுவாமிமலை,

தஞ்சை மாவட்டம்.

அருள்மிகு சுவாமிநாதப் பெருமானுக்கு சென்ற 7—6—73-ல் கோடி அர்ச்சனை ஆரம்பிக்கப் பெற்று, வருகின்ற 27—8—74-ந் தேதி அன்று பூர்த்தி ஆகலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது. இதுவரை கோடி அர்ச்சனையில் பங்கு பெருத அன்பர்கள் விரைந்து பங்கு பெற்று ''வேண்டுவனவெல்லாம் பூர்த்தி செய்து கொடுக்கும் கலியுகத்தின் கண்கண்ட தெய்வம்'' அருள்மிகு சுவாமிநாதப் பெருமான் அருள் பெற வேண்டுகின்ருேம்.

அர்ச்சனை ஒன்றுக்கு ரூ. 15/-. அர்ச்சனைப் பிரசாதத்துடன் அருள்மிகு சுவாமிநாதப் பெருமான் திருவுருவம் பொறித்த வெள்ளிக் காசு ஒன்றும் வழங்கப்படுகின்றது. கோடி அர்ச்சனையின் வருவாயிலும், பக்தர்களின் நன்கொடையிலும், அருள்மிகு சுவாமிநாத சுவாமிக்கு வைர, இரத்தின ஹஸ்தம் தயாரிக்கப்படவுள்ளது.


நேரில் அர்ச்சனையில் பங்கு பெற விரும்புகிறவர்கள் முன் கூட்டியே எழுதினல் தங்கும் வசதி செய்து தரப்படும். வர இயலாதவர்களுக்குத் தபால் மூலம் பிரசாதம் அனுப்பிவைக்கப் படும்.

**எஸ். கோவிந்தசாமி பிள்ளை,**
**எஸ். சுவாமிநாதன்,**
**ஜி. முருகேசன்,**
**ஏ. சிதம்பரம்**
அறங்காவலர்கள்.

**டி. எஸ். சுவாமிநாத உடையார்,**
அறங்காவலர் குழுத் தலைவர்.

**எஸ். மகாலிங்கம், பி.எஸ்ஸி.,**
செயல் அலுவலர்.

# மதுரைக் கோயில் குடமுழக்கு விழா



அறங்காவலர் குழுத் தலைவர் திரு

லெ. நாராயணன் செட்டியார்

மதுரைத் திருக்கோயில் மிகப் பழங்காலந் தொட்டே பெருஞ் சிறப்பு வாய்ந்தது. பாண்டிய மன்னர்களின் புகழ் மிகுந்த ஆட்சிக் காலத்தில், இதனைத் தமிழின் உறைவிடமாகவும், சங்கத்தின் தங்கத் தொட்டிலாகவும், பக்தியின் தாயகமாகவும் பேணிக் காத்தனர். உலகப் பொது மறையாம் திருக்குறள் அரங்கேறிய இடமும் இத்திருக்கோயிலில் உள்ள பொற்றாமரைக் குளத்தில்தான் உள்ளது. சுற்றிலும் அமைந்த நாற்புற வீதிகள் தாமரை இதழ்கள் போலவும், நடுவே பொலிவுடைய திருக்கோயிலும் அமைந்திருந்த காட்சி அதன் நடுவே இருந்த பொகுட்டுப் போலவும் இருந்ததாக மதுரைக் காஞ்சியின் ஆசிரியர் மாங்குடி மருதனர் பாடியுள்ளார்.

இடைக்காலத்தில் இத்திருக்கோயில், சைவத்தின் திகழிடமாக இலங்கிற்று. ஆலவாய் என்ற பெயரால் இதனைத் தேவார மூவர் பாடியருளினர். மாணிக்கவாசகர் பொருட்டு மண் சுமந்த திருவிளையாடலையும் இங்கே தான் இறைவன் நிகழ்த்தினர். ஞானசம்பந்தப் பெருமான் இக்கோயிலை வழிபட்டுச் சமண இருள் நீக்கிச் சைவ ஒளி பரவச் செய்தார். பிற்காலத்தே மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள் இக்கோயிலை மிகப் பெரியதாக்கிப் பற்பல திருப்பணிகளை மேற்கொண்டனர். ஊருக்குக் கிழக்கே மிகப் பெரிய மாரியம்மன் தெப்பக் குளத்தையும், கோயிலின் முன்பு கலைச் செல்வங்கள் நிறைந்த புது மண்டபத்தையும் செப்பமுற அமைத்தனர். கோயில் விமானங்களுக்கும் பொன் வேய்ந்தனர். திருவிழாக்களை அமைத்து நிவந்தங்களும் அளித்தனர்.

திங்கள்தோறும் திருவிழா நடைபெறும் திருக்கோயில் இதுபோல் எங்குமில்லை. ஆவணி மூல விழாவில், இறைவனது திருவிளையாடல்களை இன்றும் நடத்தி வருவதும், சித்திரைத் திருவிழாவைச், சைவ—வைணவ ஒருமைப்பாட்டு முத்திரைத் திருவிழாவாகக் கொண்டாடுவதும் இவ்வூரின் தனிச் சிறப்பு.

தருமிக்குப் பொற்கிழி அளிக்க இறைவன் தோன்றி நடந்த மண் இந்த மண். இந்நிலையை இன்றும் உயிர்ப்பிக்கக் கருதி, அருள்மிகு மீனுட்சியம்மை மீது அருங் கவிதையாக்கும் போட்டியொன்றை அறிவித்து, வரப்பெற்ற கவிதைகளைப் பார்வையிட்டுச் சிறந்தவற்றைத் தேர்ந்துள்ளனர். பரிசு பெற்ற கவிஞர்க்குப் பொற்கிழிக் கவிஞர் என்ற பட்டமும், முறையே 1,001, 501, 201 பொற்காசுகளும் அளிக்க இருக்கின்றனர்.

பின்னர் நகரத்தார் பெருமக்கள் குறிப்பாக வயிநாகரம் குடும்பத்தினர் இக்கோயிலில் வடக்குக் கோபுரப் பணியும், தளங்களில் கல்பரப்பும் பணியும், திருக்கல்யாண மண்டபம் எழுப்பியும், மதிலையொட்டி நந்தவனம் அமைத்தும் பெரும் பொருட் செலவில் அரும் பணி செய்தனர். 1963ஆம் ஆண்டு தமிழவேள் பி.டி. இராசன் அவர்கள் தலைமையில் அமைந்த குழு சிறப்பாகக் குடமுழுக்கு விழாவினைச் செய்தது.

## திருக்கோயில் இயங்கும் முறை:

தமிழர் நாகரிகத்தினையும், பண்பாட்டினையும் கட்டிக் காப்பதற்காக நமது முன்னேரால் வேத விதிகளின் அடிப்படையில் ஆகம நன்னூல்களின் முறைப்படி எழுப்பப்பெற்று இயங்கி வருவது இத் திருக்கோயில்.

தென்னகத்திலேயே மிகப் பெரிய இத் திருக்கோயிலின் நிருவாகப் பொறுப்பு அறங்காவல் குழுவினிடத்திலும், இந்து அறநிலைய அமைச்சிடமும், ஆணையர், துணை ஆணையர் தொடக்கத்தவராகிய பொறுப்பாளர்களிடமும் ஒப்படைக்கப் பெற்றுள்ளது. இத்தன்மையே இதன் சீரான இயங்கு முறைக்கு அடிப்படைக் காரணமாக இயங்குகின்றது.

## வழிகாட்டிப் பயிற்சி:

வழிகாட்டிகள் இன்றியமையாதவர் என்பதைக் கருத்தில் கொண்டு பல துறைகளில் ஈடுபட்டுள்ள சுமார் 120 பேர்களுக்கு (வேலையில் இருப்பவர்கள், ஆசிரியர்கள், பட்டதாரிகள், மாணவர்கள்) பேரறிஞர்களைக் கொண்டு பயிற்சி (Tourist Guide)—வழிகாட்டிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது.

**அறங்காவலர் குழு :**

தலைவர் ஒருவர் உள்ளிட்ட ஐந்து உறுப்பினர் கொண்ட அறங்காவலர் குழு இக்கோயிலை நிருவகிப்பதில் கருத்துடன் இயங்கி வருகின்றது. மாதத்திற்கு ஒரு முறை அறங்காவலர் குழுவினர் கூடித் திருக்கோயிலின் நடைமுறைகளுக்கான திருத்தங்களையும் மாற்றங்களையும் ஆற்றி வருகின்றனர்.

**நிர்வாகம் :**

கோயிலின் அன்றாடப் பணிகளை நிர்வாக அதிகாரி அவர்கள் ஆற்றி வருகின்றார்கள். கோயிற் பணியாளர்களை மேற்பார்த்தல், திருச்சுற்றுக்களையும் திருக்கோயிலையும் தூய்மையாக வைத்திருக்கச் செய்தல், போக்கும் வரவுமிலாப் புண்ணியனின் திருக்கோயில் வரவு செலவுக் கணக்குகளைப் பாதுகாத்தல், நந்தவனம் பேணிக் காத்தல் முதலிய அனைத்துப் பணிகளும் இவரால் செவ்வனே இயற்றப் பெறுகின்றன.

**நித்திய வழிபாடு :**

திருக்கோயில்களில் நித்தமும் வழிபாடு சிறப்புற நடக்க மிகப் பழமையான நெறிமுறைகள் கையாளப் படுகின்றன. பக்தர்களின் மன ஆறுதலுக்குக் காரணமாம் நமது இறைவி திருக்கோயிலில் ஆறு கால பூசையும் வேறு வேறு சிறப்புடன் நடைபெறுகின்றன. திருவனந்தல், காலசந்தி, திரிகாலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என்ற ஆறுகால பூசையும், பள்ளியறை என்ற நிறைவுப் பூசனையும் இங்கு நித்தலும் நிகழ்கின்றன.

**தோன்றுபடு நன்னெறி :**

திருக்கோயில்களைக் கட்டும் முறைகளும், தெய்வத் திருமேனிகளைப் பிரதிட்டை செய்யும் நெறிகளும், வழிபாட்டு நிலைகளை வகுக்கும் வழிகளும், என்று தோன்றியதென உணரமுடியாத இயல்பிற்றாய வேதங்களையும், ஆகமங்களையும் அடிப்படையாகக் கொண்டே நிகழ்வன. நீள நின்று, நினைந்து பார்த்து, மூலப் பொருளாம் உண்மையை ஓர்ந்து கடைப்பிடிப்பதே, நமக்கே உரிய சமயமும் பண்பாடும்பொலிவுற்றுத் திகழச் சிறந்த வழி. இந் நன்னெறியில் நாம் நின்று வழிபட உறுதி கொள்ள வேண்டும்.

**திருமுழுக்குப் பெருவிழா :**

பன்னிரண்டாண்டிற்கு ஒரு முறை திருமுழுக்குப் பெருவிழா நிகழ்த்த வேண்டுவது ஆகம விதி. பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய்ப் பொலிவு தரும் இறைவனது பழம் பெருங் கோயிலைப் புனைந்து புதுமையாக்கும் பணி முற்றிலும் ஏற்புடையது. இப் பணியில் ஈடுபடுத்திய இறையருளை இறைஞ்சுவன். நம்மைச் சுற்றிலும் நிற்கும் எல்லாப் பிணிகளும் அகல, நன்மையும் வளமும் சுரக்க, இன்பமும் எழிலும் எங்கணும் தங்க, எங்கள் தாய் அங்கயற்கண்ணியும், ஆலவாய்ச் சொக்கரும் அருள் தருவாராக!

158595
சென்னை-600 0

H. R. & C. E.
**BOOKS AND FORMS**
and all Account Books for Business Concerns
readily available with us at all times.

**இந்து சமய அறநிலைய ஆலயங்களுக்குத்**
தேவையான
எல்லாவித (H.R. & C.E.) கணக்கு புத்தகங்களும், நமூனாக்களும்,
வியாபாரிகளுக்கு வேண்டிய சிட்டா, குறிப்பு, பேரேடு
வகைகளும் உயர்தரக் காகிதத்தில் தயார் செய்தவை கிடைக்குமிடம்:-

**G. G. சீதாராம் ஏஜன்ஸீஸ்,**
நெ. 3-B/8, எல்டாம்ஸ் ரோடு, (Eldams Road - near Post Office)
தேனாம்பேட்டை, சென்னை-18.

வேலை நேரம் : 9 A. M. to 1 P. M. — 3 P. M. to 7 P. M.

வெளியூரில் இருந்து ஆர்டர்கள் அனுப்புவோர், தயவு செய்து அருகாமையில் உள்ள
T.V.S. லாரி அல்லது ரயில்வே நிலையப் பெயர் குறித்து அனுப்பவும்.

# அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி

| தரிசனம் | சாதாரண நாட்களில் ரூ. | திருவிழாக் காலங்களில் ரூ. |
|---|---|---|
| மலைக்கோயில் : பூசை வகையறுக்களுக்கு | | |
| **நுழைவு :** | | |
| 1. நுழைவு (அர்த்த மண்டபத்திற்கு அருகில்) நபர் 1-க்கு ... | 1.00 | 1.00 |
| 2. சிறப்பு அனுமதி (அர்த்த மண்டபம் அருகே) ... | 10.00 | 10.00 |
| 3. விழாப் பூசை ... ... ... | 2.00 | 2.00 |
| 4. உச்சிக் காலம் ... ... ... ... | 2.00 | 2.00 |
| 5. சாயரட்சை ... ... ... ... | 2.00 | 2.00 |
| 6. இராக்காலம் ... ... ... ... | 2.00 | 2.00 |
| **அபிடேகம் :** | | |
| 1. பஞ்சாமிர்த அபிடேகம் (பால் உள்பட) ... ... | 10.00 | 10.00 |
| 2. பால் அபிடேகம் .. ... ... | 2.25 | 2.25 |
| 3. தீர்த்தம் ... ... ... ... | 1.50 | 1.50 |
| **அர்ச்சனை :** | | |
| 1. அஷ்டோத்திரம் ... ... ... ... | 1.00 | 1.00 |
| 2. சகஸ்ரநாமம் ... ... ... ... | 1.50 | 1.50 |
| 3. தீபாராதனை (சூடம் உள்பட) ... ... ... | 0.25 | 0.25 |
| **அலங்காரம் :** | | |
| 1. இராஜ அலங்காரம் ... ... ... | 10.00 | 10.00 |
| 2. வேட அலங்காரம் ... .... ... | 10.00 | 10.00 |
| 3. தங்கக் கவசம் ... ... ... ... | 250.00 | 250.00 |
| **இதர இனங்கள் :** | | |
| 1. காவடிக் காணிக்கை ... ... ... | 1.00 | 1.00 |
| 2. காது குத்து ... ... ... ... | 1.00 | 1.00 |
| 3. பள்ளியறை தீவட்டி ... ... ... | 3.00 | 3.00 |
| 4. பள்ளியறை வெண்சாமரம் ... ... ... | 1.00 | 1.00 |
| 5. அபிடேக பஞ்சாமிர்தம் (கிலோ 1-க்கு) ... ... | 4.00 | 4.00 |
| 6. ஆண்டவரைத் தங்க ரதத்தில் புறப்பாடு செய்ய ... | 750.00 | 750.00 |
| 7. ஆண்டவரைத் தங்க மயில் வாகனத்தில் புறப்பாடு செய்ய | 200.00 | 200.00 |
| 8. முடி காணிக்கை ... ... ... ... | 1.25 | 1.25 |

தங்கும் வசதிகளுக்குத் திருக்கோயில் சத்திரம், தண்டபாணி நிலையம் ஆகிய இரு இடங்களில் வசதி மிக்க அறைகள் சேவார்த்திகளுக்குக் குறைந்த வாடகையில் கிடைக்கும்.

வி. எஸ். கோதண்டபாணி, B.SC., B.L.,
துணை ஆணையர்—நிர்வாக அதிகாரி

சென்னை திருவல்லிக்கேணி

# அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில் திருப்பணி

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருப்பதிகளில், திருவல்லிக்கேணிக்குத் தனிச் சிறப்பும் பெருமையும் உண்டு. தொண்டைமான் என்னும் பழந்தமிழ் மன்னனின் வேண்டு கோளுக்கு இணங்கி, திருவேங்கடமுடையான் கண்ணபிரானாக உருக்குமினிப் பிராட்டியாருடன், அநிருத்தன், ப்ரத்தியும்னன், பலராமன், சாத்ததி ஆகிய தன் குடும்பத்தாருடன் சேவை சாதித்து அருள் புரிந்த தலம்.

இவ்வளவு சிறப்புமிக்க இத்திருக்கோயிலிலுள்ள இராசகோபுரம், ஆனந்த விமானம், கஜேந் திரவரதர், ஆண்டாள், திருமழிசை ஆழ்வார், ஆளவந்தார், உடையவர், மணவாளமாமுனிகள் விமானங்கள், நரசிம்ம சுவாமி ராஜகோபுரம் முதலியவற்றிற்குத் திருப்பணிகள் வேலை செய்ய சுமார் 2 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டு, திருப்பணி வேலைகள் நடைபெற்று வரு கிறது. இதற்கு முன் இத்திருக்கோயிலில் 1936-ல் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு மகா சம்ரோட்சணம் நடைபெற்றுள்ளது. திருப்பணி நன்கொடைக்கு வருமான வரி விலக்கு உண்டு. மேலும் ஆயிரம் ரூபா நன்கொடை அளிக்கும் அன்பர்கள் பெயரை சலவைக் கல்லில் பொறிக்கப் படும்.

ஆகவே இதைக் காணும் அன்பர்கள், அருள்மிகு பார்த்தசாரதியின் திருவருளுக்குப் பாத்திர மாகித் தங்கள் வாழ்க்கை ரதத்தைச் செவ்வனே ஓட்ட கீழ்க்கண்ட முகவரிக்கு நன்கொடை அனுப்பி மகிழலாம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி :

**நிருவாக அதிகாரி**

அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில்,

திருவல்லிக்கேணி, சென்னை-600005.

**பி. ஜி. செங்கல்வராய செட்டி,**
தலைவர், அறங்காவலர் குழு,

**கே. ஆர். சின்வாசாசாரி,**
**நாதெள்ள ஆதிகேஸவுலு குப்தா,**
அறங்காவலர்கள்.

**எஸ். சோமசுந்தரம், பி.ஏ., பி.எல்.,**
நிருவாக அதிகாரி.



வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.